the S. S. L. C. Examination 1936. (Group A)

1958

# DURGAVATI
## THE
# MAHARANI OF MUNDEL

BY

E. N. MARAGADAVELU MUDALIAR, B.A.

K. PALANIANDI PILLAI & CO.
EDUCATIONAL PUBLISHERS
GEORGE TOWN : : MADRAS.

# துர்க்காவதி

## மண்டல நாட்டு மகாராணி

இது,

இ. நா. மரகதவேலு முதலியார், பி. ஏ.,

எழுதியது.

கே. பழனியாண்டிப் பிள்ளை கம்பெனி

ஜார்ஜ் டவுன் : : சென்னை.

1935

பதிப்புரிமை] [விலை அணா $8\frac{1}{2}$

**Approved by the Text Book-Committee.**

*Vide Fort St. George Gazette Page 630.*
*Dated 15th November, 1932.*

The Liberty Press, G. T. Madras.

# PREFACE

This book is the first of the "*Women of Worth*" series; and my object in bringing out this series is to give a vivid and clear picture of the life and times of many a notable woman that shaped the destinies of nations, to record deeds which should not pass away unnoticed and to teach by lofty examples what to avoid and what to admire.

Durgavati, the heroine is the unique example of an ideal Hindu woman possessing the proverbial four-fold qualities of *Accham*, *Matam*, *Nanum* and *Payirpu* developed, by force of circumstances, into one of such great military prowess as to oppose unaided and without the least hesitation, her invincible Moghul enemy, Akbar the Great, who was equipped with all the necessary and powerful weapons of warfare and with other enormous resources.

The style adopted in this book is simple and elegant and can be easily copied by pupils of High School classes.

NAGA VILAS,
*1st August, 1932.*

**E. N. M.**

# பொருளடக்கம்

| அத்தியாயம் | | | | பக்கம் |
|---|---|---|---|---|
| 1. | தோற்றுவாய் | ... | ... | 1 |
| 2. | மண்டலத்தின் பழைய வரலாறு | | ... | 3 |
| 3. | வீரத்தின் வெகுமதி | ... | ... | 12 |
| 4. | சந்தல வமிசத்தார் வரலாறு | ... | ... | 19 |
| 5. | துர்க்காவதியின் மணம் | ... | ... | 26 |
| 6. | இல்லற இன்ப முடிவு | ... | ... | 33 |
| 7. | துர்க்காவதியின் அரசாட்சிச் சிறப்பு | | ... | 38 |
| 8. | அக்பரின் சூழ்ச்சி | ... | ... | 46 |
| 9. | இராணியின் கலக்கம் | ... | ... | 53 |
| 10. | ஆதூர் தூது செல்லல் | ... | ... | 61 |
| 11. | மந்திராலோசனை | ... | ... | 68 |
| 12. | பாதுஷாவின் படையெழுச்சி | ... | ... | 74 |
| 13. | கூர் மண்டலக் கொள்ளை | ... | ... | 89 |
| 14. | துர்க்காவதிக்கும் ஸெனோபியாவுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள் | | ... | 93 |
| 15. | துர்க்காவதியின் வழியினர் | ... | ... | 100 |

# துர்க்காவதி

## மண்டல நாட்டு மகாராணி

### 1. தோற்றுவாய்

பரதகண்டமென வழங்கிவரும் நமது நாட்டில், பண்டைக் காலத்திற் பல இடங்கள் காடடர்ந்திருந்தன ; அவற்றுள், தக்காணத்திற்கும் இந்துஸ்தானத்திற்கும் இடையிலுள்ளதும், இப்போது மத்திய மாகாணங்கள் (Central Provinces) என வழங்கப்படுவதுமான நிலப்பகுதி சிறந்ததென்பர். அப்பகுதியில் மரங்கள் அடர்ந்த காடுகளும், குறவரும் மருளுங் குன்றங்களும் பரந்திருந்தன. கொழுத்துப் பருத்த விலங்குகளும், பன்னிறச் சிறகுகள் வாய்ந்த அழகிய பறவைகளும், வானரங்களும் அங்குச்சிறிதும் அச்சமின்றி வாழ்ந்து வந்தன ; அவ்விடத்திலிருந்த மர நிழலிலும், மலை முழைகளிலும் (Mountain Caves) காண்ட்ஸ், பீலரென்னும் பெயருள்ள சாதியார் வாழ்ந்து வந்தனர். அக்காலத்தில், நாற்றிசைகளிலும் இயற்கை அரண்கள் அமைந்திருந்த அந்நிலப் பகுதியுள் வடதிசையிலிருந்தும் தென்திசையிலிருந்தும் எவரும் புகுதல் இயலாது ; அதனால், காட்டரண் முதலிய சூழ்ந்த அந்நாடு, அமைதி குலையாது நாளுக்குநாள் பல துறைகளிலும் வளர்ச்சி அடைந்து வந்தது. அந்நாட்டுக் குடிகளும், சீரும் சிறப்புமுற்று, நாகரிகத்தில் மேம்பாடுற்றார்கள்.

காட்டையுடைய அங்கிலப்பகுதிக்கு வடபாலுள்ள இந்துஸ்தானத்திலும், தென்பாலுள்ள தக்காணத்திலும் அவ்வப்போது பல இராச்சியங்கள் தோன்றி உயர்நிலை பெற்று, சில காலத்தின் பின்னர் அழிந்தன. வடக்கே மௌரிய சுங்க கண்வ குப்த வமிசத்தாரும், தெற்கே ஆந்திர சாளுக்கிய வழியினரும் முறையே ஏகாதிபத்தியம் செலுத்தி மிக்க புகழுடன் அரசியல் நடத்தி வந்தனர்; ஆயினும், இவ்வழியாருள் ஒருவராகிலும் மேற்கூறிய காட்டுப் பகுதிக்குள் புகுந்து அதைக் கைப்பற்ற முயலவே இல்லை.

ஆனால், ஒரு முறை (அஃதாவது கி. பி. 612), இந்நாட்டிற்கு அணிமையில், ஆந்திரருக்குப் பிறகு தக்காணத்தில் உயர்நிலையடைந்திருந்த சாளுக்கியர், சிறந்த வீரராகிய ஹர்ஷ வர்த்தனரை நருமதையாற்றங் கரையில் முறியடித்துத் துரத்தினர். அவ்விரு திறத்தாருக்கும் நிகழ்ந்த போரின் எதிரொலி மத்திய மாகாண வாசிகள் காதில் விழுந்துமிருக்கலாம். கால சக்கரங் காட்டிய வழியிற் பின்னர் நூற்றாண்டுகள் பல கழிந்தன.

மத்திய மாகாணக் காட்டுச் சாதியார், கால மாறுதலுக்கு ஏற்ப நாகரிகமடைந்து வந்தனர்; அங்குப் பல சிறு இராச்சியங்கள் தோன்றின. ஒவ்வொரு ராஜ்யமும் ஒவ்வொரு தலைவன் ஆளுகையில் அடங்கி இருந்தது. நாளடைவில், அத்தலைவர்களுள் சச்சரவு நேராதபடி காக்க, தங்களுள் சிறந்தவன் ஒருவனுக்குத் தாம் அடங்கி நடக்க ஒப்பந்தம் செய்துகொண்டனர். அப்படிப்பட்ட பெரிய தலைவருள் கூர் மண்டலத்தை ஆண்ட அரச பரம்பரையினரும் ஒருவராவர். கூர் மண்டல வரலாறு இந்நூலுக்கு இன்றியமையாததாதலால், அதை இங்குச் சுருங்கக் கூறுவோம்:

## 2. கூர் மண்டலத்தின் வரலாறு

மத்திய மாகாணங்களுள் சிறந்து விளங்கிய கூர் மண்டலம் ஹைஹய (Haihaya) வமிசத்து மன்னர் ஆளுகையில் இருந்து வந்தது. அம்மண்டலத்தின் தலை நகரம், திரிபுரம் (Tripura) என்பது; ஹைஹய வமிசத்தில் வந்த மன்னருள் பலர் வீரமும், போர்த்திறமும், தேசபக்தியும் ஒருங்கு அமைந்து விளங்கினர்; அவர்கள் பக்கங்களில் இருந்த சிறிய நாடுகளைக் கைப்பற்றித் தங்கள் நாட்டோடு சேர்த்துக்கொள்ளலானார்கள்; ஆதலால், அந்த இராச்சியம் பரப்பிலும், சேனா பலத்திலும், நாகரிகத்திலும் நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே வந்தது.

ஹைஹய வழியிற்றோன்றிய கோகல்லா (Kokalla) என்னும் அரசன் சிறந்து விளங்கினான்; அவன், கி. பி. 875-ஆம் ஆண்டில் இறந்ததாகச் சரித்திரவறிஞர் கருதுகின்றனர்; அவனுக்குப் பதினெட்டு மைந்தர் பிறந்தனர் என்பர்; அவர்களுள் மூத்தவன் திரிபுரத்தைத் தன் நாட்டின் தலை நகராகக் கொண்டு, அந்நகரைச் சூழவிருந்த நாடுகளைத் தனக்குரியனவாக்கிக்கொண்டான். மண்டல நாடும் அவனாட்சியிற் சேர்ந்திருந்தது.

கூர் மண்டலம், அவன் சந்ததியாரால் பல வழியாலும் சீரும் சிறப்பும் ஓங்கப் பலம் பெற்றது; கி. பி. 1042-ஆம் ஆண்டில் அவன் வழியினர் ஆட்சி கோதாவிரி யாற்றங்கரையிலிருந்த நாடுகள் வரைக்கும் பரவியது.

இவ்வாறு உயர் நிலையடைந்து கூர் மண்டலக் காவலராக அக்காலமிருந்த ஹைஹய (Haihaya) வமிசத்தரசர் மீது பொறாமை கொண்ட மாளவ நாட்டுப் போந்துவார் சாதியாரும், சளுக்கியரும் நினைத்த போதெல்லாம் அந்நாட்டைத்

தாக்கி வந்தனர். அதுகாறும் கூர் மண்டலவரசருக்குக் கப்பங் கட்டி வந்த சிற்றரசர்கள், உள் நாட்டிற் கலகஞ் செய்தார்கள்; தங்கள் நாடுகளை, அவர்கள் தங்கள் விருப்பப்படி ஆளத் தொடங்கினார்கள்; எனினும், கி. பி. 1181-ஆம் ஆண்டில் கூர் மண்டலத்தரசர்கள் ரீவா (Rewah) நாட்டின் பாகல் ராஜனுக்குத் (Baghal Rajah) தோற்றோட நேர்ந்தது. அப்போருக்குப் பிறகு அம்மன்னர் தலையெடுக்கவே இல்லை. மக்களுக்கு இன்பத் துன்பங்கள் மாறி மாறி வருதல் இயற்கையே அன்றோ!

கூர் மண்டலம், பரப்பில் மிகக் குறைந்தது. ஹைஹய ஏகாதிபத்தியம் அறவே ஒழிந்தது. சிற்றரசர் பலர் அதைப் பங்கிட்டு ஆண்டு வரலாயினர். அச்சிற்றரசர் அனைவரும் காண்ட்ஸ் சாதியினர்; எனினும், அவர்கள் அரசாட்சியுரிமை பெற்று மேம்பட்ட பிற்காலத்தில் தங்களை ராஜபுத்திர வழியில் வந்தவர்களாகவே சொல்லிக்கொண்டார்கள். அவர்கள் ஆதரவைப் பெற்ற அறிஞர் பலர், அக்கூற்றை மெய்ப்பிக்கப் பல நூல்களை எழுதினர்.

சில காலத்தின் பின்னர், கூர் மண்டலம், மறுபடியும் சிறப்புற்றது; அதை ஆண்டு வந்த சிற்றரசருள் சங்கர ஸா என்பவன் புகழ் பெற்றவன்; சிறந்தவீரன்; திறமை வாய்ந்த போர் வீரருதவியுள்ளவன். அவன், தனது போர் வன்மையாலும் புத்தி சாதுரியத்தாலும் ஐம்பத்திரண்டு கூற்றங்களை வசப்படுத்தி, அவற்றைக் கூர் மண்டலத்தோடு சேர்த்தான். அவன் தெய்வ பக்தி மிகுந்தவன். அம்மண்டலத்தில் அவன் கட்டிய ஆலயங்களுக்கு அளவே இல்லை. அவன் எல்லையற்ற பொருளைச் செலவழித்துப் பல வாவிகளும், கூவங்களும் தோண்டுவித்தான்; நீராழி மண்டபங்களும், கோபுரங்களும், சத்திரங்களும், சாவடிகளும் சமைத்தான். சங்கர சாகரம் என்னும் நீர் நிலையும் அதற்கு அருகில் ஒரு

பஜனை மடமும் அவன் காலத்தில் தோன்றினவே என்பர்; அவற்றை இன்றைக்கும் நாம் அங்குக் காணலாம்.

சிற்றரசனாக இருந்த சங்கர ஸா, மரண காலத்தில் ஐம்பத்திரண்டு கூற்றங்கள் அடங்கிய கூர் மண்டலத் தலைவனாகி, சுற்றி இருந்த குறுநில மன்னர் கப்பங் கட்டி வர, அக்காலத்தில் இருந்த காவலரனைவரினும் மேம்பாடுற்று, சக்கரவர்த்தியாக விளங்கினான். அதற்குக் காரணமாகக் கூர் மண்டல வாசிகள் பின் வரும் கதையைக் கூறுகின்றார்கள் :

"துறவியார் ஒருவர் இருந்தார். அவர் சிவ பக்தியிற் சிறந்தவர். சிவபெருமானருளைப் பெற அவர் பல வழிகளில் முயன்றுகொண்டிருந்தார்; தம் கருத்து நிறைவேறுவதற்கு யாது செய்வதென்று நெடுநாட்கள் யோசித்தார்; நேர்ந்த போதெல்லாம் சந்நிதியில் அரசரைப் பலியிடுவதே சிவபிரான் மகிழ்ச்சிக்கு ஏற்ற செயலென்னும் விபரீத எண்ணங் கொண்டார்; அவ்வெண்ணத்தை நிறைவேற்ற நாடுகள் தோறும் சுற்றித்திரிந்தார்; முடிவில் கூர் மண்டலத்தை அடைந்தார். சங்கரஸா சாமுத்திரிகா லட்சணப்படி இருப்பதையும், பக்தியிற் சிறந்திருப்பதையும், தேசத்தைப் பல வழிகளிலும் விருத்தி செய்வதில் அவனுக்குள்ள அவாவின் பெருக்கையும் அத்துறவியார் கேள்வியுற்றார். 'இம்மண்டலாதிபதியே பலியிடத் தகுந்தவன்; எவ்வழியாலேனும் இவ்வரசனைக் கண்டு வசப்படுத்தி, இந்நாட்டிலுள்ள சிவாலயத்திற்கு இவனை வருவித்துப் பலியிட வேண்டும்,' என்று துறவியார் தம்முள் உறுதி கொண்டார்.

"ஒரு நாள் அக்கபட சந்நியாசியார், தம்முடல் முழுதும் திருநீறு பூசி, கழுத்தில் உருத்திராக்க மாலையும் இடுப்பிற் கீளொடு கோவணமுமணிந்து சங்கரஸாவின் அரண்மனை வாயிலில் 'சிவ சிவ' என்று கூறிய வண்ணம் நின்றுகொண்

டிருந்தார். பெரியார் வருகையைக்கண்ட வாயில் காப்பாளர், ஓடிச்சென்று அரசனுக்குச் செய்தியை விண்ணப்பித்தனர்.

"வாயில் காப்பாளர் வாய் மொழி கேட்ட சங்கரஸா, உடனே தன் சிங்காதனத்தை விட்டிழிந்து, 'தாயது வருகை கேட்ட தனியிளங் குழவியே' போல் அன்பின் மிகுதியால் விரைந்து வந்து, வெளியில் நின்றுகொண்டிருந்த சிவனடியாரைச் சிவனைக் கண்டது போலவே கருதி வணங்கி, 'அடிகாள், அடியேன் செய்த தவப் பயனலன்றோ தேவரீர் இங்கு விஜயம் செய்தருளியது? உயிருடன் இருக்கும்வரையில் தாங்கள் அடியேனை விட்டுப் பிரியலாகாது; உடனிருந்து அடியேனை உய்விக்க வேண்டும்; இனி, தேவரீர் அடியேனுக்கு அருள் புரிய இவ்வரண்மனையில் தக்கதோரிடத்தில் எழுந்தருள வேண்டுகின்றனன்,' என்று கூறி அத்துறவியாருடன் அரண்மனைக்குட் புகுந்தான்.

"சில நாளில் ஆண்டியும் அரசனும் குருவும் சீடனுமாயினர். அவ்வாண்டி, இதமொழிகளால் கள்ளங் கபடற்ற அரசன் உள்ளத்தைக் கவர்ந்தார். ஒரு நாள் அவ்வடியார், சங்கரஸாவைத் தம்மருகில் அழைத்து, 'அன்ப, இப்பரத கண்ட முழுவதையும் வெண்கொற்றக் குடைக்கீழ் ஆள நீயொருவனே தகுதியுள்ளவன். திருவருள் உன்மீது பதிந்திருக்கிறதென்பதை நாம் அறிவோம். இன்று நாம் உனக்கு உபதேசிக்கும் மந்திரத்தை ஒரு வாரம் சோம்பலின்றி உறுதியுடன் நம்பிக்கையோடு உச்சரித்துக்கொண்டிருப்பாயாக. அதன் பின்பு உனக்கு நல்லதென்று தோற்றும் ஒரு நள்ளிரவில் நீயும் நாமும் பிறரறியா வண்ணம் இவ்வரண்மனையின் திட்டி வாயில் வழியே வெளிச் சென்று, சிறிது தூரத்தில் உள்ள சிவாலயத்தை அணுகி, அங்கு எழுந்தருளியிருக்குஞ் சிவபிரானை மன மொழி மெய்களால் வழிபடுவோமாக; நீ அவ்விதம் செய்யின், மிக விரைவில்

எவரும் பொருமை கொள்ளத்தக்க உயர்நிலையை அடைவா யென்பது உண்மை. இதை நிறைவேற்றவே அடியார்க்கு எளியவனுகிய பார்வதி பாகன் உன்னிடம் வர நமக்கு ஆணை தந்தான்,' என்முர்.

"சிவனடியார் கூறிய அருள் ததும்பும் இனிய மொழி களை, பக்தி விநயத்துடன் செவிமடுத்த சங்கரஸா அவர் அடியில் வீழ்ந்து வணங்கி, 'முனிவரேறே, தேவரீர் கட்ட ளைப்படி அடியேன் நடந்துகொள்ளத் தடையில்லை,' என்முன்.

"கைதவமிக்க அச்சந்நியாசியார், சங்கரஸாவின் அறி வின்மையை நினைந்தும், தந்திறமையை வியந்தும் நகைத்துக் கொண்டார். தம் எண்ணம் எளிதில் ஈடேறப்போவதை நினைத்துக் குதூகலமடைந்தார். அவர் தம் பாதத்தில் வணங்கி நின்ற வேந்தனைத் தூக்கித் தம் அருகில் உட்காரு வித்து, அவன் காதில் ஏதோ ஒன்றை உபதேசித்தார்.

"குறித்த நாள் வந்தது. சங்கரஸாவின் மெய்காப் பாளருள் ஒருவன், திருவருள் வழி காட்டியதால், அரசன் கொண்ட மூட நம்பிக்கையில் வெறுப்புக்கொண்டான்; எனி னும், அரசனுக்கு வரப்போகும் துன்பத்தை எப்படி யேனும் போக்கத் துணிந்தான்; ஆதலால் சந்நியாசியார்மீது ஐயங் கொண்டு அவர் செயல்களை அடிக்கடி கூர்ந்து கவ னித்து வந்தான்; துறவியார் அரசனுக்குத் தீங்கிழைக்கவே வந்திருப்பவர் என உணர்ந்தான். அவன் காலந் தாழ்க்கா மல் அரசனை அணுகி, 'அரசரே, துறவி கபட வேஷதாரி. தேவரீர் அவனை நம்புதல் தகாது. அவன் தங்கள் உயிரைப் போக்க வந்தவனுக நான் கருதுகிறேன்; ஆதலால், தாங்கள் பிறர் உதவியின்றித் தனித்து அவனுடன் உரையாடுவதும் தகுதியன்று; தாங்கள் அடியேனை நம்பாவிடில், ஆபத்து நேரும் காலத்தில் உதவி செய்யவாயினும் அடியேனுக்கு உத்தரவளிப்பீராக,' என்று பணிவுடன் வேண்டி நின்முன்.

"அரசன் அவன் வார்த்தையைப் பொருட்படுத்த வில்லை; உலகத்தில் பெரும்பாலோர் நல்லன செய்வோரை இகழ்தல் இயல்பே என்று கருதி, வாளா சென்றான். மெய் காப்பாளன் செய்ந்நன்றி மறவாதவனாகையால், அரசன் தன் வேண்டுகோளைப் பொருட்படுத்தாததற்கு உள்ளம் பதைத் தான்; 'மஹாராஜாவே, தாங்கள் அடியேன் வேண்டுகோ ளுக்கு இசையாவிடில், நான் தங்களிடம் விண்ணப்பித்துக் கொள்வது ஒன்றுளது; அதனையாவது கேட்டருள வேண் டும்,' என்றான்.

அரசன் :—நீ தெரிவிக்க விரும்புவது யாது?

மெய்காப்பாளன் :—தாங்கள் சந்நியாசியுடன் பழகும் பொழுது அவன் அறியாத வண்ணம் உடைவாளை மறைத்து வைத்திருங்கள். அது தங்களை ஆபத்தில் காப்பாற்றும்.

"இத்தனை நாள் கீளொடு கோவணமணிந்திருந்த சந்நியாசியார், அன்றைத்தினம் காவியங்கி உடுத்திக்கொண்டு அந்நகரத்துக் கடை வீதிக்குப் போவதும் வருவதுமாய் இருந்தார். அவர் முகம் என்றுமில்லா மகிழ்ச்சியால் பொலிவுற்றது. சங்கரலாவுக்குச் சிறிது ஐயம் தோன்றி யது; மெய்காப்பாளன் கூறிய செய்தி உண்மையாகலாமோ என்று அவன் மனத்திற் பட்டது. அதை வெளிக்குக் காட் டிக்கொள்ளாமல் கூரிய வாளொன்றை அவன் தன் இடுப் பில் செருகிக்கொண்டு, திட்டி வாயிலிற் போய் நின்றான்.

"நடு நிசி வந்தது. ஆகாய முழுதும் காரிருள் கவிந்து கொண்டிருந்தது. ஊர் முழுவதும் உறக்கத்தில் ஆழ்ந்திருந் தது. ஆந்தைகள் கிளை கூட்டின.

"சந்நியாசியார், தம் அறையை விட்டு வெளிப்போந்து, அடிமேல் அடி வைத்து மெல்ல நடந்து சென்று, சங்கரலா நிற்பதைச் சேய்மையிலேயே கண்டார். அப்போதே சிவ பிரான் திருவருள் பாலித்துவிட்டதாக நினைத்துக்கொண்

டார். அவர் மனத்தில் மகிழ்ச்சி உண்டாயிற்று; 'சிவ சிவ' என்று அரசன் காதில் விழும்படி உரக்க உச்சரித்துக் கொண்டே திட்டி வாயிலை அடைந்தார்.

"ஆண்டியும் அரசனும் சேர்ந்து சிவாலயத்தை நோக்கி நடந்தனர். அரசனுக்குச் சந்நியாசியாரால் ஆபத்து நேரக் கூடுமென்றுணர்ந்த மெய்காப்பாளன், அவர்களறியா வண்ணந் தொடர்ந்து சென்று ஓர் இடத்தில் மறைந்து நின்றான்.

"இருவரும் சிவாலயத்தை அடைந்தனர்; அங்குள்ள திருக்குளத்தில் கைகால்களைக் கழுவிக்கொண்டனர். சந்நியாசியார் அரசனை நோக்கி, 'அன்ப, நாம் இங்குச் சிவப்பிரீதியாக ஓமம் வளர்க்க வேண்டும். அதற்கு அக்கினி குண்டம் சமைக்கிறோம். நீ அதற்குள் இக்கோயிலை மும்முறை வலம் வர வேண்டும்,' என்றார். அரசன் அவர் விருப்பப் படியே கோயிலைச் சுற்றி வந்தான்.

"அதற்குள் சந்நியாசியார் அக்கினி குண்டம் சமைத்து, ஓமம் வளர்த்து, சில மந்திரங்களை ஓதினார். கோயிலை வலம் வந்ததும் அரசன் சந்நியாசியாரை நெருங்கி நின்றான். சிறிது நேரம் சென்றது. அரசனைக் கவனியாமல் துறவியார் நிஷ்டையில் இருப்பவரைப் போலக் கண் மூடி நின்றார்.

"அப்போது சங்கரலா, துறவியாரின் இடுப்பைக் கவனித்தான். அவர் உட்புறம் செருகி வைத்துக்கொண்டிருந்த பட்டயம் காவி உடையினூடே நெருப்புச் சுவாலையால் பிரகாசித்தது. அதைக் கண்டதும் அரசனுக்கு அளவிலாக் கோபம் பொங்கிற்று; முகம் சிவந்தது; மீசை துடித்தது. 'அடா பாதகா!' என்று கூற வாயெடுத்தான்; காரியம் கெட்டுவிடுமென்று அடக்கிக்கொண்டான்.

"துறவியாரின் நிஷ்டை கலைந்தது. அவர் தாம் உட்கார்ந்திருந்த இடத்தை விட்டுச் சரேலென்று எழுந்தார்; தம்மருகில் நின்றுகொண்டிருந்த அரசனைப் பார்த்து,

'அன்ப, இந்த அக்கினி குண்டத்தை மும்முறை வலம் வந்து மேற்கு நோக்கிய வண்ணம் வணங்கு; நேரமாகிறது. பொழுது விடிகிற வரையில் எவரும் நம்மைப் பார்க்கலாகாது; விரைவில்—' என்ருர்.

"துறவியார் இடுப்பைத் தடவுவதை அரசன் பாராதவனைப் போலப் பார்த்தான்; அப்போதுதான் சந்நியாசியார் கபட வேஷதாரி என்றும், தன்னைக் கொல்லச் சூழ்ச்சி கொண்டுளார் என்றும் தெளிந்தான்.

"அரசன் ஆண்டியைப் பார்த்து, 'அடிகாள், நான் இதுகாறும் அவ்விதம் செய்தறியேன்; நான் செய்ய வேண்டியவற்றைத் தாங்கள் ஒரு முறை எனக்குச் செய்து காண்பித்தல் நலம்,' என்று மெல்லிய குரலில் வணக்கத்துடன் கூறினன். சந்நியாசியார், அரசன் வேண்டுகோளுக்கு இசைந்து அக்கினி குண்டத்தை மும்முறை வலஞ்செய்து பூமியில் வீழ்ந்து ஆலயத்திலிருந்த சிவ லிங்கத்தை நோக்கி வணங்கினர்.

"அரசன் தன்னிடுப்பிற் செருகியிருந்த உடை வாளை எடுத்து, 'சூதும் வாதும் வேதனை செய்யும் என்பதை இப்போதாயினும் தெரிந்துகொள். தீயோய்! உன்னைப் போன்ற நயவஞ்சகர் கதி இதுவேயாகும்,' என்று தன்னுட் கூறிக்கொண்டு, அத்துறவியாரின் கழுத்தை ஓங்கி வெட்டினன். முனிவர்போல நடித்த வேஷதாரி கழுத்தறுபட்டு இறந்தான். அவன் உடலினின்றும் வெளி வந்த உதிரத் துளி சிதறிக் கோயிலுள் இருந்த சிவலிங்கத்தின்மீது பட்டது. உடனே, சிவலிங்கம் படீரென்று வெடித்தது. முக்கண் மூர்த்தி அரசன் முன் தோன்றி, 'தீயோனைத் தண்டித்த மனத் தூய்மையுள்ள மன்ன, உனக்கென்ன வரம் வேண்டும்? கேட்பாயாக,' என்ருர்.

“அரசன் அத்தெய்வ ஒளியைக் காண இயலாமல் தன்னிரு கண்களையும் மூடிக்கொண்டு, ‘அடியார்க்கெளிய, பரம தயாள, பார்வதி பாக, நான் பகைவரை வென்று சிறந்த மன்னனாக விளங்கி உன் திருவடி நீழலை அடைய அருள் புரிவாயாக!’ என்று பிரார்த்தித்தனன்.

“அரசனுடைய விண்ணப்பத்தைக் கேட்ட திரிபுராந்தகர், ‘அப்படியே ஆகுக!’என்று திருவாய் மலர்ந்து மறைந்தருளினார்.

“அன்று முதல் சங்கரஸா, பகைவரை எதிர்த்து வென்று, அவர்கள் நாடுகளைக் கைப்பற்றி வந்தான். நாளுக்கு நாள் அவன் ஆளுகைக்குட்பட்ட ராஜ்யத்தின் பரப்பு அதிகப்பட்டுக்கொண்டே வந்தது. அவன் சாகுந் தறுவாயில் ஐம்பத்திரண்டு கூற்றங்களுக்கு அதிபதியாயினன். அவன் நருமதை யாற்றங் கரையில் இருந்த சௌரகிரி (Chauragarh)* என்னும் குன்றின்மீது கோட்டை ஒன்று கட்டினான்; மற்றொரு குன்றின்மேல் தான் வசிப்பதற்காக ‘மதன் மஹால்’ (Madan Mahal) என்னும் அழகியதோர் அரண்மனையை அழகு பெறச் சமைத்தான்; தன் ராஜ்யத்திலிருந்த ஆலயங்களுக்குத் திருப்பணிகள் செய்துவந்தான்; தன் குடிகளை நீதிமுறை பிறழாது ஆண்டு வந்தான். அவன் முதுமைப் பருவத்தில் ஒரு கவலையுமின்றிப் பக்தியிற் சிறந்து சிவபதம் அடைந்தான்.”

சங்கரஸா இறந்த பிறகு, அவன் புதல்வன் தளபதிஸா சிங்காதனம் ஏறினான். அப்போது அவனுக்கு இருபத்தைந்து வயதிருக்கலாம். அவன் தன் தந்தையைப் போலவே அஞ்சா நெஞ்சும் ஆண்மையும் உடையவனாய் விளங்கினான். அவன் பதினைந்து வருஷ காலம் யாவரும் புகழ அரசாண்டான் என்பர். அவன் காலத்தில் கூர் மண்டலம் உயர் நிலையை அடைந்திருந்தது.

# 3. வீரத்தின் வெகுமதி

தளபதிஸா, சிங்காதனமேறும் முன்னர், இளவேனிற் காலத்தில், தன் நண்பர் சிலருடன் குதிரை ஏறி வடக்கே இருப்பதொரு காட்டுக்கு வேட்டையாடச் சென்றான். மலைகளும் மரங்களும் அடர்ந்த அக்காட்டில் புலிகள் வாழ்ந்து வந்தன. அவைகள், இராக்காலங்களில் சில பொழுது கூர் மண்டலத்தைச் சேர்ந்த கிராமங்களில் நுழைந்து ஆடுமாடுகளைக் கொன்று தின்று வந்தன. அதனால், குடிகள் நஷ்டமடைந்தார்கள். அவர்கள் சங்கரஸா விடம் அச்செய்தியைக் கூறி முறையிட்டார்கள். தந்தையின் அருகிலிருந்து கேட்டுக்கொண்டிருந்த தளபதிஸா, புலிகளைக் கண்ட துண்டமாக வெட்டி வீழ்த்த உறுதி கொண்டிருந்தான். அவன், நேர்ந்தபோதெல்லாம் காட்டுட் புகுந்து புலிகளையும், குடிகளுக்குத் துன்பமுண்டாக்கும் பிற விலங்குகளையும் வேட்டையாடிக் கொன்று வந்தான்; வழக்கம்போல அன்றைய தினமும் வேட்டைக்குப் போனான்.

வேட்டைக்குச் சென்ற தளபதிஸாவும் அவன் நண்பரும் சிறிது தூரம் வரையிற் பற்பல செய்திகளைப் பேசிக்கொண்டு போயினர். சேய்மையிற் புலியொன்று அங்குள்ள காற்றைத் தாண்டிச் செல்லுவதைக் கண்ட தளபதிஸா, தன் நண்பரை விடுத்து ஒன்றியாகவே தான் ஏறியிருந்த குதிரையை முடுக்கினான். அது காற்றினும் கடுகிச் சென்றது. தளபதிஸா பிரிந்ததும் நண்பர் அனைவரும் அவனுக்கு உதவி செய்யும் நோக்கத்துடன் திசைக்கு ஒருவராய் விரைந்து சென்றனர்.

தளபதிஸா துரத்திப் போன புலி, மலைமுழையொன்றிற் புகுந்துவிட்டது. அது நுழைந்த இடத்தைக் காணப்

பலவாறு முயன்றும் அவனால் முடியவில்லை. உடை வாளைக் கையிற் பிடித்த வண்ணம் அவன் பல இடங்களிலும் சுற்றிப் பார்த்தான். அவன், அதன் காலடிச் சுவடுகளைப் பின்பற்றிச் சென்று, அதை எவ்விதத்திலாயினும் கண்டு பிடித்துக் கொல்லக் கருதினான். நெடுநேரம் தேடியும், அவன் கண்களுக்கு அப்புலி காணப்படவில்லை.

புலி தேடும் நோக்கமுள்ள அவன் தன்னையறியாமலே அக்காட்டின் வட எல்லையை அடைந்தான்; அப்போது, பகல் மூன்று மணியிருக்கலாம். புலி தேடும் ஞாபகம் நீங்கித் தன்னுணர்வு வரப் பசியால் அவன் களைப்புற்றான். தன் கண்களைத் திறந்து நாற்புறமும் நோக்கினான். "இஃதென்ன! புலியைத் தேடிக்கொண்டே நான் நெடுந்தூரம் வந்துவிட்டேனே! என் நண்பரும் பிரிந்து போயினரே! அவர்கள் என்னைத் தேடிப் பலவிடங்களிலும் அலைந்து மனங் கவல்வரே! இப்போது என் செய்வது! நான் சந்தல மன்னன் ஆளும் நாட்டை அடைந்திருக்கிறேன். இன்றிரவு இந்நாட்டில் எங்கேனும் ஓர் இடத்தில் தங்கி என் தளர்ச்சியைப் போக்கிக்கொண்டு, நாளை எனது நாட்டிற்குத் திரும்புவதே நலம். இப்போதே திரும்பிப் போக முயல்வது அறிவின்மையாகும். கானகத்தில் இவ்விரவைக் கழிப்பது தக்கதன்று," என்று தனக்குள் எண்ணிக்கொண்டான். பிறகு அவன் குதிரையை விட்டிறங்கி, அங்கிருந்த பெரியதொரு மரத்தின் அடியில் தங்கினான். பொறை நீங்கிய குதிரை புல் மேயத் தொடங்கியது. சிறிது நேரத்தில் அரசிளங்குமரனும் அவன் குதிரையும் அயர்வு நீங்கினர்.

சிறிது தூரத்தில் திடீரென எவரோ கூக்குரலிடுவது அரசகுமாரன் காதில் வீழ்ந்தது. அவன் உடனே தன்னருகில் நின்ற குதிரை மீதேறி, கூக்குரல் கேட்ட அத்திசையை நோக்கி விரைந்து சென்றான்.

அவன் அஞ்சத் தக்கதொரு காட்சியைக் கண்டான். அங்குள்ள இளமரக்காவொன்றிற் சிறுத்தையொன்று மங் கையரிருவரை எதிர்த்து நிற்க, அம்மங்கையர் அதற்கு அஞ்சித் தப்பிப் போக வழி அறியாமல் கூக்குரலிட்டு நின்றனர். அவ்விடத்தை அடைந்த தளபதிஸா, குதிரையி னின்றும் இழிந்து, மங்கையர்மீது பாயும் நோக்கத்துடன் நின்ற சிறுத்தையை எதிர்த்துத் தன் உடைவாளால் வெட்டி வீழ்த்தினன்.

அரசிளங்குமரனைக் கண்டதும் மங்கையர் வெட்கத்தாற் சிறிது ஒதுங்கி நின்று, தலை குனிந்தனர். அவன் சிறுத் தையைக்கொன்ற பிறகு, அம்மங்கையரை நோக்கி, "மங்கை மீர், இவ்விடத்தில் தமியராய் நின்ற நீவிர் ஈசனருளால் இன்று எமன் வாயினின்றும் தப்பினீர். இனிமேல் இவ் வாறு வாராதீர்!" என்றான்.

தம்மைக் கொடிய சிறுத்தை வாயினின்றும் காப்பாற் றிய அரசிளங்குமரனது கட்டமைந்த உடலும், முக அழ கும், இனிய மொழியும், வீரச் செயலும் அந்நல்லாரின் மனத்தைக் கவர்ந்தன.

அவ்விருவருள் ஒருத்தி, சிறிது வெட்கந் தெளிந்து, அவனைப் பார்த்து, "ஐய, தாங்கள் பயன் கருதாது எங் களுக்கு இன்று செய்த ஆருயிருதவியை எக்காலத்தும் மற வோம்; தாங்கள் இன்னவர் என்பதை யாங்கள் அறியக் கூடுமேல் நன்று," என்றாள்.

தளபதிஸா புன்னகையுடன், "சுந்தரி, யான் கூர் மண்டலாதிபதியான சங்கரஸாவின் மைந்தன்; வன விலங்குகளை வேட்டையாட எண்ணி நண்பர் சிலருடன் வந்தேன். வருகிற வழியிற் காறு ஒன்று குறுக்கிட்டது. புலியொன்று என் கண்ணெதிரில் அவ்வாற்றைத் தாண்டிச் சென்றது. அதை எவ்விதத்திலாயினும் வெட்டி வீழ்த்தக்

கருதி என் நண்பரைப் பிரிந்து அதனைத் துரத்தி வந்தேன். அஃது எங்கேயோ மறைந்தது. மாலைக் காலம் வந்தது. இனி இன்று ஊருக்குத் திரும்பினால் இரவு முழுதும் காட்டிற் கழிக்க நேரும். அது வீரருக்கு ஏலாச் செய லாகும் என்று கருதினேன்; அருகிலிருக்கும் இவ்வூரில் இரவைக் கழிக்கவெண்ணி வருகையில், உங்கள் குரலைக் கேட்டேன்; உடனே விரைந்து வந்தேன். என் வரலாறு இதுவே. இனி, நீங்கள் இன்னாரென்பதை அறிந்து மகிழ விரும்புகிறேன்; சொல்லுவதிற் குற்றமில்லையேற் சொல்ல வேண்டுகிறேன்," என்றான்.

முதன்முதல் அவனுடன் பேசிய மங்கை, அவனைப் பார்த்து, "அரசகுமாரரே, இந்த நகரம் மஹோபா என்னும் பெயருள்ளது; இது, சந்தல மன்னரின் அரசிருக்கைக்குரிய சிறந்த நகரமாகும். இங்கு அரசாட்சி செய்து வருபவர் ராஜ சந்தர் என்னும் பெயருடைய மன்னர் என்பது உமக்குத் தெரிந்திருக்கக் கூடியதே. இதோ, என் அருகில் நிற்கும் பூவையர் திலகம், அம்மன்னரருமைப் புதல்வியே ஆவள்; நான் இவள் தோழியருள் ஒருத்தி. நாங்கள் நாள் தோறும் காலம் போக்க மாலை வேளையில் இவ்விளமரக்கா வுக்கு வந்து, நீராடுவதும், பூக்கொய்வதும், ஊசலாடுவதும், பாடுவதும் வழக்கம். இது வரையிற் கொடிய விலங்குகள் இங்கு நுழைந்ததே இல்லை. இச்சிறுத்தை எவ்விதம் இங்கு வந்ததோ, நாங்கள் அறியோம்," என்றாள்.

தளபதிலா, "சூரியன் அஸ்தமிக்கும் தருணமாயிற்று. நீங்கள் அரண்மனைக்குத் திரும்பிப்போவது நலம். எனக்கு விடை கொடுங்கள்," என்று கூறிக்கொண்டே தன் குதிரை யின் மீது ஏறினான்; அதுவரை நாணத்தாற் குனிந்த தலை நிமிராதிருந்த அரசிளங்குமரியின் முகத்தை நோக்கினான்; அதே காலத்தில் அம்மடந்தையும் அவனைப் பார்த்தாள்.

அவன் கூறியபடி மங்கையரிருவரும் தம் அரண் மனை செல்லப் புறப்பட்டனர்.

மஹோபா நகரச் சத்திரமொன்றில் தங்கி, தளபதிஸா அன்றிரவைக் கழித்து, மறு நாள் புலர்வதன் முன்னரே குதிரையேறித் தனது நாட்டை நோக்கிச் சென்றான்.

இஃதிவ்வாறாக, அரண்மனையை அடைந்த அம்மங்கை யரிருவரும் அன்று உத்தியான வன நிகழ்ச்சியை எவருக்கும் தெரிவிக்கவே இல்லை; ஆனால், அவர்கள் அரண்மனையின் அந்தப்புரத்தில் தம் அறையுள் உட்கார்ந்து நெடுநேரம் தூக்கமின்றித் தம்மைக் காத்த அரசிளங்குமரனது சிறந்த குணத்தைச் சிறப்பித்துப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

அரசிளங்குமரி:—மோகனா, அச்சமயத்தில் அவர் நமக்கு உதவி செய்யாவிடில் நாம் எமனுலகம் சேர்ந்திருப்பது உண்மை. ஆ! எவ்வளவு கொடிய விலங்கு அது! நம்மை எவ்வளவு நேரம் அஃது உற்று நோக்கிக்கொண்டு இருந்தது பார்த்தாயா!

மோகனாள்:—சிறுத்தை, கொடுமை வாய்ந்ததென்பது உலகறியுண்மையன்றோ? கடவுள் திருவருள்போலன்றோ அத்தோன்றல் நமக்கு உதவினார்!

அரசிளங்குமரி:—அவர் செய்த உதவிக்கு வந்தனங்கூட நான் செய்யவில்லையே! என்னையொப்ப நன்றி கொல்பவர் உலகில் உளரோ!

மோகனாள்:—குலமகளிர்க்குரிய நாணத்தாலேயே நாம் வாளா நின்றோமேயன்றி மனமார அவரை வாழ்த்தவில்லை யா? ஏன்?

அரசிளங்குமரி:—என்ன நாணம்! அவ்வீரர் தம்முயி ரையும் பொருட்படுத்தாது, நம்மைக் கொடிய சிறுத்தை யிடமிருந்து காத்தாரே! அவருக்கு நாமென்ன கைம்மாறு செய்தோம்?

மோகனுள் :—துர்க்காவதி, அவர் பயனை நோக்கியா சிறுத்தையைக்கொன்றார் ? அவர் நமக்குப் புரிந்த உதவிக்குக் கைம்மாருக நாம் கொடுக்கத் தக்கது இவ்வுலகில் என்ன இருக்கிறது ?

அரசிளங்குமரி :—எதுவும் இல்லை என்பது உண்மையே; ஆயினும், அணிந்திருந்த ஆபரணங்களிற் சிறந்தவொன்றை அவருக்கு நாம் வெகுமதி அளித்திருக்க வேண்டும். அவர் சிறிது நேரம் நம்முடன் உரையாடியிருப்பாராயின், விலை உயர்ந்த ஆரத்தை அவர் கழுத்தில் அணிந்திருப்பேன்.

மோகனுள் :—துர்க்காவதி, இப்போதும் காலம் தவறி விடவில்லை. தக்கவர் ஒருவர் மூலம் உனக்குத் தோன்றும் வெகுமதியை அவருக்கு அனுப்பலாமே!

அரசிளங்குமரி :—ஆம் ; அவ்வாறு செய்யவே நினைக் கிறேன்.

மோகனுள் :—அதை யாரிடம் கொடுத்தனுப்புவது ?

அரசிளங்குமரி :—அனுப்புவதற்குத் தக்க மனிதரை முன்னமே நிச்சயித்துவிட்டேன். நமது பணிப் பெண்ணுகிய காந்தாமணியின் தமையனே அதை ஒழுங் காகச் செய்து முடிக்கும் ஆற்றலுள்ளவன். அவன் பொது வில் முரடனுயினும், மந்தணத்தை எவரிடமும் எக்காரணம் பற்றியும் வெளியிடான் ; அதனுல், அவனிடம் எனக்கு முழு நம்பிக்கையுண்டு.

மோகனுள் :—அவ்விதமே செய்யலாம்.

அரசிளங்குமரி, கீழ்க் காட்டிய கருத்தடங்கிய நிருபம் ஒன்று வரைந்து அதையும் ஆரத்தையும் ஒரு சிறு பொற் பெட்டிக்குள் வைத்துப் பூட்டினுள்.

“ ஆபத்தில் உதவிய அன்பரே,

தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராகிய நீவிர் என்னை யும் என் தோழியையும் கொடிய சிறுத்தை வாயினின்றும்

காப்பாற்றிய பேருபகாரத்துக்கு ஈடாகச் செய்யக் கூடிய கைம்மாறு இவ்வுலகில் யாதுளது ! ஆயினும், நன்றி கொன்ற பாவத்திற்கு ஆளாகா வண்ணம் இந்நிருபத்துடன் வரும் என் ஆரத்தைத் தாங்கள் அன்பு கூர்ந்து மகிழ்வோடு பெற்றுக்கொள்ள வேண்டுகின்றனன்.

அன்பும் பணிவுமுள்ள,
துர்க்காவதி."

பொழுது புலர்ந்தது; துர்க்காவதி கமலநாதனை (காந்தாமணியின் தமையனை) வருவித்து, அவனிடம் அப்பெட்டியைக் கொடுத்து, "நீ இப்பெட்டியை இன்றே கொண்டு போய், கூர் மண்டல அரசிளங்குமரர் தளபதிலாவினிடம் கொடுத்துவிட்டு வா, தாமதியாதே. உன் வழிச்செலவிற்கு உன் தங்கை காந்தாமணியிடம் கொடுத்திருக்கும் தொகையைப் பெற்றுக்கொள். நீ தளபதிலாவிடம் போகிற செய்தி வெளியாதல் கூடாது. ஜாக்கிரதை!" என்று கூறி அனுப்பினாள்.

# 4. சந்தல வமிச வரலாறு

நீர்க்காவதி பிறந்த சந்தல வமிசம் (Chandel Dynasty) மத்திய கால இந்தியாவில் சிறப்புற்று இருந்தது. யமுனை யாற்றுக்கும் விந்திய மலைக்கும் இடையில் உள்ளதும், பண்டைக் காலத்தில் ஜேஜகபுக்தி (Jejaka Bhukti) என்று வழங்கி வந்ததுமான பண்டல் கண்டு (Bundel-khand) நாட்டில், கிறிஸ்தவப்தம் ஒன்பதாம் நூற்றாண்டில் கஹர்வார் ராஜபுத்திரரிடமிருந்து அரசாட்சியைக் கைப்பற்றிய பிறகு, சந்தலரும் அவர் வழியினரும் நீதி முறை பிறழாது அரசாண்டு வந்தனர் என்பர். ஹமீர்ப்பூர்க் கூற்றத்திலுள்ள (Hamirpur District) மஹோபா (Mahoba) நகரமும், பந்தா கூற்றத்திலுள்ள (Banda District) கலஞ்சார் (Kalanjar) நகரமும் அவர்கள் நாட்டிற்குத் தலை நகரங்களாயிருந்தன.

பண்டல் கண்டு நாட்டில், சந்தல மன்னரின் உயர் நிலையையும் நாகரிகச் சிறப்பையும் வெளிப்படுத்த வல்ல மாட மாளிகைகளும், கூட கோபுரங்களும், கோயில் குளங்களும் பாழடைந்திருப்பதை இன்றைக்கும் காணலாம். கோயில்களின் உட்பிராகாரங்களிலும் கோபுரங்களிலும் மதிற் சுவர்களிலும் அக்காலத்துச் சிற்பிகள் நுட்பமாகச் செதுக்கி உள்ள சித்திரங்களைக் காண்போர் அனைவரும் வியப்புறுவது திண்ணம்.

சந்தல மன்னர், முதன்முதலில் தமது நாட்டினின்றும் யமுனையாற்றாற் பிரிக்கப் பெற்றிருந்த கன்னோசி (Kanouj) நாட்டரசருக்குக் கப்பம் கட்டிக்கொண்டு வந்தனர். கி. பி. பத்தாம் நூற்றாண்டின் முற்பகுதியில் பண்டல் கண்டு நாட்டில் அரசு செலுத்திய ஹர்ஷன் (Harsha)

என்னும் சந்தல மன்னன் புஜபல பராக்கிரமமுடையவன் ; அஞ்சா நெஞ்சமும் ஆண்மையும் அமைந்தவன் ; அக்காலத் தரசருட் சிறந்தவன் ; தேச பக்தி மிக்கவன். அவன் சுயேச் சை பெற விரும்பினான்; அதனால், கன்னோசி நாட்டரசனுக்கு இறை செலுத்துவதை நிறுத்தக் கருதினான்; அக்கருத்து நிறைவேறுதற்குரிய சமயத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந் தான்.

அக்காலத்தில், கன்னோசி நாட்டுக் காவலனாய் இருந்த வன் மஹிபாலன் (Mahipala) என்பவன். அவனிடம் சக்கரவர்த்திக்குரிய இலக்கணங்கள் அமைந்திருக்கவில்லை. அவன் மந்த புத்தியும் அறியாமையுமுடையவன் ; ஆதலின், அரசியற்பொறையை அமைச்சர்பால் விடுத்து, அச்சமற்று இருந்தான்.

மஹிபாலன் இயல்பை ஒற்றர் மூலம் அறிந்த ராஷ்டிர கூட வழியினனான மூன்றாம் இந்திரன் (Indra III), கி.பி. 916-ஆம் ஆண்டில் கன்னோசி நாட்டின்மீது படையெடுத்துச் சென்றான்.

ஆபத்தான அந்நிலையில், மஹிபாலன் சந்தல மன்ன னாகிய ஹார்ஷனைத் தனக்குத் துணை புரிய வேண்டினான் ; சுயேச்சைபெற அதுவே தக்க தருணம் என்று கண்ட ஹார் ஷன், மஹிபாலன் வேண்டுகோளுக்கு இசைந்து ஒருபெருஞ் சேனையுடன் சென்று ராஷ்டிர கூடரை எதிர்த்துத் துரத்தி அடித்தான். அதுமுதல் அவன், கன்னோசி நாட்டுக் காவல னுக்குத் திறை செலுத்துவதை விட்டுச் சுவாதீனமாகத் தன் னாட்டை ஆண்டு வந்தான்.

யசோ வர்மன் (Yaso-Varman), தன் தந்தை ஹார் ஷனைக்காட்டிலும் பன்மடங்கு வெற்றித் தருக்குற்று விளங் கினான். கன்னோசி அரசன் ஆளுகைக்குட்பட்டிருந்த கலஞ் சார் நகரமும் அதைச் சேர்ந்த துர்க்கமும் அவன் காலத்தில்

சந்தலவரசர் வசமாயின. கன்னோசி நாட்டுக் காவலன் யசோ வர்மனைக் கண்டு கலங்கினன். யசோ வர்மன் ஒரு முறை, கன்னோசியில் காவல் புரிந்து வந்த தேவபால மன்னனிடமிருந்து விஷ்ணு விக்கிரகமொன்றை வலுவிற் பெற்று, தான் கட்டியிருந்த கோயிலில் அதைப் பிரதிஷ்டை செய்தானென்பர்.

யசோ வர்மனுக்குப் பிறகு அவன் புதல்வன் தாங்கா (Dhanga) என்பவன் சிங்காதனமேறி, ஐம்பது வருஷ காலம் அரசியல் நடத்தி வந்தான்; அவன் மன்னர் மன்ன னெனப் பெயர் பெற்று விளங்கினான்; கி. பி. 991-ஆம் ஆண்டு, ஸபக்தஜின் என்னும் முகம்மதிய வீரனை எதிர்க்க ஜயபால மன்னன் தலைமையின்கீழ் ஒன்று கூடிய ரஜபுத்திர மன்னருள் இவனும் ஒருவன்.

சந்தல வமிசத்து மன்னரனைவரினும் சிறந்து விளங்கிய வன் கீர்த்தி வர்மன் (Kirti Varman). அவன் கி. பி. 1050 வருஷ முதல் கி. பி. 1100 ஆண்டு வரையில், ஐம்பது வருஷ காலம் செங்கோல் செலுத்தி வந்தான். அவன் காலத்தில் பண்டல் கண்டு நாடு உயர் நிலை அடைந்திருந்தது. அவன் போர் வன்மையில் இணையற்றிருந்தது போலவே, கல்வி கேள்விகளிலும் ஒப்புயர்வற்றவனாய் விளங்கினான். அவன் அவையைப் பல புலவர் சிறக்கச் செய்தனர். அவர்களுள் "பிர போதசந்திரோதயம்" என்னும் வடமொழி நாடக நூல் எழு திய கிருஷ்ண மிசிரரும் (Krishna Misra) ஒருவர் ஆவர்.

கீர்த்தி வர்மனுக்குப் பிறகு சந்தல வமிசத்தார் செல் வாக்குக் குறையலாயிற்று; அவர்கள் நாட்டின் பெரும் பாகம் பகைவரிடம் சிக்கியது; ஆதலால், அவர்கள் குறுநில மன்னர்களாய் இருந்தவிடம் தெரியாமல் வாழ்ந்தார்கள்.

நானூறாண்டுகளுக்குப் பிறகு, ராஜசந்தன் என்னும் அவ்வமிச மன்னன் மகோபாவைத் தலை நகராகக் கொண்டு,

அந்நகரைச் சுற்றியிருந்த நாடுகளை ஆண்டு வந்தான். அவ னுக்கு ஒரே புதல்வி உண்டு; அவள் பெயர் துர்க்காவதி.

இச்சரித்திரம் தொடங்குங் காலத்தில், துர்க்காவதி பதினாறுட்டைப் பிராயத்தினளாய்ப் பேரழகு பொருந்தி விளங்கினாள்; அவள், எழிலுக்கேற்பக் கல்வி கேள்விகளி லும் வல்லவளாய்த் திகழ்ந்தாள். அதுவேயுமன்றி, அவள் தன் சிறு வயது முதலே ராஜசந்தன் ஆதரவில், வில் வாள் வித்தைகளிற் பயிற்சியடைந்து வந்தாள்; யானையேற்றம், குதிரையேற்றம் முதலியவற்றில் அவளுக்கிருந்த தேர்ச் சியை அளவிட்டு உரைக்க இயலாது. அவள் ராஜசந்தன் வமிசத்தை விளக்க மகளாவும் மகனாகவும் விளங்கினாள்.

ராஜசந்தன் அவளிடம் மிக்க அன்பு வைத்து அவளை வளர்த்து வந்தான். அவள் தக்க வயதடைந்த நாள் முதல் அவன் அவளழகுக்கும், அறிவுக்கும், குணத்துக்கும் தக்க அரசிளங்குமரனைத் தேர்ந்தெடுத்து மணஞ் செய்விக்கப் பெரிதும் விழைந்தனன்.

அரசிளங்குமரர் (Princes) பலர், அவளை மணம் புரிய அவாக்கொண்டு நின்றனர்; தமது கருத்தை நிறை வேற்றிக்கொள்ளப் பல வழிகளில் முயன்றனர். அவர்க ளுள் ஒருவராகிலும் ராஜசந்தன் மனத்திற்குப் பிடிக்கவில்லை.

துர்க்காவதியின் மண விஷயைப் பற்றி ராஜசந்தன் முயல்வதை அறிந்த தளபதிஸா, தன் தந்தையின் உத்தரவு பெற்று, மெய்காப்பாளர் சிலருடன் மஹோபா நகரை நோக்கிப் புறப்பட்டான்; அந்நகரை அடைந்து, ராஜசந்தன் அரண்மனைக்குட் புகுந்து, தன் வருகையை அரசனிடம் தெரிவிக்கச் செய்தான்.

ராஜசந்தன், தளபதிஸாவைத் தன்னருகில் அமர்த்தி, தக்க மரியாதைகள் செய்தான்; தளபதிஸாவின் புன்னகை தவழும் வதனமும், கட்டமைந்த உடலும், கள்ளங்கபடற்ற

உள்ளப் பொலிவும், மதுர வசனமும், அருள் ததும்பும் கண்களும் சேர்ந்து ராஜசந்தனுடைய மனத்தைப் பரவசப் படுத்தின.

ராஜசந்தன், தளபதிஸாவை நோக்கி, "ஐய, நீவிர் யாவிர்? நான் உமது வரலாற்றை அறிய ஆவலுள்ளவனா யிருக்கிறேன்,'' என்றான்.

தளபதிஸா, தன் வரலாற்றை ராஜசந்தனுக்குத் தெரி வித்தான். உடனே ராஜசந்தன் முகம் மாறுதலடைந்தது. அவன் சிறிது நேரம் ஒன்றும் பேச நாவெழாமல் மௌனம் சாதித்தான்.

தளபதிஸா அரண்மனையுள் ராஜசந்தனுடன் உரையா டிக்கொண்டிருந்த செய்தி அந்தப்புரத்தில் சேடியருடன் சதுரங்கம் (Chess) விளையாடிக்கொண்டிருந்த துர்க்காவதிக் குத் தெரிந்தது. அவள் உடனே விளையாட்டை நிறுத்தி விரைந்து சென்று அவைக்களத்தின் பின் புறத்தே திரை மறைவில் ஒதுங்கி நின்று, தன் தந்தைக்கும் தளபதிஸாவுக் கும் நடக்கும் சம்பாஷணையைக் கேட்கலானாள்:

மோன நிலையில் இருந்த ராஜசந்தன், எதிரில் இருந்த அரச குமாரனை நோக்கி, "ஐய, 'புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது,' என்பது யாவரும் அறிந்ததே; அதையொப்ப, சந்தல குல ரஜபுத்திரரான நாங்கள் இப்போது தாழ்வை அடைந்திருப்பினும், காண்ட்ஸ் சாதியினரான உம்முடன் விவாகத் தொடர்பைப் பெற இசையோம். உம்மைக் கண்டதும் என்னரும்புதல்வி துர்க்காவதியை உமக்கே விவாகஞ் செய்விக்கக் கருதினேன். உமது குலமே என் கருத்தை நிறைவேறா வண்ணம் தடுத்து நிற்பது,'' என்று பெருமிதம் தோன்றப் பேசினான்.

தளபதிஸா பதிலொன்றும் சொல்லாமல், தன் இருக் கையை விட்டெழுந்து, விரைந்து அரண்மனையை விட்டு

வெளியேறினான். அங்கிருந்தோர் அனைவரும் அரசிளங் குமரன் கொண்ட கோபத்தைக் கண்டு அஞ்சி நின்றனர். கூர் மண்டலாதிபதியின் சீற்றத்தை மாற்றக் கூடியவர் அக் காலத்தில் எவரும் இல்லை.

அக்காட்சியைக் கண்ட ராஜசந்தனது அமைச்சர்கள் அவனை அணுகி, "அரசரே, தளபதியின் குலத்தை அவன் முன்னிலையில் அவமதித்துப் பேசியது தவறாகும். அவ் விதம் யோசனையின்றிப் பேசியதனால் நமது நாட்டுக்குக் கெடுதி உண்டாவது உறுதி. துணை வலியற்றிருக்கும் நம் நாட்டின்மீது அவன் படையெடுத்து வந்தால் நாம் என் செய்வது?" என்றார்கள்.

தன் கண்களில் தீப்பொறி பறக்க ராஜசந்தன் அவர் களைப் பார்த்து, "அமைச்சர்களே, மானத்திலும் சிறந்தது யாதுளது? தாழ்ந்த குலத்துதித்தவனுக்கோ நாம் அஞ்சு வது! இழிகுலத்தோனாகிய அவனுடைய அகங்காரத்தை என் னென்றுரைப்பது!—அருமையாய் வளர்ந்த என் புதல்வி, அவனையா கணவனாக அடையத் தக்கவள்! நான் என் நாட்டை இழக்க நேரினும் அவனுக்கு என் குமாரியை வாழ்க் கைப்படுத்த ஒரு போதும் உடன்படேன். இஃது உண்மை யும் உறுதியும் ஆம்," என்றான். அரசன் கூறிய மொழி களைக் கேட்ட மந்திரிகள் மதி மயங்கி, பதில் ஒன்றும் பேசா மல் நின்றார்கள்.

திரை மறைவில் இருந்த வண்ணம் அங்கு நடந்தன வற்றைக் கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்த துர்க்காவதி, துக்கத்துடன் அவ்விடம் விட்டகன்று, தன் அறையை அடைந்தாள். பல எண்ணங்கள் மனத்திற் புகுந்து அவளைப் பெரிதும் வருத்தின.

"ராஜ தந்திரியாராகிய நம் தந்தையார், அவ்வரசிளங் குமரரிடம் மிகக் கடுமையாகப் பேசிவிட்டாரே! அவர் கூறிய

மொழிகளைப் பொறுமலன்றோ அவ்விளங்காளை மிக்க சீற்றத்துடன் இருக்கையை விட்டெழுந்து வெளிச் சென்றார்? அவர் கோபத்தைத் தடுப்பது எவ்விதம்! — எந்தையார் மீதுள்ள கோபத்தால் அவர் என்னையும் பொருட்படுத்தாது விடுவாரோ? அங்ஙனம் நேராவண்ணம் தடுப்பது என் கடமையாகும். இப்போதே நான் அவருக்கு ஒரு கடிதம் வரைந்து அனுப்ப வேண்டும்," என்று துர்க்காவதி தனக்குள் உறுதிகொண்டு, தன்னறையுட் புகுந்து, தளபதிக்கு உடனே கடிதமொன்று எழுதிக் கமலநாதனிடம் கொடுத்தனுப்பினாள்.

## 5. துர்க்காவதியின் மணம்

மேற்கூறியவை நிகழ்ந்து ஒரு மாதங் கழிந்தது. கூர் மண்டலத்தில் சங்கரஸா தேவர்களுக்கு விருந்தினனாயினன். தளபதிஸா பட்டத்துக்கு வந்தான். அவன் காலந் தாழ்த்தாமல் தளகர்த்தனை வருவித்து, சேனையைச் சீர்திருத்தக் கட்டளையிட்டான்.

நாள் சில கழிந்தன. ஒரு நாள் இரவு சந்திரன் பொலிவுடன் பிரகாசித்துக்கொண்டிருந்தான். உலக முழுவதும் அவனுடைய தண்ணொளி வெள்ளத்தில் மூழ்கிக் கிடந்தது. காறாறுகள் வெண்ணிறமும் பளபளப்பும் வாய்ந்து வளைந்தும் நெளிந்தும் ஓடும் பெரும்பாம்புகளைப்போலத் தோன்றின.

அத்தருணம், கூர் மண்டலத்துக்கும் பண்டல் கண்டு நாட்டுக்கும் இடையிலுள்ள காட்டில் வென்றி மறஞ் சிறந்த வீரனாகிய தளபதியும், துர்க்காவதியும் தனித்தனி குதிரை இவர்ந்து கூர் மண்டலத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்தனர்.

தளபதிஸா:-மங்கை நல்லாய், உந்தையார் என் குலத்தை இழித்துக் கூறிய கொடிய மொழிகளைப் பொறுமல் நான் வருத்தமுற்று உன்னை அடையும் வழி யாதென எண்ணிக் கொண்டிருந்தேன். அப்பொழுது பிருதிவியின் தீரமும் வீரமும் என் ஞாபகத்துக்கு வந்தன. அவன் சம்யுக்தையை முயன்று பெற்றதையொப்பவே நானும் உன்னைப் பெறக் கருதினேன். அதே சமயம் நீ எனக்கு வரைந்த நிருபத்தைக் கமலநாதன் என்னிடம் கொடுத்தான். அதைப் படித்தேன். பழம் நழுவிப் பாலில் விழுந்ததுபோல மகிழ்ந்தேன். நான் அடைந்த ஆனந்தத்துக்கு அளவேயில்லை. அதுமுதல் இதுவரையில் நான் உன்னை அடையப் பலவழிகளில் முயன்

றேன். எதிர்பாரா இடையூறுகள் பல நேர்ந்தன. எந்தையா ரும் இறந்துபட்டார். அரசியற் பொறையும் என்னைச் சார்ந் தது. அதற்குப்பின், இன்றுதான் எனக்குச் சமயம் வாய்த் தது. நீ எனக்கு வரைந்தனுப்பிய நிருபத்திற் கண்ட வாறு நான் உன்னை நள்ளிரவிற் குறித்த இடத்திற் சந்தித் தேன்; நீயும் காலந்தாழ்த்தாமல் என்னுடன் வரச் சம்மதித் தாய். நாம் இருவரும் எவரும் அறியாவண்ணம் மஹோபா நகரை விட்டு வெளிப் போந்தோம்.

துர்க்காவதி :—'அடுத்து முயன்றாலும் ஆகுநாளன்றி எடுத்த கருமங்கள் ஆகா,' என்னும் ஆன்றோர் வாக்குப் பொய்க்குமோ? எதற்கும் காலம் வரவேண்டும். நாளைத் தினம் மஹோபா நகர முழுவதும் அல்லோல கல்லோலப் படும். என்னைக் காணவிடில் எந்தையார் மனநொந்து வருந் துவரென்பதில் ஐயமில்லை; அந்தோ! நான் நன்றி கொன்ற மகள் ஆயினேனே!

தளபதிஸா :— நீ உன் மனத்திற்குகந்த மணாளனை மணம்புரிய இசைந்தது குற்றமாகுமா? அதனால், நீ செய்ந் நன்றி மறந்தவளென்றல் நியாயமன்று. இல்லறம் சரிவர நிறைவேற மனைவியும் கணவனும் தம்முள் மாறுபாடில்லா மல் ஒத்துழைப்பது முறையே.

துர்க்காவதி :—தாங்கள் கூறுவது நியாயம் அன்றெனை மறுக்க வல்லவர் யாவர்? ஆயினும், உலகம் பல விதம். என்னைப் பெற்று வளர்த்த இருமுதுகுரவர் மனம் கோணா மல் நடப்பது என் கடமையன்றோ? அக்கடமையைச் செய்யத்தவறின் என்னை உலகம் பழிக்கும். அப்பழிமொழி நியாயமோ அன்றோ என்பதைக்கூர்ந்து கவனிப்பவர் யாவர்? தங்களைக் காதலித்த நான் அந்தப் பழிமொழியையும் ஏற்க உறுதி கொண்டுவிட்டேன்.

தளபதிஸா :—உன் மீதுள்ள அன்பின் மிகுதியால் உன் தந்தையார் என் நாட்டின்மீது படையெடுத்து வந்து என்னைக்கொன்று உன்னை மீட்டுக்கொண்டுபோக முயலினும் முயலலாம்; அதற்கோ நான் அஞ்சுவேன்!

துர்க்காவதி :—நான் உம்மை வேண்டிப் பெறக் கருது வது ஒன்றுளது.

தளபதிஸா :—அஃதியாது?

துர்க்காவதி :—எந்தையார், உம்முடன் போர் செய்தால் தோல்வியுறுவது உறுதி. அவர் தோற்றோடினால், நீர் எக் காரணம் பற்றியும் அவர் எத்தகைய சிறு துன்பத்தையும் அடையாதபடி காக்கவேண்டும். உம்மாலும் உம்மைச்சேர்ந் தவர்களாலும் அவருயிருக்குக் கேடு நேராவண்ணம் காப்ப தாக உறுதி மொழி அளிக்க வேண்டுகின்றேன்.

தளபதிஸா :—நான் எக்காலத்தும் உன் மனத்தைப் புண்படுத்த விரும்பேன். இஃது உண்மை. இருக்கட்டும்; நீ எனக்குரியவள் என்பதை உறுதிப்படுத்த இரண்டுமூன்று நாட்களுள் நல்ல முகூர்த்தத்தில் அக்கினி சாக்ஷியாக மணம் புரியக் கருதுகிறேன்; உன் விருப்பம் யாதோ?

துர்க்காவதி :—எனக்கென்று தனித்த விருப்பம் எதுவுமே இல்லை. உமது விருப்பமே எனது விருப்பமும். நீர் எனது முத்த மாலையை ஏற்றுக்கொண்டது முதலே நான் உமக்குரியவள் ஆயினேன். என் உடல் பொருள் ஆவி யாவும் உம்முடையனவே.

இவ்வாறு பேசிய வண்ணம் பொழுது புலர்வதற்கு முன்னர், அவர் இருவரும் மதன் மஹால் (Madan Mahal) அரண்மனையை அடைந்தனர்.

நிற்க. மறு நாள் ராஜசந்தன், தன் மகள் துர்க்காவதி யைக் காணாமல் அந்தப்புரத்திலும் உத்தியான வனத்தி லும் அவளைத் தேடக் கட்டளையிட்டான். அவன் மனம்

பதைபதைத்தது. "அவள் எங்குப் போயினள்? நேற்றைத் தினம் நீ அவளுடன் இருந்தாயே! உனக்கு அவள் போனவிடம் தெரியாதா? நீ சொல்வது எனக்கு வியப்பைத் தருகிறது," என்று ராஜசந்தன் மோஹன வல்லியைக் கேட்டான். அவனுக்குத் தளபதிஸாமீது சந்தேகம் இருந்தது. மோஹன வல்லி, தளபதிஸாவிற்கு உடந்தையாய் இருந்து துர்க்காவதியை அவனோடு அனுப்பி இருக்கக்கூடுமென்று அவன் அநுமானித்தான்.

துர்க்காவதி காணமற்போன செய்தி அந்நாடு முழுவதும் விரைவிற் பரவியது. அவளைத் தேடிப் பலர் பலவிடங்களுக்குச் சென்றனர். ராஜசந்தன் மனங் கலங்கி இருந்த இடம் விட்டு எழவே இல்லை. ஒரு யோசனையும் அவனுக்குத் தோன்றவில்லை.

அவன் தன் மகளை இழந்து மதி மயங்கி இருக்கையில், அரண்மனை வாயிற் காப்பாளன் ஒருவன் ஓடி வந்து, "மஹாராஜாவே, கூர் மண்டலத்தினின்றும் வந்த இருவர் இந்த மணவோலையைத் தங்களிடம் சேர்ப்பிக்கச் சொல்லிப் போயினர்," என்று கூறி மண ஓலையைக் கொடுத்தான்.

அரசன் அதை வாங்கி வாசிப்பித்தான்; அதில், தளபதிக்கும் தன் புதல்வி துர்க்காவதிக்கும் கூர் மண்டலத்திலுள்ள மதன் மஹால் அரண்மனையில் விவாகம் நடக்குந் தேதி, லக்கினம், நாழிகை முதலியவற்றைக் குறித்து எழுதப்பெற்றிருந்ததை அறிய அவன் உளம் கொதித்தது.

"துர்க்காவதீ! நின் துணிவு இருந்தவாறு என்! பெற்று வளர்த்த தாய் தந்தையரை விடுத்து, என் பகைவனாகிய இழிகுலத்தவனைத் தொடர்ந்து சென்ற உனக்கு நற்கதி வாய்க்குமா! எங்கள் குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக் காம்பே! உன்னால் சந்தல குலத்திற்கே பழி வந்து நேர்ந்ததே! — இனி இப்பழி மாறப் போவதே

இல்லை. நீ என் புதல்வி என்பதை இன்றோடு மறந்தேன்!'' என்று ராஜசந்தன் வாய் விட்டுக் கூறிய வண்ணம் அருகில் இருந்த தூண் ஒன்றிற் சாய்ந்து சிறிது நேரம் தன்னையே மறந்திருந்தான்.

இது நிற்க. கூர்மண்டலத்தின் தலைநகராகிய சிங்களகிரியில் (Singalgarh) தம் அரசன் மணத்தைக் கொண்டாட மாந்தர் அந்நகரை முத்தால் அலங்கரித்தனர்; ஆங்காங்கு வாழை மரங்களும் கமுக மரங்களும் நாட்டினர்; மகர தோரணங்கள் கட்டினர்; அங்கிருந்த மாட மாளிகைகளை வெண்சாந்து பூசி விசித்திரப்படுத்தினர். அப்பட்டணமெங்கும் மங்கள வாத்தியங்கள் முழங்கின. பிற வேந்தர் தத்தம் பரிவாரங்களுடன் அந்நகரில் வந்து கூடினர். ராஜசந்தன் ஒருவனே அங்கு வரவில்லை. அவன் ஏன் வரவில்லை என்று எவரும் கேட்டிலர்.

கிறிஸ்தவப்தம் 1545-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முகூர்த்த நாளும் வேளையும் வந்தன. துர்க்காவதிக்கும் தளபதிக்கும் விவாகம் சிறப்பாக நடந்தேறியது.

தளபதிஸா துர்க்காவதியை மணந்த சில நாளைக்குள் ராஜசந்தன் படையொன்று திரட்டிக்கொண்டு சிங்களகிரி நகரத்திலுள்ள மலைக்கோட்டையை முற்றுகையிட வந்தான். அவன் அவ்விதம் செய்வான் என்று முன்னரே எதிர் பார்த்த தளபதிஸா அவனைத் தடுத்துப் போர் செய்யக் கட்டளை பிறப்பித்திருந்தான்.

ராஜசந்தன் சேனை தன் நகரத்துள் நுழைவதைத் தளபதிஸா தடுத்தான். இரு திறத்தாருக்கும் சிங்களகிரிக்குப் புறத்திலுள்ளதொரு மைதானத்திற் கடும்போர் நடந்தது. அப்போரில் பல வீரர் வெட்டுண்டு மாண்டனர். ஆதித்தன் மேல் கடலில் வீழ்வதற்குள் ராஜசந்தனும் அவனுடைய சேனையும் தோல்வியுற்றோடினர். தளபதி அவர்

களைத் துரத்தியடித்தான்; எதிரியின் சேனை வீரருள் பலரைத் தன் கை வாளால் வெட்டி வீழ்த்தினன். அவன் முயன்றிருப்பின், ராஜசந்தனும் தன் ஆருயிரை இழந்திருக்கக் கூடும்; ஆனால், தளபதி தன் மனைவி துர்க்காவதிக்குத் தான் அளித்த வாக்குறுதியை நினைவு கூர்ந்தான்.

"நான் இப்போது இவனைக் கொன்றால் என் இல்லற இன்பத்தைக் கொன்றவனாவேன்; ஏனெனில், தந்தையை இழந்த என் காதலி—துர்க்காவதி—உயிருடன் வாழாள். ஒரு வேளை அவள் பிழைத்திருப்பினும், என்மீது தீராக் கோபமும் வெறுப்பும் கொள்ளுவாள். மேலும், பிறருக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றாதிருத்தல் வீரருக்கு அழகாமோ! நான் இவனைப் போரில் வென்றேன். இவன் அவமானம் அடைந்தான். இஃதொன்றே போதும். இவனுக்கு இதனினும் கொடிய தண்டனை வேறென்ன இருக்கிறது!" என்று தன்னைத் தானே சமாதானப்படுத்திக் கொண்டு தளபதிஸா போர்க்களத்தை விட்டு நீங்கினன். போர் முடிந்தது. கூர் மண்டல வாசிகள் களிகூர்ந்தார்கள்.

அமர்க்களத்தை விட்டு நீங்கிய தளபதிஸா, எங்கும் தங்காமல் பொங்கிய மகிழ்ச்சியுடையவனாய் மதன் மஹாலை அடைந்து, அங்கு அவன் வரவையே நோக்கிக்கொண்டிருந்த துர்க்காவதியைக் கண்டான்; "வெற்றி நமக்கே!" என்றான்.

துர்க்காவதி:—எந்தையார் கதி என்ன?

தளபதிஸா:—தோற்று ஓடினர். நான் உனக்குத் தந்த வாக்குறுதியை நிறைவேற்றினேன்; உன்பொருட்டே அவர் உயிர்ப்பிச்சை பெற்றார்.

இம்மொழிகளைச் செவியிலேற்றதும் துர்க்காவதி புதியதோர் உவகை பூத்தாள். "முதன்முதல் என்னைச் சிறுத்தை வாயினின்றும் தப்புவித்தீர். இப்போது எந்தையாரைக்

காப்பாற்றி என்னை நிலை நிறுத்தினீர். நான் உமக்கு என்ன கைம்மாறு செய்ய வல்லேன்!" என்றாள்.

தளபதிஸா:—நான் உனக்குப் புரிந்த — நீ நன்மை என்று கருதுகின்ற—நன்மைக்கு நீ செய்துள்ள கைம்மாறு பன்மடங்கு அதிகமென்று நினைக்கிறேன்.

துர்க்காவதி ஆச்சரியத்துடன், "நான் செய்த கைம்மாறு யாதோ?" என்றாள்.

தளபதிஸா:—நீ உன்னையே எனக்குக் கொடுத்தாய்; இதனினும் சிறந்த பேறு யாதுளது?

# 6. இல்லற இன்ப முடிவு

மாளவ குலத்துதித்த துர்க்காவதியும், வெற்றிக் கழல் அணிந்த வேந்தர் வேந்தன் தளபதியும் தம்முள் வேற்றுமையிலராய் மலரும் மணமும் போல ஒரு மனப் பட்டு இல்லறம் நடத்தி வந்தனர். ராஜ்ய நிர்வாகங்களைப் பற்றி ஆலோசிக்கும் வேளைகள் ஒழிந்த காலத்துத் தளபதி லா, தன் அருமை மனைவியைவிட்டு நீங்காமல் அந்தப்புரத்தி லேயே (Harem) இருப்பது வழக்கம். கணவன் தன்னைப் பிரிந்திருக்குஞ் சமயங்களில் சித்திரங்கள் தீட்டுவதிலும், நூல்களைப் படிப்பதிலும், வீணை வாசிப்பதிலும், அந்தப் புர விவகாரங்களை ஒழுங்காக நடத்துவதிலும் துர்க்காவதி காலத்தைக் கழித்து வந்தாள்.

துர்க்காவதி, தயை சாந்தம் பரோபகாரம் நல்லொழுக் கம் முதலிய குணச் சிறப்புக்களினால் தன் கணவனையே அன்றிப் பணியாட்களையும் கூர்மண்டலக் குடிகளையும் மகிழ் வித்தாள்; அந்நாட்டார் அனைவரும் அவளைத் தமது வழிபடு கடவுளாகவே போற்றி வந்தனர்; தளபதியைக்காட்டிலும் பன்மடங்கு அதிகமாக அவளைப் பாராட்டத் தலைப்பட்ட னர்.

துர்க்காவதி அவ்வப்போது தன் கணவனுடன் குதிரை இவர்ந்து வேட்டையாடி வருவாள். அவள் மந்திரக் கிழ வனே போலச் சமயோசித ஆலோசனைகளைத் தளபதிக்குச் சொல்லி வந்தாள். அவள் கூறிய ஆலோசனைப்படி நடந்து வந்த தளபதி நாளடைவில் செங்கோல் மன்னனெனப் புகழ் பெற்று விளங்கினன்.

ஆனால், துர்க்காவதி சிற்சில சமயங்களில் தன் தந்தை நிலையை நினைந்து மனம் நொந்து வருந்துவாள்; எனினும்,

வருந்துவதாகத் தன் கணவனுக்கும் தெரிவியாள். "நான் நன்றி கொன்றவள்; எந்தையார் என்னால் துன்பமுற்று மெலிகிறார். இளமை முதல் இதுகாறும் அவர் எனக்குச் செய்து வந்த நன்மைகளுக்கு நான் செய்த கைம்மாறு இதுவோ! நான் என் செய்வேன்! மண மக்களின் மன மொத்ததே மணம். குடிப்பிறப்பின் மேன்மையொன்றையே பெரிதெனக் கருதி என் மனத்திற்கு விருப்பமற்றவனை விவாகம் புரிந்துகொள்ள எந்தையார் என்னை வற்புறுத்தியது நியாய விரோதமன்றோ! என் தந்தையார் மனத்தைப் புண்படுத்தலாகாது என்று கருதி அவர் கருத்துப்படியே நான் மணம் செய்துகொண்டிருந்தால், அவர் துன்பக் கடலுள் ஆழார். ஆனால், என் வாணாளெல்லாம் வீணாளாகும். நான் துயரத்துக்கு இருப்பிடமாய் அவதிப்படவும் அகால மரணமடையவும் நேரினும் வியக்கவிடமிராது. சிறுத்தைக்கு இரையாவதினின்றும் என்னைக் காப்பாற்றியவரல்லரோ எனக்குகந்த கணவர்! அவரை மறக்க முடியுமா! தீர யோசிக்குங்கால், நான் குற்றமற்றவளே. எந்தையார் வருத்தத்துக்குட் பட்டிருப்பது அவர் செய்த வினையின் பயனேயாகும்," என்று தனக்குள் தானே சொல்லிக்கொள்வாள்; பெருமூச் செறிவாள்.

கற்பில் அருந்ததியையொத்து விளங்கிய துர்க்காவதி, தளபதியை மணந்த சில நாளில் ஆண் குழவியொன்றைப் பெற்றெடுத்தாள். அக்குழவியைச் சதிபதிகள் இருவரும், தாங்கள் ஒருவர் மீதொருவர் கொண்டிருக்கும் ஒப்பற்ற அன்பே குழந்தை உருக்கொண்டு உதித்ததெனக் கருதி, மிக்க ஆர்வத்துடன் போற்றி வளர்த்து வந்தனர்; அக்குழந்தைக்கு 'வீர நாராயணன்' என்ற பெயரிட்டு, சோதிட நூல் வல்லுநரை வருவித்து ஜாதகம் குறித்தனர். அந்த ஜாதகத்தின் பலன் தீதென்பதைச் சோதிடர் அறிந்தும், அதை

அரசனுக்குத் தெரிவியாமல், நல்லன கூறி, அவன் கொடுத்த வெகுமதியைப் பெற்றுப் போயினர்.

நான்கு வருஷ காலம் தளபதியும் துர்க்காவதியும் நல்லறமாம் இல்லறத்தை இனிது நடத்தி வந்தனர். அவர்கள் வாழ்க்கை, துன்பங் கலவாது இன்ப மயமாய் இருந்தது. வீர நாராயணன் வளர்பிறைச் சந்திரனை போல வளர்ந்து, தன் தளர் நடையாலும், மழலை மொழியாலும், முகத்தின் அழகாலும் தாய் தந்தையர் மனத்தை மகிழ்வித்து வந்தனன். எல்லாப்போகமும் துய்த்து வந்த சதிபதிகள் தம்மைப் பாக்கியவந்தரெனக் கருதிக் கவலையற்றிருந்தனர். ஆனல்—இவ்வார்த்தை மிகக் கொடியது; இதை எழுதவும் கை நடு நடுங்குகிறது. சரித்திரம் எழுதப் புகுவோர், உலகம் வேம்பெனக் கருதினும், உண்மை நிகழ்ச்சியைக் கூருதொழி வரோ? கூருதொழியின், அஃது அச்சரிதத்துக்கோர் இழுக்காகுமன்ரே?—அவ்விருவருடைய மகிழ்ச்சிக்கும் இடையூறு நேர்ந்தது. வீர நாராயணனுக்கு மூன்றும் பிராயம் வந்தது. தேச நன்மையையே தன் நோக்கமாகக் கொண்ட மன்னனும்—ஒப்புயர்வற்ற உத்தமனும்—போரிற் புறங்கொடாத வீரனும்—மனைவியின்மீது மாருக் காதல் கொண்ட கணவனும்—புதல்வனைத் தன்னுயிரேபோலப் பாவித்த தந்தையுமான தளபதிஸா, சின்னுள் நோயால் மெலிவுற்று, கால வசத்தால் வீர சுவர்க்கம் எய்தினன்.

இளமையில் எதிர் பாரா வழியில் தன்னருங்காதலனை இழந்த துர்க்காவதி அடைந்த துன்பத்துக்கு அளவே இல்லை. அவள் அடியற்ற மரம்போலப் படிமீது அலறி வீழ்ந்து மூர்ச்சித்தனள். அருகில் இருந்தோர் அவளுக்குச் சைத்யோபசாரங்கள் செய்யச் சிறிது நேரம் சென்ற பிறகு துர்க்காவதி மூர்ச்சை தெளிந்து எழுந்தாள். "அந்தோ! கற்புடைய பெண்ணுயின், இதுகாறும் என்னுயிர் உடலில்

நிலைத்து நிற்குமோ! நான் கொடும்பாதகி! தானாகவே உடலை விட்டு நீங்காத உயிரை நெருப்பிற் சுட வேண்டுவது தான். என் உயிருக்குயிராய் இருந்த காதலர் கண் மூடிய பிறகு நான் உயிர் பெற்றிருப்பதேன்! நானும் அவரோடு உடன் கட்டையேறி மரிக்கிறேன். அவரும் நானும் விண்ணுலகிலாயினும் ஒன்று சேர்ந்து வாழ்வோம்,'' என்று வாய்விட்டழுதாள். தன் மார்பிலும் முகத்திலும் அறைந்து கொண்டாள்; தலைமயிரைப் பிய்த்துக்கொண்டாள். அவள் தன் கண்ணீருள் ஆழ்ந்து மூழ்கி மண்மீது வீழ்ந்து மாழ்கி வெற்றுடலமாயினள்.

ஆறுதல் கூற வந்தவர்கள் அவளைத் தேற்ற முயன்றார்கள்; அவளுக்குப் பல நீதிகளை எடுத்தோதினார்கள்: "அம்மா, துர்க்காவதி, ஊழிற் பெருவலி யாவுள? பிறந்தோர் அனைவரும் இறந்தொழிவது நிச்சயம். நாமும் ஒரு நாளைக்கு இறந்துபோக வேண்டுபவர்தாம். இந்நிலவுலகில் நிலைத்து நிற்பவர் யாவர்? நாம் செய்த வினையை நாமே அனுபவித்துத் தீரவேண்டும். அதைத் தடுக்க முயல்வது வீண் முயற்சியேயாகும். வீர நாராயணன் இளவயதினன்; கூர் மண்டல அரசு உரிமையைப் பெறுவதற்குரியவன். நீ உடன் கட்டையேறின், அவனைப் பரிவுடன் காப்பவர் யார்? அவன் இந்நாட்டை ஆள வேண்டுமென்பது உன் கணவரின் அவாவன்றோ? இறந்தவர் அவாவை நிறைவேற்றுவது உன்னைப் போன்ற உத்தம மனைவியரது கடமையாகும். யாவும் அறிந்த உனக்கு இது தெரியாமற் போனதென்ன?'' என்று பலவாறு கூறினார்கள்.

'கரைப்பவர் கரைத்தால் கல்லும் கரையும்,' என்பதும் பொய்யோ! பிறர் கூறிய அச்செய்தியைக் கேட்டதும் துர்க்காவதி சக கமனம் செய்வதைத் தவிர்த்தாள்.

கூர்மண்டல முழுவதும் துன்பக்கடலில் அழுந்தியது. தளபதி இறந்துபோனதைக் கேட்டு மனம் வருந்தாதார் யாவர்? நீதி நெறி வழாது அரசியல் நடத்தி, யாவரையும் இன்பம் அடைவித்த தளபதிக்குச் செய்ய வேண்டிய பிரேதச் சடங்குகள் நடந்தேறின. கணவனைப் பிரிந்த துன்பத்திற்கு ஆற்ருது, துர்க்காவதி ஏறக்குறைய ஆறுமாத காலம் வரையிற் படுக்கையிற் கிடந்து வருந்தினுள்.

அவள் மனந்தேறி எழுந்த பிறகு மந்திரி பிரதானிகள் வீர நாராயணனுக்குப் பட்டஞ்சூட்ட முற்பட்டார்கள். அவன் சிறுவனுய் இருந்ததால் துர்க்காவதியையே ராஜ்ய காரியங்களை நடத்த அவர்கள் பெரிதும் வேண்டிக்கொண்டார்கள். அவள் தேச நன்மையைக் கருதியும், தன் புதல்வன் உரிமையை உத்தேசித்தும், அவர்களுடைய விருப்பத்துக்கு இசைந்தனள். அது முதல், அவள் சில காலம் அந்தப்புரத்தில் இருந்த வண்ணமே ராஜ்ய விவகாரங்களை மிக்க திறமையுடன் நடத்தி வந்தாள்.

## 7. துர்க்காவதியின் அரசாட்சிச் சிறப்பு

கிறிஸ்தவப் தம் பதினைந்து, பதினாறும் நூற்றாண்டுகளில் இந்தியாவில் அரசியல் நடத்துவது எளிதாயிருக்கவில்லை. அக்காலத்தில், டில்லி மாநகரில் இருந்த முகலாயர் இந்தியா முழுவதையும் ஒரு குடைக்கீழ் ஆள அவாக் கொண்டு, சமயம் நேர்ந்தபோதெல்லாம், ஆங்காங்குள்ள சிறுசிறு ராஜ்யங்களைக் கைப்பற்றி வந்தனர். அன்றியும், இத்தேசத்தில் சிற்றரசர் பலர், தம்முள் ஒற்றுமையில்லாதவராய், ஒருவரோடொருவர் அமராடினர். போர்த்திறமும், வீரமும், படை வன்மையும், துணைவலியும், செல்வவளமும் ஒருங்கு பொருந்தியிருந்தவர்களே பகைவருக்கு அஞ்சாமலும் சுவாதீனத்தை இழவாமலும் செங்கோல் செலுத்த வல்லவர்களாய் இருந்தார்கள்.

இப்படிப்பட்ட காலத்தில், பெண்ணொருத்தி நாட்டைக் காக்க அஞ்சா நெஞ்சுடன் அமர்க்களம் புகுந்து எதிலரை எதிர்த்து நாட்டைச் செழிக்கச் செய்வது எளிய செயலாகுமா!— அவ்விதம் செய்திருப்பின், அப்பெண்ணரசியை நாம் தெய்வமெனப் போற்றுதல் தகுமன்றோ!

அம்முறையில் துர்க்காவதி தெய்வமெனப் புகழத்தக்கவளே; கூர் மண்டலத்தார் இன்றைக்கும் அவளைத் தெய்வாம்சமெனக் கருதி வழிபடுகின்றனர். அவள் தன் புத்தி சாதுரியத்தாலும், நிர்வாகச் சக்தியாலும், போர் வன்மையாலும் கூர் மண்டலத்தை உயர் நிலைக்குக் கொண்டு வந்தாள்; தன்னை எதிர்த்து வந்த பகைவரைப் போர்க் களங்களில் தொலைத்து, மறஞ் சிறந்து விளங்கினாள்.

அந்நாடு மாட்சிமை பெற்று விளங்கிற்று. அக்காலத்திலிருந்த சிற்றரசர் அனைவரும் அவளிடம் பக்தி விசுவாசத்துடன் நடந்துகொண்டனர். அவளைப் பெண்ணென இகழ்ந்துரையாடவும் அவளுடைய நாட்டின்மீது படை எடுத்துச் செல்லவும் அவர்கள் மனந்துணியவில்லை.

இராணி துர்க்காவதி, தன் புதல்வனுக்காகக் கூர் மண்டல நிர்வாகத்தை ஏற்றுக்கொண்ட நாள் முதல், அந்நாட்டிற் பல சீர்திருத்தங்களைச் சிறுகச் சிறுகச் செய்து வந்தாள். அந்நாடு நாளுக்குநாள் பல துறைகளிலும் வளர்ச்சியடைந்து வந்தது.

அவள் ஆடம்பர வாழ்க்கையை அறவே நீத்தாள்; குடிகளின் சேமமே எல்லாவற்றினும் சிறந்ததெனக் கருதினாள்; பல கோயில்களைக் கட்டினாள்; கூர் மண்டலத்தில் ஆங்காங்கு நீர் நிலைகள் ஏற்படுத்தினாள். அவற்றுள் முக்கியமானது "இராணிடால்" (Ranital) என்பது. அதற்கருகில், "சேருடால்" (Cherutal) என்னும் ஒரு நீர் நிலையுண்டு. அது துர்க்காவதியின் பணிப்பெண்ணொருத்தி அவளை வேண்டிக்கொண்டபடி தோண்டப் பெற்றதாம். அந்நகரமாந்தர் சேருடாலின் உற்பத்தியைப் பற்றி அடியில் வருமாறு கூறுகின்றனர்:—

"துர்க்காவதி, இராணிடாலை வெட்ட வேலையாட்களை ஏவியபோது, அவள் பக்கலில் நின்றுகொண்டிருந்த வேலைக்காரி ஒருத்தி அவளை நோக்கி, "தாயே, இவ்வேலை ஆட்கள் நாடோறும் வேலையை முடித்து வீட்டுக்குப் போகையில், இராணிடாலுக்குச் சமீபத்தில் வேறோர் இடத்தில் ஆளுக்கு ஒரு கூடை மண் வெட்டி எடுத்துச் செல்லக் கட்டளையிடுவீராக,' என்று கேட்டுக்கொண்டாள். இராணியும் அப்பெண்ணின் விருப்பத்துக்கிசையச் செய்யும்படி கூலி ஆட்களுக்குக் கட்டளையிட்டாள்.

இராணிடால் வெட்டி முடியும் சமயத்தில் அதற்குப் பக்கத்தில் மற்றொரு நீர் நிலை உண்டாயிற்று. அதற்குச் சேருடால் என்று துர்க்காவதி பெயரிட்டனள்.

துர்க்காவதியின் மந்திரக் கிழவருள் ஒருவனான ஆதூர் (Adhur) என்பவன், தன் பெயரை நிலை நிறுத்த விரும்பி, அரசியின் உத்தரவு பெற்று, ஜபல்பூருக்கு (Jubbulpore) மூன்று கல் தூரத்தில் மிர்ஸாபூர் (Mirzapur) ரஸ்தாவின் அருகில் "ஆதூர்டால்" (Adhurtal) என்ற பெயருள்ள தொரு நீர் நிலை உண்டாக்கினான். அந்நீர் நிலையுள்ள இடமும் ஆதூர்க் கிராமம் என இன்றும் வழங்கப்படுகிறது.

இராணி, குடிகளிடமிருந்து பெறும் வரிப்பணத்தைத் தேச நன்மைக்குரிய வழியிற் செலவிட்டு வந்தாள். கூர் மண்டலம் பகைவரிடம் சிக்கிச் சீர்குலைந்து அழியாவண்ணம் ஒரு பெருஞ்சேனையைத் திரட்டி, அஃது எக்காலத்திலும் எந்நேரத்திலும் பகைவரை எதிர்க்கக் கூடிய நிலையில் இருக்கக் கட்டளையிட்டாள். குடிகளின் அன்பின் பெருக்கும் படை வன்மையும் சேர்ந்தால், நாட்டையாளுவோருக்குப் பகையரசர் அனைவரும் அஞ்சி நடுங்குவார் என்பது சொல்ல வேண்டுமோ? ஒரு தேசத்துக்கு உயிர் நாடியாக விளங்கும் சேனா வீரரின் அதிருப்தியே தேச நாசத்துக்குக் காரணம் என்பதை அவள் நன்கு உணர்ந்திருந்தாள். அதனால், சேனா வீரரின் உடை, உணவு, தேகப் பயிற்சி, சம்பளம் முதலிய வற்றில் துர்க்காவதி மிக்க கவலையும் கருத்துங் கொண்டாள். அவளுடைய ஆட்சியில், கூர் மண்டலச் சைனியத்தில் அமர்ந்த வீரர் அனைவரும் அவளைத் தத்தம் தாயாகவே கருதி வந்தனர் என்றல் பிழையன்று.

அவளுக்கு யானைகளை வளர்ப்பதில் உற்சாகம் உண்டு; ஏனெனில், போர்க் களங்களில் எதிரிகளைத் தாக்கித் தமது துதிக்கைகளால் நெடுந்தூரம் வீசியெறியும் வல்லமை அவற்

றிற்கு உண்டன்றே? மேலும், யானைகளைக் கண்டால் எதிரிகள் அஞ்சி நடுங்குவார்கள். யானைகள் உள்ள நாட்டிற் செல்வம் பெருகும் என்பது அக்காலத்தார் நம்பிக்கை. கூர் மண்டலத்தில் தங்கியிருந்த இரண்டொரு முகம்மதியர், இராணி துர்க்காவதியிடம் ஆயிரத்து நானூறு யானைகள் இருந்தன என்று தம் குறிப்பொன்றிற் கூறியிருக்கின்றனர். போர் ஒழிந்த நேரங்களில் அவ்யானைகளைக் கொண்டு காடுகளிலிருந்து ஆயிரக் கணக்கான மரங்களை நாட்டிற்குக் கொண்டு வந்து சேர்ப்பிப்பது வழக்கம். அம்மரங்கள் அவள் சமைத்த பெருங்கட்டடங்களுக்குப் பயன்பட்டனவென்பர். யானைகளுக்கு வீணே தீனி போடவில்லை. அவைகளால் அந்நாடு அடைந்த நன்மைகள் அளவிலடங்கா.

மாதத்துக்கு ஒரு முறை அல்லது இரு முறை துர்க்காவதி, தன் பரிவாரங்கள் புடை சூழ யானைமீதிவர்ந்து கூர்மண்டலத்தைச் சூழ்ந்திருந்த காடுகளில் வேட்டையாடுவாள்; குடிகளுக்கும் அவர்கள் பயிர்களுக்கும் இடையூறு நேரா வண்ணம் அங்குள்ள கொடிய விலங்குகளைக் கொன்று வீழ்த்துவதை வழக்கமாகக் கொண்டனளேயன்றி, அவள் தன் வாணாள் முழுதும் உணவுக்காகவோ வேடிக்கைக்காகவோ வேட்டையாடினதேயில்லை; மான் முதலியவற்றைக் கொன்றதுமில்லை.

எவரும் அறியாதபடி மாறுவேடம் பூண்டு இராக்காலங்களில் துர்க்காவதி தன் ஆளுகைக்குட்பட்ட நாடு நகரங்களுக்குச் சென்று, ஆங்காங்குள்ள குடிகளின் குறைகளைத் தானே அறிந்துகொண்டு, அவற்றைப் போக்குவாள். வற்கடம் நேர்ந்த காலங்களில் அவள் குடிகளிடத்தில் வரி தண்டுவதே இல்லை.

பயிர்த் தொழில், நெசவுத் தொழில், சித்திர வேலை முதலிய கைத்தொழில்களையும், வர்த்தகம், கல்வி முத

லியவற்றையும், போக்கு வரவுக்குரிய சாதனங்களையும் தன்னால் கூடியவரையில் அவள் வளர்த்து வந்தாள். தேச நன்மைக்குரிய வேறு கலைகளிலும், சேனையைப் பண்ணுறுத்துவதிலும் அவள் மிகுந்த பொருளைச் செலவிட்டாள்; தானும் தன்னைச் சேர்ந்தவரும் அரச போகம் நுகர்வதற்காகப் பொருளை வீணாக்கியதே இல்லை.

நாள்தோறும் இராணி அதிகாலையில் தன் படுக்கையை விட்டெழுந்திருப்பாள்; அரசவையில், தளபதிலா வாழ்ந்திருந்த காலத்தில் அமர்ந்திருந்த அரியாசனத்துக்கு அருகில் அடக்கத்துடன் உட்கார்ந்து, மந்திரி பிரதானிகளுடன் ராஜ்ய காரியங்களை ஆலோசிப்பாள்; அது முடிந்ததும் குடிகளின் முறைப்பாட்டைக் கேட்டு, நடுநிலைமை தவறாமல் நியாயம் வழங்குவாள்.

பிறகு, அவள் அந்தப்புரம் சென்று உணவாதிகள் உண்டு, வீர நாராயணனைத் தன்னருகில் இருத்தி, அவனுக்கு மிக்க ஆர்வத்துடன் கல்வி போதிப்பாள்; மகாபாரத இராமாயண இதிகாசங்களிலிருந்து பல கதைகளை எடுத்தோதுவாள். அரசிளங்குமரனும் மிக்க ஆர்வத்துடன் கல்வி கற்று வந்தான். அவன் தன் அன்னையின் ஆணைப்படி நாள் தோறும் காலையிலும் மாலையிலும் அஸ்திர சஸ்திர வித்தைகளிற் பயிற்சி பெற்றான். அக்காலத்தில் அவனையொத்த அரசிளஞ்சிறாரைக்காட்டிலும் அவன் கல்வியிலும், வில் வேல் வாள் வித்தைகளிலும், தேகப் பயிற்சியிலும், குதிரை ஏற்றத்திலும் மேம்பட்டு விளங்கினான். அவனுடைய மேன்மைக்குக் காரணம் துர்க்காவதியே என்று கூறுவது மிகையாகாது.

தேசபக்தி நிறைந்த ஆதூர் என்னும் அமைச்சன், அரசாங்கத்தை நடத்துவதில் துர்க்காவதியுடன் ஒத்துழைத்து

வந்தான். அவன் தளபதிக்கு உயிர் நண்பன்; துர்க்காவதியைத் தன் தங்கையெனக் கருதினவன். கூர் மண்டலத்தில் குடிகளுக்கு விதிக்கும் வரி வகை யாவும் அவன் அதிகாரத்துக்குட்பட்டிருந்தன; எனினும், அவ்விஷயங்களில் துர்க்காவதியின் ஆலோசனையைக் கேளாமல் அவன் சுயேச்சையாய் நடந்ததேயில்லை; துர்க்காவதிக்கு அவன்மீது நம்பிக்கை இருந்தது. அதற்கேற்ப அவனும் உண்மையுள்ளவனாகவே நடந்துகொண்டான். மேலும், ராஜ்ய சம்பந்தமாய் அவன் அடிக்கடி பிறமன்னரிடம் தூது செல்வது வழக்கம். அவன் தன் புத்திசாதுரியத்தால் பல முறை கூர் மண்டலத்துக்கும், பிற நாடுகளுக்கும் நேர இருந்த போர்களைத் தடுத்தான்.

துர்க்காவதி பதி பக்தியில் சிறந்தவள் என முன்னமே படித்து இருக்கிறோம். அவள் தான் சாகுமளவும் தளபதியை நினைத்து நினைத்து வருந்தாத நாளே இல்லை. கொண்டான் உயிருடன் இருப்பினும் இறப்பினும் மகளிரால் தெய்வமெனத் தொழத் தக்கவனே என்னும் கொள்கையை மேற்கொண்டொழுகிவந்த துர்க்காவதி, கோயில் குளங்களுக்குப் போவதைத் தவிர்த்தாள்; ஆயினும், கோயில்கள் கட்டுவதிலும் குளங்கள் வெட்டுவதிலும், அக்கோயில் பணிகள் தவறாமல் நடந்துவர நிலங்களை மானியமாக எழுதி வைப்பதிலும், அவ்வப்போது உற்சவங்கள் நடத்துவதிலும் அவள் தளர்வடையவில்லை. அதனால், கூர் மண்டல மாந்தர் அனைவரும் தெய்வ பக்தியில் ஈடுபட்டு விளங்கினர். அவள் மத வேறுபாடு காட்டாமல் யாவரையும் ஒரேதன்மையாய் நடத்திவந்தாள். அக்காலத்தில், அந்நாட்டில் வசித்து வந்த இந்துக்கள், முகம்மதியர், பௌத்தர், சமணர் முதலிய மதத்தினர் தத்தம் மதக் கோட்பாடுகளை அச்சமில்லாமல் வெளியிட உரிமை பெற்றிருந்தனர்; மதசம்பந்தமாக அவர்களுக்குள் வேற்றுமை ஏற்பட்டதில்லை. இராணி துர்க்காவதி

பிற மதத்தாருக்கும் தன்னால் இயன்ற பொருளுதவி செய்து வந்தாள்.

மூத்தோர் மாட்டும், நிரம்பிய கல்வி கேள்விகள் உடையோர் இடத்தும், அவளுக்கு மிக்க மரியாதையுண்டு. அவளிடம் தமது கவித்துவத்தைக் காட்டிப் பரிசில் பெற்றுச் சென்ற கவிஞர் எண்ணிலடங்கார். அவள் சிறு பிள்ளைகளையும் ஜீவ ஜந்துக்களையும் சிறந்த அன்புடன் நடத்தினாள்; தான தருமங்கள் செய்தாள். தீர்த்த யாத்திரை செய்ய விரும்புவோருக்குப் பொருளுதவி செய்தனுப்பினாள்.

அரசாங்க உத்தியோகஸ்தர் பரிதானம் வாங்கினாலும், குடிகளை வருத்தினாலும், அவள் மனம் பொறாமல், அவர்களைக் கொடுந்தண்டனைக்குட்படுத்துவாள். அதனால், அவர்கள் கூர் மண்டலக் குடிகளை எக்காரணம் பற்றியும் துன்புறுத்த அஞ்சினார்கள். "குடிகளைப் பாதுகாப்பதற்கென்றே கடவுள் நம்போலியரை நியமித்திருக்கிறார். நாம் அவர்களை மனநொந்து அழச் செய்வது கடவுளுக்கு விருப்பமாமோ? ஏழையழுத கண்ணீர் கூரிய வாளையொக்குமன்றோ?" என்று அடிக்கடி அவள் தன் அமைச்சர் முதலியோரிடம் சொல்வது வழக்கம்.

இத்தகைய அரசியின் ஆட்சிக்குட்பட்ட குடிகள் ஒரு குறையுமின்றிச் சேமமாய் வாழ்ந்து வந்தார்கள் என்பது கூறவும் வேண்டுமோ! அந்நாட்டில் சமாதானம் நிலைத்து நின்றது. நெல் முதலிய தானியங்கள் மிகுதியாய் விளைந்தன. வியாபாரம் பெருகி வந்தது. மக்களின் எண்ணிக்கை பெருகியது; பொய், சூது, கொலை, களவு முதலியவை குறைந்தன. சன்மார்க்கம் பலப்பட்டது.

குடிகள் அனைவரும் தங்கள் அரசியை ஆழ்ந்த அன்புடன் நேசித்தனர்; தங்களைக் காக்க வந்த குல தெய்வம்

என அவளைப் போற்றிப் புகழ்ந்தனர்; அவள் நீடூழி காலம் அரசியல் நடத்த வேண்டுமென்று கடவுளை நோக்கி வாழ்த்தினர்.

இராணி துர்க்காவதி அரசியல் நடத்தி வந்த காலத்தில், (கிறிஸ்துவப்தம் பதினாறும் நூற்றாண்டின் இடைப் பகுதியில்) இந்தியாவில் இருந்த சிறு சிறு ராஜ்யங்கள் ஒன்றோடொன்று சச்சரவிட்டன. அதனால், அவ்விராச்சியப் போர் வீரர் பலர் இறந்துபட்டனர்.

ஆனால் கூர் மண்டலம், இராணியின் இணையற்ற ராஜ்ய பரிபாலனத்தால் பல துறைகளிலும் விருத்தியடைந்து இந்திர லோகமென விளங்கியது. குடிகளின் அமைதியான வாழ்க்கையும், குறைவில்லாத செல்வாக்கும், அரசியிடத்திருந்த அளவற்ற அன்பும் ஒன்று சேர்ந்து, அந்நாட்டின்மீது பகை மன்னர் படையெடா வண்ணம் செய்தன; எனினும், நிலையில்லாத இவ்வுலகிலுள்ள எல்லாப் பொருள்களும் அழியுந் தன்மை வாய்ந்தவை என்பதை எவரும் அறிவர்; அதற்கேற்ப, கூர் மண்டலத்தின் நிகரற்ற அரசியல் மாட்சிக்கும் ஒரு முடிவு நேர்ந்தது. 'அழுக்காறெனு ஒரு பாவி' செய்யும் தீமைக்கும் ஓரளவுண்டோ!

## 8. அக்பரின் சூழ்ச்சி

இராணி துர்க்காவதி, கூர்மண்டலத்தைச் சேர்ந்த சிங்கள கிரியில் நீதி முறை பிறழாது அரசியல் நடத்தி வருகையில் டில்லிமா நகரில் அக்பர் பாதுஷா சிங்காதனம் ஏறினார். அவர் இந்துஸ்தானத்தில் செங்கோல் செலுத்தி வந்த மொகல் சக்கரவர்த்திகளுள் (Mogul Emperors) தலை சிறந்து விளங்கினவர் என்பது உலகமறிந்ததே. அவர் அரசாட்சி செய்யத்தொடங்கியது முதல் இந்தியா முழுவதையும் தமது ஆளுகைக்குட்படுத்தி அமைதியை நிலை நிறுத்த அவாக் கொண்டார்.

தமது அவாவை நிறைவேற்ற அவர் பெரும்படைகளைப் பண்ணுறுத்தினார்; இந்து மன்னரைச் சமயம் நோக்கிப் பணிந்து கப்பங் கட்டுமாறு செய்துகொண்டார். வென்ற நாடுகளை இழவாதபடி அவர் பல விதங்களிலும் குடிகளைச் சமாதானப்படுத்திக்கொண்டார்; மத வித்தியாசம் பாராமல் எல்லாச் சாதியாரையும் ஒரே விதமாக நடத்தி வந்தார்; அரசாங்கத்தில் சாதி முதலிய வேறுபாடின்றி அவரவர் தகுதிக்கு ஏற்ப உயர்ந்த பதவியைக் கொடுத்தார். ராஜா தோடர்மால் (Rajah Todar Mal), ராஜா மான்ஸிங் (Rajah Monsing), பகவன் தாஸ் (Bhagavan Das), வீரபாலன் (Birbal) முதலியவர்கள் அவ்வித உயர்ந்த நிலைமையை வகித்திருந்தவர்களுட் சிறந்தவர்கள். அதுவுமன்றி, அவர் இந்துக்களுக்கும் முகம்மதியருக்கும் விவாகத் தொடர்புண்டாகச் செய்தார். தாமும் ரஜபுத்திர மங்கையரை வரித்து மணந்தார். முகம்மதியர் அல்லாதாரிடம் வசூலிக்கப்பெற்று வந்த ஜிஸியா (Jizia) என்னும் வரியை நீக்கினார்.

அக்பருடைய ராஜ்யம் நாளுக்குநாள் விருத்தியடைந்து கொண்டே வந்தது. இந்தியாவிலிருந்த சிற்றரசர் யாவருஞ் சேர்ந்தும், தனியேயும் அக்பரை எதிர்க்க வல்லமையற்றவராயினர். படை வன்மையும் ராஜ்ய நிர்வாகத் திறமையும் பொருந்தி விளங்கிய அக்பர், வென்ற அரசரைப் பல்லாற்றானும் தம்முடன் ஒற்றுமையுடன் வாழச் செய்துகொண்டார். அதனால், அவர்மீது எவரும் பகைமை கொள்ளவில்லை; அவருக்கு மாறாகப் போர் புரியவும் யாரும் மனந் துணிந்திலர்.

மத்திய இந்தியாவில் இருந்த சிறு நாடுகள் எல்லாவற்றிலும் மேம்பாடடைந்து, சுவாதீனத்தை இழந்துவிடாமல் தலை நிமிர்ந்திருந்த கூர் மண்டல அரசியின் வீர தீரச் செய்கையையும், ராஜ்ய நிர்வாகத் திறமையையும், செல்வப் பெருக்கையும், சேனை பலத்தையும் பிறர் சொல்ல அக்பர் பாதுஷா கேள்வியுற்றிருந்தார். அவர் அவளை இரண்டொரு முறை நேரிற் பார்த்துமிருக்கலாம். ஆனால், அவர் அவளுடன் பேசினதில்லை.

சிற்சில சமயங்களில் அவர் தமது சபையில், "சந்தர்ப்பம் நேருமாயின், பெண்டிர் ஆடவரைக்காட்டிலும் பல துறைகளிலும் சிறந்து விளங்குவர் என்பதற்கு இராணி துர்க்காவதி தகுந்த சாட்சியாவாள். அவ்வீரத்தாயின் அரசியல் முறைமையில் குறை கூறுவார் உளரோ! போரிற் புறங்கொடாத மன உறுதியும், குளிர்ந்த மொழிகளாற் படை வீரரின் மனத்தைக்கவரும் இயல்பும், குடிகளைத் தன் வயிற்றிற் பிறந்த குழந்தைகளைப்போலப் பாதுகாக்கும் அன்பின் மாட்சியும் அவளிடம் ஒருங்கே பொருந்தியிருக்கின்றன," என்று பன்முறை அவ்வரசியைப் புகழ்ந்திருக்கிறார்.

அக்பர் இந்நாடு முழுமையையும் ஒரு குடைக்கீழ் ஆள உறுதி கொண்டிருந்தும் அவர் கூர் மண்டலத்தையும் அதன் அரசி துர்க்காவதியையும் சிறப்பித்தே வந்தார். அதனால்,

அவர் தமது ராஜ்யத்துக்குட்பட்டவையும் கூர் மண்டலத்துக்கருகில் உள்ளவையுமான மாகாணங்களின் (Provinces) தலைவர்களைக் கூர் மண்டல விஷயங்களில் எக்காரணம் பற்றியும் நுழையலாகாதென்று கட்டளையிட்டிருந்தார்.

நாள் ஏற ஏற வெற்றித் தருக்குற்ற அக்பர், கூர் மண்டலத்தையும் தமது வசப்படுத்திக்கொள்ளக் கருதினர். அவ்வெண்ணம் அவர் உள்ளத்தில் தோன்றுவதற்குக் காரணமாயிருந்தவன் ஆஸப்கான் என்பவன்; அவன் வட இந்தியாவின் மத்தியில் அலகபாத்து மாகாணத்திலிருந்த காரா மாணிக்கப்பூர் (Kara Manikpur) நகரத்தில் ராஜப் பிரதி நிதியாய் இருந்தான். அவன் சமயோசித புத்தியும், போர் வன்மையும் பொருந்தியவன்; ஆகையால், அவனிடம் அடிக்கடி அக்பர் ராஜ்ய காரியங்களைக் கலந்து ஆலோசிப்பார். அவர் அவனுடைய வார்த்தையில் மதிப்பு வைத்திருந்தாரென்பது உண்மையே; எனினும், அவன் பேராசை மிகுந்தவன்; பிறர் இன்புற்றிருப்பதைக் காண மனம் பொறாதவன். கூர் மண்டலம் சுவாதீனம் இழந்து, அக்பருடைய சாம்ராஜ்யத்தின் கீழடங்கிவிட்டால், பாதுஷாவின் மதிப்பையும் அதனுல் செல்வப் பெருக்கையும் பெறலாமென்பது அவனெண்ணம்.

அவ்விருப்பத்தை நிறைவேற்ற உறுதிகொண்டு அவன் ஒரு நாள் டில்லிமா நகருக்குச் சென்று, பாதுஷாவைத் தனிமையிற் கண்டு, "மன்னர் மன்னரே, தங்களைக்காட்டிலும் பன்மடங்கு தாழ்ந்த கூர் மண்டல நாட்டரசி, சீரும் சிறப்பும் வாய்ப்ப விளங்குகிறுள். அவளிடம் ஆயிரத்து நானூறு யானைகளும், அளவிறந்த பொருளும், பருத்துக்கொழுத்த ஆடு மாடுகளும், ஆயிரக்கணக்கான படை வீரரும் இருப்பதாகக் கேள்விப்பட்டேன். நானும் அந்நாட்டுட் புகுந்து பலவிடங்களைப் பார்த்து, கேள்விப்பட்டவை யாவும் உண்

மை என்பதைக் கண்டுணர்ந்தேன். ஆஹா! அந்நாடு நீர்வள நிலவளமுற்றுப் பொலிவுடன் விளங்குகின்றது. அந் நாட்டார் யாதொரு கவலையுமின்றி வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் துர்க்காவதியைத் தங்கள் தாயென—ஏன்?—தெய்வ மெனக் கருதி அவள்மீது அளவில்லாத அன்பு பூண்டு ஒழுகுகின்றார்கள். அந்நாட்டுச் சேனா வீரருக்குள்ள திறமை யும் ராஜ விசுவாசமும் சொல்லுந் தரமல்ல,'' என்றான்.

அக்பர் :—நீ கூறியவற்றை நாமும் கேள்விப்பட்டிருக்கி றோம். சிற்றரசர் அனைவரும் அவ்வுத்தமியைப்போல நடப் பின், இத்தேச முழுவதும் சமாதானத்துக்கு உறைவிட மாகத் திகழுமென்பதில் ஐயமுமுண்டோ! அவள் நெடுங் காலம் அரசியல் நடத்திவர ஆண்டவன் அருள் புரிக!

ஆஸப்கான் :—பாதுஷா, இராச்சிய நிர்வாகத்திறமை வாய்ந்த தங்களுக்குத் தெரியாத உண்மை ஒன்றுமில்லை; ஆயினும், அடியேன் கூறத் தக்கது ஒன்றுளது.

அக்பர் :—அஃதென்ன?

ஆஸப்கான் :—பெருந்தகைமையாளராகிய தாங்கள் கூர் மண்டலத்தின் உயர் நிலையை எளிதாக எண்ணி மகிழ் கிறீர்கள்; அவ்விதம் கருதுவது சாம்ராஜ்ய அழிவுக்கு மூல காரணமாகும் என்பதை மறந்தீர்கள்.

அக்பர் :—அஃதெப்படி?

ஆஸப்கான் :—அந்நாட்டை இப்போதே நமக்குக் கீழ்ப் படியச்செய்யாவிடில், துர்க்காவதி செருக்கால் முன்பின் யோசியாமல் தன் நாட்டு எல்லைக்கு அருகிலிருக்கும் நம்மாளு கைக்குட்பட்ட மாகாணங்களைக் கவர முற்படக்கூடும். அவ் விதம் அவள் முயலுங் காலத்தில் நாம் தவிர்க்க முடியாத வேறு காரியத்தில் தலையிட்டுக்கொண்டிருந்தாலும், இருப் போம். அச்சமயம், அவளை எதிர்க்க நமக்கு வல்லமை இருந்தும், வசதியிராதொழியினும் வியப்பதற்கில்லை. ஒரு

வேளை அவள் வெற்றி அடைந்தாலும் அடையலாம். மாகாணம் ஒன்றை இழக்க நேர்ந்தால், இயல்பாகவே நம்முடைய வல்லமையில் ஒரு பகுதியை இழந்தவராவோம்; இஃது உறுதி. நம்மிடமிருந்து அவள் கைப்பற்றிய மாகாணத்தால் அவளுடைய வல்லமை அதிகப்படலாமென்பது யாவரும் அறிந்த உண்மை; ஆதலால், கூர் மண்டலத்தை இப்போதே கைப்பற்றிக்கொள்ள நாம் முற்படவேண்டுமென்பதே என் விண்ணப்பம். தங்கள் விருப்பப்படி செய்யக் காத்திருக்கிறேன்.

ஆஸப்கானின் சாதுரிய மொழிகளைச் செவியிலேற்று அக்பர் அவசரப்பட்டு ஒன்றும் பேசவில்லை. அவர் யோசனையில் ஆழ்ந்திருந்தார். சில நொடிகள் சென்றன. அதுகாறும் அவர், துர்க்காவதிக்கு இன்னலிழைத்துக் கூர் மண்டலத்தைத் தமது இராச்சியத்துடன் சேர்த்துக்கொள்ளச் சிறிதும் எண்ணியதில்லை. குற்றமற்ற பெண்ணரசியை எதிர்த்துத் தாக்கினால் சக்கரவர்த்தியாகிய தமக்கு எக்காலத்தும் நீங்காத பழி நேரும்; ஆகலின், தம்மைப் போன்ற சுத்த வீரருக்கு அஃது அழகன்று என்று எண்ணியிருந்தார்.

ஆஸப்கானின் 'அச்சாணி அன்ன சொல்,' அவர் மனத்திண்மையை மாற்றியது. மேற்கூறிய சம்பாஷணையின் பயனாக அக்பர், கூர் மண்டலத்தை எவ்விதத்தாலாகிலும் தமது வசப்படுத்திக்கொள்ள உறுதி கொண்டார். துர்க்காவதியின்மீது அவருக்குப் பொறாமையும் பகைமையும் காரணமின்றியே தோன்றலாயின.

அக்பர், பகைவரிடமுள்ள நற்குணச்சிறப்புக்களை மதிக்கும் ஒப்பற்ற பெருமை வாய்ந்தவர்; சாந்த குண சீலர்; தயாள புருஷர்; நீதி நெறி தவறாதவர்; ஆண்டவன் இணை அடிகளைத் தஞ்சமென அடைந்த பக்தர். அத்தகைய மன்னரும், ஆஸப்கான் காட்டிய ஆசை வலையிற் சிக்கினர்; நீதி

முறையினும் தந்நலமே பெரிதெனக் கருதிவிட்டார். "'இராணி துர்க்காவதியைப் போரில் தொலைப்பது நீதிக்கு மாறன்று; அவளுடைய நாட்டைக் கைப்பற்றுவிடில் நமது சாம்ராஜ்யத்துக்கே கெடுதி நேரும்,' என்று ஆஸப்கான் கூறுவது உண்மையே. 'வெள்ளம் வருமுன் அணை கோலி வைப்பது நன்று,' எனப் பெரியோர் கூறுவர். இப்போது அவள் நல்லவளாய் இருக்கலாம். ஆனால், பிற மன்னர் ஒன்று சேர்ந்து அவளுடைய துணைகொண்டு நம்மை ஒரு காலத்தில் எதிர்க்கக் கூடும். ஒற்றுமையால் முடியாத காரியமும் உலகில் உளதோ? நாம் நமது நிலைமையைப் பல வழிகளினும் காத்துக்கொள்ள வேண்டும். செல்வப் பெருக்கும், சேனைபலமும், சுவாதீனமும் பொருந்திய நாடொன்று நமது சாம்ராஜ்யத்துக்கு அருகில் இருப்பின், அதனால் நமக்குக் கேடு நேருவது உறுதி. ஆதலால், நாம் கூர் மண்டலத்தையும் அதன் அரசியையும் தலையெடுக்கவொட்டாமல் தடுத்துவிட வேண்டும்," என்று முடிவு செய்துவிட்டார்.

அக்பர் ஆஸப்கானை நோக்கி, "நீ கூறியது சிறந்த யோசனையே; நாம் அவளுடைய நாட்டை இப்போது கைப்பற்றக் கூடுமோ?" என்று வினவினர்.

ஆஸப்கான்:—தடையில்லாமல் கைப்பற்றலாம்; எத்துணை வல்லமை இருப்பினும், துர்க்காவதி ஒரு பெண்தானே! நம்மைத் தடுக்க அவளால் இயலுமோ! அவளுடைய சேனைபலமும், துணைவலியும் நம்முன் எவ்வளவு?

அக்பர்:—அப்படியாயின், நீ இன்று முதல் கூர் மண்டலத்தைக் கைப்பற்றுவதற்கான முயற்சி செய். யாவும் இரகசியமாக நடக்கட்டும். அதற்கு வேண்டிய பொருளுதவி செய்கிறோம்; என்றாலும், அவசரப்பட்டு ஒரு காரியமும் செய்யலாகாது. நிதானத்தினும் சிறந்தது ஒன்றுமில்லை. அதனாற் கை கூடாததும் எதுவும் இல்லை.

ஆஸப்கான் :—அரசர்க்கரசரே, அடியேன் உமது சித்தப்படி நடக்கக் காத்துக்கொண்டிருக்கிறேன். ஆண்டவன் அருளால் யாவும் நன்மையாக முடியும் என்பது என் முழு நம்பிக்கை.

சில நற்குணங்களோடு பொறாமை, பேராசை, செருக்கு முதலிய துர்க்குணங்களும் பொருந்தி விளங்கிய ஆஸப்கான், தன் நுண்ணறிவால் அக்பருடைய மனத்தைக் கலைத்து, அவர் தனக்கிட்ட ஆணையின்படி நடக்க உறுதி கொண்டவனைப் போல நடித்தான்; அன்றைத் தினமே டில்லிமா நகரை விட்டு அலகபாத்து மாகாணத்துக்குப் பயணப்பட்டான்.

அக்பர் ஆஸப்கானின் சதியாலோசனைக்கு இசைந்தார்; துர்க்காவதியின் சமாதான வாழ்க்கையைக் குலைக்க உறுதி கொண்டார்; அதனால், தீராப் பழியைத் தமதாக்கிக்கொண்டார். அவருடைய ஏகாதிபத்தியமே களங்கமடைந்தது என்பர் சரித்திரவாசிரியருட் சிலர்.

துர்க்காவதி அக்பருக்கு ஒரு தீங்கும் செய்யவில்லை; செய்ய நினைக்கவுமில்லை; ஆனால், தன்னாட்டின் முன்னேற்றத்தைக் கருதி அவள் செய்த சீர்திருத்தங்களும், சேர்த்து வைத்த பொருளும், அவளுக்கிருந்த யானைக் கூட்டங்களும் அவளுடைய உயிருக்கே உலை வைத்தன. அவள் புகழ் பெறுமலும் கூர் மண்டல நாடு வன்மை பெறுமலும் இருந்திருந்தால் அக்பர் அவளையும் அவள் நாட்டையும் பொருட்படுத்தியிரார் என்பது உண்மை. வினைப் பயனை வெல்ல யாரால் முடியும்?

## 9. இராணியின் கலக்கம்

அக்பர் பாதுஷா, ஆஸப்கானேடு செய்த சூழ்ச்சியை எவ்விதமாகவோ அறிந்துகொண்ட துர்க்காவதி மன வருத்தங் கொண்டாள். "என்னே, பாதுஷாவின் பேராசை! பெண்பாலாகிய என்னுடன் போர் தொடுப்பது வீரரெனப் பெயர் படைத்த அவருக்கு அழகாகுமா! சந்தல வமிசத்துதித்த நானே, வஞ்சசண்டைக்கு அஞ்சுவேன்! அவருக்கு அடங்கி நடக்கவும் அவரை அடைக்கலமாக அடையவும் நான் மனம் துணியேன். அவர் என்னை எதிர்த்து வந்தால், தகுந்த புத்தி கற்பிக்க விரும்புகிறேன். என்னை அபலை என்று கருதிவிட்டார் போலும் பாதுஷா! (மௌனம்) அவர் எனது நாட்டைக் கவர்வதைப்பற்றி நான் அஞ்சவில்லை. ஆனால், இதுவரையில் அமைதியோடு வாழ்ந்து வந்த என் குடிகள் வீணே மனம் நொந்து வருந்துவார்களே என்னும் துக்கமே என்னைப் பெரிதும் வருத்துகிறது. அதற்கு நான் என் செய்வேன்!" என்று தனக்குள் தானே கூறிக்கொண்டாள்.

அவள் அக்கணமே தன் தளகர்த்தனை வருவித்து, "ஐயா, இன்றுமுதல் நமது சேனையைப் பண்ணுறுத்துவீராக! எங்கும் போர் முழக்கமே காதிற் படுகிற இக்காலத்தில் நாம் வாளாவிருப்பது நன்றன்று; நம்மீது பொறாமை கொண்டு எதிரிகள் நம்மைத் தாக்கினுல் அச்சமயத்தில் நாம் பயிற்சி பெற்ற படை வீரரைச் சேர்ப்பது கூடாத காரியமாகும்," என்றாள்.

படைத்தலைவன், "தங்கள் கட்டளைப்படி நடப்பது என் கடமை," என்று சொல்லி, அவ்விடம் விட்டகன்றான்.

துர்க்காவதி அக்பரின் சதியாலோசனையைப்பற்றி ஆதூர் என்னும் மந்திரிக்குமட்டும் தெரிவித்தாள். அவ்வார்த்தையைக் கேட்ட அமைச்சன், "அம்மா, அது பொய்யாயிருக்கலாம் என நினைக்கிறேன். அக்பர் தீர புருஷர். அவர் முன் யோசனையுடையவர்; ஆய்ந்தோய்ந்து பாராமல் எக்காரியத்தையும் செய்யவே மாட்டார். மேலும், பெண் மக்களைக் கௌரவமாக நடத்தும் இயல்புடையவர்; இந்துக்கள்மீது அவருக்குப் பிரியமுண்டு," என்றான்.

துர்க்காவதி :—அமைச்சர் தலைவரே, நீர் கூறியபடியே அவரை நானும் இதுவரை நினைத்து வந்தேன்; எனினும், அம்மன்னரைப் பேராசைப் பேய் பலமாய்ப் பிடித்தாட்டி வருகிறது. அதை அவரிடமிருந்து ஓட்டுவதற்கே கடவுள் என்னைப் படைத்திருக்கிறார் போலும்!—அவர் நமது கூர் மண்டலத்தின்மீது படையெடுத்து வருவது உறுதி எனக் கேள்விப்பட்டேன். அச்செய்தியைத் தெரிவித்தவரிடம் எனக்கு நம்பிக்கையுண்டு; ஆதலால், நாம் விழிப்புடன் இருக்க வேண்டும். இச்செய்தியை நான் இதுவரையில் உம்மைத் தவிர வேறெவருக்கும் தெரிவிக்கவே இல்லை. இதை நமது நாட்டார் அறியின் அவர்கள் கவலையுறக்கூடும். இது பிறருணரா வண்ணம் நமக்குள்ளேயே காக்கப்பட வேண்டும்.

ஆதூர்:—அம்மா, நான் இச்செய்தியை எக்காரணம் பற்றியும் எவரிடமும் வெளியிடேன். தாங்கள் கேள்விப்பட்டது உண்மையோ அன்றோ என்பதைத் தகுந்தவர்களைக் கொண்டு விசாரித்தறிகிறேன்.

இவ்வாறு அரசியும் அமைச்சனும் சிறிது நேரம் வரையிற் பேசிக்கொண்டிருந்துவிட்டு, எதிர் பாரா நிலையில் அக்பர் படையெடுத்தால் அதைத் தடுப்பது எவ்விதம் என்று நெடு நேரம் ஆலோசித்தனர்.

துர்க்காவதி :—மந்திரி! அக்பர் கூர் மண்டலத்தின் மேல் படையெடுத்து வருவது உண்மையானால், நாம் என்ன செய்வது?

ஆதூர் :—நான் பாதுஷாவிடம் நேரிற் சென்று அவ்விதம் செய்வது நியாய விரோதமாகும் என்பதை அவருக்கு எடுத்துக் கூறித் தடுக்க முயற்சி செய்கிறேன்.

துர்க்காவதி :—அது தக்க செயலேயாம்.

ஆதூர் :—இதில் நாம் நால்வகை உபாயங்களில் முதல் மூன்றும் முயல்வது தக்கதாகும். இம்மூன்று உபாயங்களும் பயன்படாமற் போயின், தண்டோபாயமே வெற்றி அளிக்கக் கூடியதாகும்.

துர்க்காவதி :—கூர் மண்டலம்—என்னருங்கணவரின் ஆளுகைக்குட்பட்டிருந்த நாடு—என் புதல்வன் இனி ஆளப் போகும் தேசம்—திருமகளின் உறைவிடமெனப் பொலிவுற்றுவிளங்கும் நிலம்—மொகலாயரிடம் சிக்குவதைக்காண என் மனம் பொறுக்குமோ! என்னுடலில் உயிர் தங்கியிருக்கும் வரையில் அக்பர் பெருமுயற்சியால் வெற்றி பெறார் என்பது உண்மை. சந்தல வமிசத்தைச் சேர்ந்தோரின் உடலிற் பாயும் உதிரம், வீரத்தின் சத்து என்பதை அறியாதார் யாவர்!—அத்தகைய உதிரப் பெருக்கினாலல்லவோ நம் தலைமையும் சிறப்பும் பகைவருக்கு விளங்கும்!

ஆதூர் துர்க்காவதியின் உள்ளத்தில் பொங்கித் ததும்பிய தேச பக்தியை மெச்சிப் புகழ்ந்தான். பிறகு, "இத்துணை வீரம் பொருந்திய அரசியின் நாடு மேன்மையடையுமென்பதில் ஐயமுண்டோ!" என்று கருதிச் சிறிது நேரம் தன்னையே மறந்து நின்றான்.

துர்க்காவதி :—வீர நாராயணனுக்காகப் பதினைந்து வருஷ காலம் அரசியல் நடத்தி வந்த என்னை எவரும் போருக்கிழுக்கவில்லை. அதனால், கூர் மண்டலம் வளமையும்

செழுமையும் உற்றது. என் குடிகள் யாவரும் கவலையின்றி வாழ்ந்து வருகின்றனர்; அவர்களுடைய இனிய வாழ்க்கையைக் கெடுக்க முயலும் அக்பரும் அவரைச் சேர்ந்தோரும் கடவுள் தண்டனைக்குரியவராவர் என்பது திண்ணம்.

ஆதூர் :—அவர்கள் எக்கதிக்கு ஆளாயின் நமக்கு என்! அவர்கள் எண்ணம் பயன் பெறுவண்ணம் நாம் இன்று முதல் போருக்கு ஆயத்தமாயிருப்பது இன்றியமையாததாகும்.

துர்க்காவதி :—அது சரி; நான் சிறிது நேரத்துக்கு முன் நமது தளகர்த்தரை வருவித்துப் படைவீரரைப் பயில்வித்துப் போருக்கு ஆயத்தமாயிருக்கக் கட்டளையிட்டேன். ஆனால், பாதுஷாவின் தீய எண்ணத்தை அவருக்குத் தெரிவிக்கவில்லை.

ஆதூர் :—நல்ல காரியம் செய்தீர்!

துர்க்காவதி :—நம்மாலியலுவதை நாம் செய்துவிட வேண்டும். ஈசன் செயல் எப்படியோ! பார்ப்போம்.

ஆதூர் :—ஆம். எவனொருவன் தான் மேற்கொண்ட காரியத்தில் பயனைக் கருதாது இடை விடாமல் உழைக்கின்றானோ, அவனுக்கு ஆண்டவன் அருள் துணை நிற்கும் என்பதை நாம் கண் கூடாகக் காண்கிறோம்.

இராணியும் ஆதூரும் போருக்குச் சித்தமாயிருப்பதே தக்கதென்று முடிவு செய்துகொண்டு, தத்தம் இருப்பிடம் அடைந்தனர். ஒரு வாரம் சென்றது. ஆதூர் உருக்கரந்து, மாணிக்கபுரம் சென்று, அங்கு இரண்டொரு நாள் தங்கி இருந்து ஆஸப்கானின் நடவடிக்கைகளைக் கவனித்தான். அவ்வீரன், பாதுஷாவின் ஆணைப்படி சிறிது நேரத்தையும் வீணாகக் கழிக்காமல் மிக மந்தணமாகப் போருக்கு ஆயத்தஞ் செய்த வண்ணம் இருப்பதைக் கண்டான். ஆதூர், ஒற்றர் இருவரை அனுப்பி எவருடன் போர் செய்ய இம்

முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றனவென்று அறிந்து வரக் கட்டளையிட்டான்.

அவ்விரண்டு ஒற்றரும் நாற்றிசைகளிலும் சென்று சாமர்த்தியத்துடன் விசாரித்தனர்; கூர் மண்டலத்தின்மீது படையெடுக்க ஆயத்தம் செய்வதாகத் தெரிந்துகொண்டனர்; அச்செய்தியை ஆதாருக்கு அறிவித்தனர்.

அதன் பிறகு, ஆதார் மாணிக்கபுரத்தை விட்டு வெளிப் போந்தான்; தான் கண்டும் கேட்டும் தெளிந்த செய்தியை இராணியிடம் தெரிவித்தான்.

துர்க்காவதி:—அமைச்சரே, நாம் இப்போது செய்யத் தக்கது யாது? நம் படை வீரருக்கு ஆறு மாத காலத்திற்கு வேண்டிய அளவு உணவுப் பொருள்கள் கையில் உண்டு. படைக்கலப் பயிற்சி அதி தீவிரமாய் நடந்தேறி வருகிறது.

ஆதார்:—அக்பர் இந்நாட்டில் படையெடுத்து வருவதற்கு முன், நான் அவரிடம் தூது சென்று உமக்கும் அவருக்கும் சமாதானம் உண்டாக்க முயற்சி செய்கிறேன்; தங்கள் கருத்து யாதோ?

துர்க்காவதி:—சண்டையைத் தவிர்ப்பதே என் கருத்தாகும்.

ஆதார்:—நான் நாளைய தினமே டில்லிமா நகர் செல்லுகிறேன். தாங்கள் போர்க்குரிய முயற்சிகளை நிறுத்தி வைக்க வேண்டா. பாதுஷா நமது வேண்டுகோளுக்கு இசைவார் என்பது நிச்சயமில்லையே!

துர்க்காவதி:—ஆம்; நீர் நாளைக்கே புறப்படலாம். இனி நாம் கால தாமதம் செய்தல் தகாது. தாமதமென்னும் கள்வன் காலப்பொருளைக் கொள்ளைகொண்டு ஓடுவான். அத்தீயோனால் நேரும் துன்பங்கள் பலவாகும்.

துர்க்காவதியின் உத்தரவு பெற்று ஆதூர் மதன் மஹாலை விட்டு வெளியேறினன். பிறகு, துர்க்காவதி அங்கிருந்த ஓர் ஆதனத்தில் அமர்ந்து யோசனையில் ஆழ்ந்தாள். பல எண்ணங்கள் ஒன்றன்பின் ஒன்ருக அவள் மனத்துட் புகுந்து, அவளைப் பெரிதும் துன்பத்துக்குள்ளாக்கின.

வெளியிற் சென்றிருந்த வீர நாராயணன் அச்சமயம் துர்க்காவதி அமர்ந்திருந்த அறையுள் நுழைந்தான். கவலையுற்ற அவள் முகத்தைக் கூர்ந்து கவனித்தான். அவன் அவளருகிற் சென்று, "தாயே, உமக்கென்ன வருத்தம்?" என்ருன்.

அது வரையில் அவன் வரவை அறியாத துர்க்காவதி, தன் கண்களைத் திறந்து அவனைப் பார்த்து, "வீர நாராயணு, எனக்கு வருத்தமொன்றுமில்லை," என்ருள்.

வீர நாராயணன் :—அம்மா, நீங்கள் உங்கள் புதல்வனிடம் ஒளித்துப் பேசுதல் தகாது. உங்கள் முகம் ஒளியிழந்திருந்ததை இதுகாறும் நான் கண்ணுற்றதில்லையே! இன்று வேறுபாடடைந்திருப்பதேன்?

துர்க்காவதி, துக்கத்தால் சிறிதுநேரம் ஒன்றும் பேசாதிருந்தாள். வீர நாராயணன் அவளுடைய வருத்தத்துக்குக் காரணம் யாதென அவளை வற்புறுத்திக் கேட்டான்.

துர்க்காவதி :—என்னருமைப் புதல்வ, உனக்காக நான் ஜாக்கிரதையோடு ஆண்டு வந்த இந்நாட்டைக். காரணமின்றி வௌவ அக்பர் பாதுஷா எண்ணியிருப்பதாகக் கேள்விப்பட்டேன். எனக்கிருந்த மனவமைதி அறவே ஒழிந்தது. 'வெண்ணெய் திரண்டு வருகையில் தாழி உடைந்து விடுவதே'போல நீ இந்நாட்டுரிமையை ஏற்றுக் கொள்ளத் தக்க வயதடைந்த இச்சமயத்தில், அக்பர் இதைத் தம் கைவசப்படுத்திக்கொள்ளச் சூழ்ச்சி செய்து வருவதை நினைக்க நினைக்க என் உள்ளம் கரைந்துருகு

கிறது. அவர் நம்மை எதிர்க்கப் பெருஞ்சேனையுடன் வரு கையில் நாம் தடுக்காமல் சும்மாவிருக்கப் போவதில்லை; ஆயினும், நமக்கும் அவருக்கும் நிகழும் அமரில் வெற்றி யாரைச் சேருமோ எனக் கவல்கிறேன்; திருவருட் செயல் எப்படியிருக்கிறதோ! ஒரு வேளை நாம் எச்சரிக்கையோடு இருந்தும் அவர் வெற்றியடைந்தால், நான் இதுகாறும் உனக்காக வருந்தி உழைத்துப் பாதுகாத்து வந்த கூர் மண்டல உரிமையை நீ இழந்துவிட நேருமே என்று பெரிதும் அஞ்சுகிறேன். அவ்விதம் இந்நாட்டை இழப்பதைக்காட்டிலும் நான் என் உயிரைத் துறப்பது சிறப்பன்றோ? என் கண்ணெதிரே நீ இராச்சிய உரிமையின்றி அலைந்து திரிய நேரின், நான் அதைக் கண்டு எவ்வாறு பொறுத்திருப்பேன்!" என்று தழுதழுத்த குரலிற் கூறினாள். அவள் முகம் துக்கத்தாற் சிவந்தது. அவளையறியாமல் அவள் கண்களில் நீர் கலகலவென்று ஒழுகியது.

பிறந்தது முதல் இதுகாறும் வீர நாராயணன் தன் அன்னை மனவருத்தத்துடன் கண்ணீர் வடித்ததைக் கண்டிலனாகலின், மிக்க மனக்கலக்கம் அடைந்தான்; ஆயினும், அவன் தைரியத்தைக் கைவிடவில்லை. "அம்மா, நாளைக்கு வரப்போகும் நன்மை தீமைகளைக் குறித்து நாம் இன்றைக்குத் துக்கிப்பது அறிவுடைமையாகாது. தவறாமல் நிகழும் என்று நம்பியிருப்பன நிகழாதொழியினும் ஒழியும். அக்பர் மனந்திருந்தி நமது நாட்டின்மீது படையெடுத்து வருவதைத் தவிர்ப்பினும் தவிர்ப்பர். அவர் அவ்வாறு தவிர்ப்பின் நாம் இன்றைக்கு அதைப்பற்றி நினைத்து மனம் வருந்துவது வீணன்றோ? ஆதலால், நாம் நமது கடமையைச் சரிவரச் செய்து வருவோம்; அதன் பலனைக் குறித்து நினைத்தல் கூடாது. யாவும் ஈசன் செயல் என்று இருந்து விடுவது உத்தமமாகும். அது துன்பத்துக்கு இடங்

தராது,'' என்று அவ்விளங்காளை தன் தாய்க்குத் தேறுதல் சொன்னான்.

துர்க்காவதி மறுமொழி கூறாதது கண்டு, அவன் அவளருகிற் சென்று, மறுபடியும், "அக்பருக்கு நாம் அஞ்சுவதேன்? அவரும் நம்மைப்போன்ற அரசர்தாமே? அவர், பிறக்கும்போதே வெற்றியையும் தம்முடன் கொண்டு வந்தாரோ? வெற்றி அவருக்கே உரியது என்று எவர் துணிந்து கூறவல்லார்? அவருக்கு முன்பிருந்த வென்றிமறஞ் சிறந்த வீரர் எத்தனையோ பேர் போர்க்களத்தில் தோல்வியுற்றோடினர்; வெட்டுண்டு இறந்தனர். மக்கட் பிறவி எடுத்த ஒவ்வொருவரும் உயிருடன் இருக்கும் வரையில் நம்பிக்கையை இழக்கலாகாது. அக்பரின் சேனை பலம் என் மன உறுதியின் முன் எவ்வளவு! குடிகளின் அன்பே நமது நாட்டுக்கு அரணாகும்; அஃதொன்றே கூர் மண்டலத்தைக் காக்கப் போதுமானதாகும்,'' என்றான்.

கண்ணின் கருமணியன்ன வீர நாராயணன் கூறிய வீர மொழிகளைக் கேட்டதும் துர்க்காவதியின் துக்கம் பறந்தோடியது. அவள் அன்பின் பெருக்கால் அவனைத் தழுவி, "என் கண்ணே, உந்தையின் வீரமும் தீரமும் உன்னிடம் இருப்பதையறிய என் உள்ளம் களிப்படைகின்றது. இத் தகைய வீரமைந்தனைப் பெற்று வளர்த்த நான் இனி மனத் தளர்வடையேன்; அக்பரைப்போன்றவர் ஆயிரவரை ஆண்மையுடன் தாக்குவேன்,'' என்றாள்.

வீர நாராயணன் தாயிடம் விடை பெற்றுத் தன்னிருப்பிடஞ் சென்றான்.

# 10. ஆதூர் தூது செல்லல்

இது நடந்த மறு நாள் விடியற்காலையில் ஆதூர், இராணியைக் கண்டு, அவளிடம் தூதுக்குரிய செய்திகளைப் பற்றி நெடுநேரம் ஆலோசித்தான்.

துர்க்காவதி :—அமைச்சரே, எப்படியாயினும் நீர் நமது மதிப்பையும் மானத்தையும் காப்பாற்றும் வழியிற் சமாதானம் பெற முயற்சிசெய்யும். 'மானம் இழந்தபின் வாழாமை முன்னினிது,' என்னும் ஆன்றோர் வாக்கு உமக்குத் தெரியாததன்று. அக்பருக்கு இராச்சிய நிர்வாக முறைமைகளை எடுத்துக் கூறி நீர் அவருடைய உறுதியை மாற்ற வேண்டும். அக்பர் மிக்க தந்திரசாலி. நீர் அவரிடம் ஜாக்கிரதையுடன் நடந்துகொள்வது அவசியமாகும்.

ஆதூர்:—தாயே, நமது நாட்டுக்குத் தீயனவற்றைச் செய்யத் துணியேன். நியாய முறையில் சமாதானம் ஏற்படக்கூடிய வழிகளை நான் ஒரு போதும் நெகிழ விடேன்.

துர்க்காவதி :—சமயோசித புத்தியும், ராஜ தந்திரமும், சொற் சாதுரியமும் ஒருங்கு அமைந்துள்ள உமக்கு நான் கூற வேண்டுவது யாதுளது?

ஆதூர் :—அம்மா, சூரியோதயமாகிறது. நான் புறப்பட வேண்டும்.''

துர்க்காவதி, "புறப்படலாம்,'' என்றாள்; வழிச்செலவுக்கு வேண்டிய பொருளுதவி செய்து, அவனை வாழ்த்தி அனுப்பினாள்.

ஆதூர், அரசியின் உத்தரவு பெற்று, ஆறு வீரருடன் குதிரை இவர்ந்து, நருமதையாற்றங்கரை ஓரமாகவே டில்லி நோக்கிச் செல்லலாயினன்.

ஆதூரும் உடன் சென்ற குதிரைப்படை வீரர் அறுவரும், ஆங்காங்குக் குறுக்கிட்ட காடு, மலை, ஆறு, கணவாய்

முதலியவைகளைக் கடந்து, ஒரு வாரத்துக்குள் டில்லி நகரை அடைந்தார்கள்; அன்று முழுவதும் பழமை வாய்ந்த அந்நக ரைச் சுற்றிப் பார்த்தார்கள்; அங்குக் கட்டப் பெற்றிருந்த அழகிய கட்டடங்களையும், அகன்ற வீதிகளின் நேர்மையை யும், கடைத் தெருக்களின் ஒழுங்கையும், நகர மாந்தரின் நடையுடை பாவனைகளையும், கங்கா நதியின் தோற்றத்தை யும் கண்ணாரக் கண்டு களிப்புற்றார்கள். ஆதூர், தான் டில்லி நகரத்துக்கு வந்திருக்கும் செய்தியைப் பாதுஷாவுக்குத் தெரிவித்தான். அவர் மறு தினம் வந்து தம்மைக் காண அவனுக்கு அனுமதி தந்தார்.

மறுநாள் பொழுது புலர்ந்து சில நாழிகைகள் சென்றன. ஆதூர் நல்லுடைகள் அணிந்து இரண்டு குதிரைப் படை வீரர் தன்னைப் பின் தொடரப் பாதுஷாவின் சபையை நண்ணி, அவரைப் பக்தி விநயத்துடன் வணங்கி நின்றான். புன்னகை தவழ்ந்த முகத்தோடு அவர் ஓர் ஆசனத்தைக் குறிப்பித்து, அதில் அவனை அமர்வித்தார்.

அக்பர் கொலுவீற்றிருந்த சபையில் அவருடைய வலப் பக்கத்தில் ராஜா தோடர்மால், அபுல் பைஜி, அபுல் பாஸில் முதலியோரும், இடப்பக்கத்திற் சில முகம்மதியப் பிரபுக் களும் உட்கார்ந்திருந்தார்கள்.

அக்பர் தம்மை நாடி வந்த ஆதூரை நோக்கி, "அமைச் சரே, தாங்கள் இங்கு வந்த நோக்கம் யாது?" என்று வினவினர்.

ஆதூர், தன் இருக்கையை விட்டெழுந்து நின்று, "மண்டலாதிபதி, மன்பதைகள் உய்யும் பொருட்டு இவ் வவனியில் அவதரித்த மகானுபாவரே, கூர்மண்டலவரசி யாராகிய துர்க்காவதி அம்மையார் அடியேனை நும்பால் முக் கியமான சில விஷயங்களைத் தெரிவித்துவரத் தூது விடுத்த னர்," என்றான்.

அக்பர்:—அவை யாவை ?

ஆதூர்:—சின்னாட்களுக்குள் தாங்கள் கூர் மண்டலத்தின்மீது படையெடுத்து வரப்போவதாக ஒற்றர் வாயிலாக இராணியார் அறிந்தனர். அவருக்கு அதிற் சிறிதும் நம்பிக்கை இல்லை. தெய்வ பக்தியில் ஈடுபட்டு யாவர்க்கும் நன்மை செய்வதையே நோக்கமாகக் கொண்டுள்ள தாங்கள் அப்பெண்ணரசியார்மீது வீணே போராடத் துணிவுகொள்ள மாட்டீர்கள் என்றும், அவர் தங்களுக்கு எந்தவழியிலும் தீச்செயல் ஒன்றும் செய்ததில்லை என்றும் கூறிப் படையெழுச்சியின் உண்மையை அறிந்துவர என்னை அனுப்பினார்.

அக்பர்:—கூர் மண்டலத்தை நமது சாம்ராஜ்யத்துடன் சேர்த்துக்கொள்ளுவதே நம் நோக்கம். இராணி துர்க்காவதிமீது நமக்கு எந்த வகையிலும் பகைமையில்லை. அவருடைய அரசியல் முறைமையில் யாம் குறை கூறக்கூடியது எதுவுமில்லை; ஆயினும், பூமி தேவியின் இதய கமலமென மிளிரும் இந்நாடு முழுவதையும் ஒரு குடைக்கீழ் ஆள அவாக்கொண்டுள்ள நாம் அவ்விதம் செய்யத் துணிந்தோம்.

இவ்வார்த்தைகளைக் கேட்ட ஆதூர் சிறிது நேரம் தலை குனிந்த வண்ணம் வாளா நின்றான்; பிறகு ஆதூர் தன் தலையை நிமிர்த்து, அக்பரை மிக்க அன்புடன் நோக்கி, “இரக்கமே உருக்கொண்டு வந்த இறைவரே, சில வருஷங்களுக்கு முன்னே, ஹீமு தங்கள் கையிற் சிக்கியபோது அவனைக் கொல்லத் துணியாமல், ‘இறந்தவனையொத்த இம்மனிதனை—நிர்ப்பாக்கியமுள்ள இவனை—நாம் எவ்விதம் கொல்வோம்!’ என்று திருவாய் மலர்ந்தருளினீர். தங்கள் காரியங்கள் சிலவற்றில், ‘ஒழுங்கீனமில்லாமல் நடப்பதே ஆண்டவனுக்குத் திருப்தியளிக்க வல்லது; நல்வழியில் நடப்பவன் கெட்டழிவதை நாம் இதுவரையிற் கண்டதும்

இல்லை; கேட்டதும் இல்லை,' என்று முத்திரையிட்டிருக்கிறீர். இத்துணை நற்குணச் சிறப்புப் பொருந்திய தேவரீர் கூர்மண்டலத்தின் சுவாதீனத்தைப் பங்கப்படுத்தாமல் விடுவது நேர்மையாகும். இராணியாரும் தங்களை அவ்விஷயத்திற் பெரிதும் பிரார்த்தித்துக்கொள்ளுகிறார். சகல வல்லமையும் அமைந்துள்ள பாதுஷாவாகிய தாங்கள், கூர்மண்டலத்தின்மீது படையெடுத்து வருவது ஊர்க்குருவியின்மீது இராம பாணம் தொடுப்பதையொக்கும் என்பது அவர் கருத்து. கடல் நீரே வெப்பங் கொண்டால், அதை எந்த நீர் கொண்டு தணிவிப்பது? தங்களை எதிர்த்து வெற்றி அடையப் பிறரால் முடியுமோ!" என்று துதியாகப் பேசத் தலைப்பட்டான்.

அக்பர் மனம் தளர்ந்தார்; "ஐய, நீர் கூறுவன யாவும் உண்மையே. ஆயினும், தாம் சாக மருந்துண்பார் எவர் உளர்! உமது அரசியாரின் நன்மையைக் கருதின் நமக்குத் தீமை விளையும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி அன்றோ! 'சிற்றுளியால் கல்லும் தகரும்.' அதுபோல, கூர் மண்டலத்தால் எமது சாம்ராஜ்யம் சிதைவுறும் என்பதில் ஐயமுண்டோ? கூர்மண்டலம், பிற நாடுகளைப்போலச் சுவாதீனமிழந்து நமது சாம்ராஜ்யத்துக்குட்படுமாயின், எமக்குண்டாயிருக்கும் ஐயம் எம்மை விட்டகலும்; வேறு வழியாதாயினும் உளதாயின் அதைத் தாங்கள் கூறலாம்; அப்பொழுது நாம் கூர் மண்டலத்தின்மீது படையெடுப்பதைத் தவிர்ப்போம்," என்றார்.

ஆதூர்:—இராணியார் எக்காலத்திலும் எக்காரணம் பற்றியும், கெடுதி செய்ய மனமிசையார் என்று தாங்கள் நம்பினலொழிய அவ்வையம் தங்களை விட்டு நீங்காது. நம்பிக்கையொன்றே நன்மை பயக்க வல்லது. நம்பிக்கையைத் தவிர வேறு வழி என் சிற்றறிவுக்குப் புலப்படவில்லை.

அக்பர் :—மோசம் நிறைந்த இக்காலத்தில் யார் யாரை எப்படி நம்பக் கூடும்? பூனையை நிகர்த்தவரும் சமயம் நேர்ந் தால் புலியைப் போல் பாய்வார். எமக்கு அடங்கியிருப்பதாக நடிக்குந் துர்க்காவதியும் இந்து மன்னர் சிலர் தூண்டுதலால் எம்மை எதிர்க்கக் காலங்கருதியிருப்பினும் நாம் வியப்பதற்கு இடமில்லை. மக்களாகப் பிறந்தோருள் ஒவ்வொருவரும் நிலை யற்ற மனம் படைத்தவர் என்பதை நீர் மறுத்துக் கூற முடியுமோ? உமது அரசியார் இப்பொழுது நமக்கு நல்லவ ராயிருக்கலாம்; பிறகு எப்படியோ! அவர் குமாரன் எத்தன் மையனே! இவற்றை ஆய்ந்தோய்ந்து பார்த்தே நாம் கூர்மண் டலத்தின் சுவாதீனத்தைப் பறிக்கக் கட்டளையிட்டோம்.

ஆதூர் :—தங்கள் கருத்து இதுவாயின், அடிமை கூறத் தக்கது ஒன்றுமேயில்லை.''

அக்பர்:—மண்டலாதிபதிகளுள் சுயநலமற்றிருப்போர் மிகக் குறைவே. சுயநலமற்றவன் துறவறத்துக்குரியவன். அவனுக்கு ராஜ்யம் எதற்கு? ராஜ்யத்தைக் காக்குங் கருத் துடைய நாம் சுய நன்மையை மறப்பது கூடாததாகும்.

ஆதூர்:—இராணியார், பெண்ணரசி என்பதைத் தாங்கள் மறக்கலாகாது; இதைப்பற்றி இன்னமும் தாங்கள் யோசித்து முடிவு கூறுதல் நலமாகும். ஆய்ந்தோய்ந்து பாராமல் ஒரு காரியத்தில் தலையிட்டுக்கொண்டு பின்பு பழிக்கு ஆளாவது தக்கதன்று என்பது அடிமையின் கருத்து; மன்னவரேறே, எப்படியாயினும் கூர்மண்டலத்தைப்பற்றிய தங்கள் முடிவை தாங்கள் மாற்றிக்கொள்ள வேண்டுகிறேன். நான் இனி இங் கிருப்பதிற் பயன் சிறிதுமில்லை. எனக்கு உத்தரவளிப்பீராக!

இவ்வாறு உரைத்ததும் ஆதூர் அவ்விடம் விட்டகன் றான். அவன் உள்ளத்திற் கோபம் குடிகொண்டிருந்தது. "அக்பர் பிடிவாதக்காரர்; தாம் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்பவர். அவர் கூர் மண்டலத்தின்மீது படையெடுப்

யைத் தவிரார். அவரைத் தடுக்க நான் ஆயத்தமாயிருத்தல் நலம். வீராவேசம் பொருந்திய இராணியார், அவருக்குப் புத்தி கற்பிக்க வேண்டும்,'' என்று அவன் தனக்குள் சொல்லிக்கொண்ட வண்ணமே குதிரையேறி உடன் வந்த வீரரை அழைத்துக்கொண்டு கூர் மண்டலத்திற்குத் திரும்பினான்.

ஆதூர் சபையை விட்டு அகன்றதும், அபுல் பாஸில் அக்பரை நோக்கி, "அரசரே, இராணி சந்தல வமிசத்தைச் சேர்ந்தவள்; தைரியம் மிக்கவள்; சேனை பலமும் செல்வப் பெருக்கும் உடையவள். அவளுடன் விழிப்பாக நின்று போராட வேண்டும்,'' என்றான்.

அக்பர்:—அவளைச் சுவாதீனத்துடன் தனியே விட்டு வைப்பது ஆபத்துக்கிடமாகும் என்று ஆலோசித்தன்றோ நாம் அவளுடைய நாட்டைக் கைப்பற்ற முடிவு செய்தோம்?

ராஜா தோடர்மால்:—மஹாராஜ், தக்ஷிணத்தில் ஆமது நகரில் (Ahmednagar) அரசு நடத்திவரும் சாந்து பீபி (Chand Bibi) பெண்ணாயிருந்தும், அவளால் நமக்கு எத்துணை இடையூறுகள் நேர்ந்திருக்கின்றன! பேதையரென்று ஒரு சிலர் தூற்றினும், மகளிர் மன உறுதியும் நுண்ணறிவும் நிறைந்தவர்; அவர்களை வல்லமையற்றவர்கள் என்று கருதின், நமக்கு ஆபத்து நேரும் என்பதில் ஐயமே இல்லை. தாங்கள் முடிவு கட்டியபடி கூர் மண்டலத்தின் சுவாதீனத்தைப் பறித்தலே நலம்.

அபுல் பாஸில்:—அரசரே, ஒரு பெண்ணரசியை எதிர்த்துப் போர் தொடுப்பதால் உலகம், வீரராகிய தங்களைப் பழிக்கும் என்று அஞ்சுவதிற் பயனில்லை. ஏகாதிபத்தியத்தை வளர்க்க விரும்புவோர் உலகத்தார் கூறும் இகழ்ச்சியையும் புகழ்ச்சியையும் பொருட்படுத்தவே மாட்டார்; ஏனெனில், 'உலகம் பலவிதம்,' என்பது ஆன்றோர் வாக்கன்றோ?

இவ்வாறு அச்சபையில் இருந்த இந்துக்களும் முகம் மதியரும், அக்பரின் முடிவு நியாயமே என எடுத்துக் கூறினர். அதனால், ஆதூரின் திறமை வாய்ந்த சொற்களால் சிறிது போழ்து மனத் தளர்ச்சியுற்ற அப்பாதுஷா, கூர் மண்டலத்தைக் கைப்பற்ற முடிவாக உத்தரவு பிறப்பித்துவிட்டார்.

அந்தோ! துர்க்காவதியின் நல்வினை இருந்தவாறு என்! பதினைந்து வருஷ காலம் பன்னாட்டரசரும் போற்றித் துதிக்கத் திறமையுடன் அரசு நடத்தி வந்த அம்மாதரசி, மனக் கவலையுற்று வருந்த நேரிட்டதே! விதிப்பயன் யாரை விட்டது! இவ்வுலகில் மாந்தர் யாவரும் சிறிதும் துன்பம் கலவா இன்பமும், இம்மியும் இன்பம் கலவாத் துன்பமும் தமது வாணாள் முழுவதும் துய்த்திலர் என்பது எவரும் மறுத்தற்கியலா உண்மையாகும். நிழலின் அருமை வெயிலில் இருப்பவர்க்கன்றோ தெரியும்? அதேபோல, இன்ப நுகர்ச்சியின் இனிமை, துன்பத்தில் உழல்பவர்க்கே இனிது விளங்கும்; அதனால், யாவுமறிந்த ஆண்டவன் மக்கள் வாழ்க்கையில் இன்பமும் துன்பமும் மாறி வரப்பண்ணி, அவ்வாழ்க்கையை இன்ப வாழ்க்கையாக்குகின்றான் என்பது ஆன்றோர் கருத்தாகும்.

இராச்சிய நிர்வாகத்திறமையும், உண்மையும், குடிகளின் நன்மையைக் கருதுமியல்பும், எல்லா மதமும் சம்மதம் என்னும் கொள்கையும், செங்கோல் முறைமையில் பிறழாமையும் வாய்ந்து, மகா அக்பர் எனப் பெயர் படைத்து, எக்காலத்தும் அழியாப் புகழுக்கு உரியவரான பாதுஷா அவ்விராணியின் துன்பத்துக்குக் காரணராய் விளங்கியது வருந்தத் தக்கதே. ஒவ்வொருவரும் தாம் தாம் செய்த வினைப்பயனைத் துய்த்தே ஒழிக்க வேண்டும்; அதைத் தடுக்க எவரால் இயலும்?

## 11. மந்திராலோசனை

ஆதூர் மூன்றுநாட்களுக்குள் கூர் மண்டலத்தையடைந்தான். அவன் காலந் தாழ்க்காமல் சிங்களகிரியிலுள்ள மதன் மஹாலை நோக்கி விரைந்து சென்று, துர்க்காவதியைக் கண்டு, அக்பர் சபையில் நடந்தவற்றை ஆதியோடந்தமாகக் கூறி முடித்தான்.

அவன் கூறியவற்றை அமைதியுடன் கேட்டுக்கொண்டிருந்த அவ்வரசியின் கண்களில் கோபத் தீப் பறந்தது. "அமைச்சரே, நமது குடிகளின் நன்மையைக் கருதியும் வீணே வீரர் பலர் போரில் இறந்துபடுவரே என்பதை உத்தேசித்தும், அக்பருடன்—தயை தாட்சணியம் இல்லாத பாதுஷாவுடன்—நாம் சமாதானம் செய்துகொள்ள விரும்பி உம்மைத் தூதுவராக அனுப்பினோம். அத்தூதால் நாம் அடைந்த பலன் ஒன்றுமில்லை; ஆனால், ஒன்று: போர் தொடங்குவதற்குமுன் அதைத் தடுக்க நாம் முயலவில்லை என்னும் வீண் பழி இன்றேடொழிந்தது. நாம் நமது கடமையைச் செய்து முடிக்க வேண்டும். இன்றைக்கே சபை கூட்டி எல்லாவற்றையும் யோசிப்போம். அக்பர் நமது நாட்டின்மீது படையெடுத்துவரப் போவதைக் குடிகளும் அறிந்துகொள்ளுதல் நலம்; இனி மறைத்து வைப்பதிற் பயனில்லை," என்றாள் அரசி.

ஆதூர் :—அம்மா, அவ்வாறே செய்வோம். எனினும் ஒன்றை நினைக்க நினைக்க மனம் பதறுகிறது.

துர்க்காவதி :—அஃது யாது ?

ஆதூர் :—ராஜா தோடர்மால் அக்பர் சபையில் அப்போது அமர்ந்திருந்தார். அவர் நமக்காகப் பரிந்து பேசி இருப்பின் ஒருவேளை அக்பர் மனத்தளர்ச்சி அடைந்திருக்

கக் கூடும். அச்சமயம், அவர் கற்சிலேயேபோல வாய் மூடி மௌனியாராயினர்.

துர்க்காவதி :—நமக்குள் ஒற்றுமை இருப்பின், முகம்மதியர் இத்தேசத்துள் நுழைந்திருப்பரோ! இந்து மன்னர் தமது சுவாதீனத்தை இழவாரன்றோ? இந்து சாம்ராஜ்யத்தை நிலை நிறுத்த ராஜபுத்திர பிருதிவி செய்த முயற்சிக்கு அளவுண்டோ? அம்முயற்சி பயனளி யாததற்கு மூலமாய் இருந்தவன் ஜய சந்திரன் அல்லனோ?

ஆதூர் :—அரசியீர், தாங்கள் உயர்நிலையில் இருப்பது பல இந்து மன்னருக்குப் பொறாமையை உண்டாக்கியிருக் கும் எனக் கருதுகிறேன்.

துர்க்காவதி :—ஆலோசனை ஏன்? குறு நில மன்னர் —முக்கியமாய் இந்து மன்னர்—என்மீது அழுக்காறு உற்றி ருப்பது உண்மையே. ராஜா தோடர்மாலும் அவர்களுள் ஒருவராகலாம்.

ஆதூர் :—இராணியீர், கூர் மண்டலத்திலுள்ள கோட் டைகளைப் பழுது பார்ப்பதற்கு இதுவே சமயம்.

துர்க்காவதி :—ஆம்; இன்றைத்தினமே சபை கூட்டி நமது மந்திரி பிரதானிகளின் கருத்து யாதெனத் தெரிந்து கொள்வோம்.

அன்று மாலை துர்க்காவதியின் ஆணைப்படி சபை கூடி யது. மந்திரக்கிழவரும், தளகர்த்தரும், கோயில் குருக் களும், சோதிடரும், பிரபுக்களும் தத்தமக்கியன்ற இருக் கைகளில் மேவி அச்சபையை அலங்கரித்து நின்றனர். வீர நாராயணனும் அங்கு வந்திருந்தான்.

துர்க்காவதி :—சபையோர்காள், அமைவுற்றிருக்கும் நமது நாட்டின்மேல் அக்பர் பாதுஷா காரணமின்றியே படையெடுத்துவர நிச்சயித்திருப்பதாகச் செய்தி உலவு

கிறது. அஃது உண்மை என்பதை இன்றே நாம் அறிந்தோம். உங்களுடைய ஆலோசனையைத் தெரிந்துகொள்ள அவசரமாகச் சபையைக் கூட்டினேம்.

சபையோர் :—குற்றமற்ற நம்மீது அநியாயமாகப் படையெடுத்து வரும் அக்பரை எதிர்த்துத் தாக்குவதைவிட வேறொரு வழியும் எங்களுக்குத் தெரியவில்லை.

வீர நாராயணன் :—நம்மை எதிர்த்து வரும் பாதுஷா அவமானமடைவது உறுதி; குடிகளால் விசுவசிக்கப் பெறும் அரசியாரை வெல்லக் கூடியவன் யாவன்? தேசாபிமானம் பொங்கித் ததும்பும் இந்நாடும், அயல் அரசர் கைவசப்படுமோ? ராஜ்ய நிர்வாக நிபுணர் என விளங்கும் பாதுஷா இதை அறியாமற் போனதேன்?

முதற் பிரபு :—'கெடுமதி கண்ணுக்குத் தோன்ருது.'

இரண்டாம் பிரபு :—அஃது உண்மையே; எவரும் புகழ்ந்துரையாடும் பாதுஷா வீழ்நிலை அடையும் காலம் கிட்டியது.

சோதிடர் :—அங்ஙனமே ஆவதாக! கடவுள் அருளும் நியாயமும் நம்பக்கமிருக்கையில் ஒரு குறைவும் நேராது.

தளகர்த்தன் :—வீரத்தில் நம் அரசியார், பண்டை வீரத் தாய்மாரினும் இளைத்தவர் அல்லர். இவ்வீர மகளார் தலைமையில் நம் வீரர் வெற்றி பெருதொழிவரோ? ஆமது நகரத்தரசியாகிய சாந்து பீபியை அக்பர் அடக்கமுடியாமல் தவிக்கிருர். அவர் நமது நாட்டைத் தமது சாம்ராஜ்யத்துடன் இணைத்துக்கொள்ளக் கருதுவது கூடாத காரியமாகச் செய்ய நம் சேனை வீரர் அனைவரும் போர்த் தொழில் நிகழ்த்த உற்சாகத்துடன் இருக்கின்றனர். அவர்களுக்கு ஆறு மாத காலத்திற்கு வேண்டிய உணவுப் பொருள்கள் சேகரித்து வைக்கப் பெற்றுள்ளன.

முதற் பிரபு :—கூர் மண்டல இளங்காளையர் தமது அரசியருக்காக அக்பருடன் போராடப் பிரியமுடன் முன் வருவர் என்பதில் ஐயங் கொள்வாருண்டோ ?

ஒரு மூலையில் அமர்ந்து வாய் வாளாமை மேற்கொண் டிருந்த ஆதூர் எழுந்து நின்று, "அக்பர் தந்திரசாலி; திரண்ட சேனையுடையவர்; செல்வாக்கு மிகுந்தவர். ஆதலால், அவரைத் தோல்வியுறச் செய்வது எளிதன்று. நாம் விழிப்புடன் இருக்க வேண்டும். நமது நால்வகைப் படைகளையும் பலப்படுத்துதல் இன்றியமையாததாகும். இன்னும் இரண்டு மூன்று நாட்களுக்குள் சிங்களகிரி, மண் டல நகர் முதலிய இடங்களிலுள்ள கோட்டைகளைப் பழுது பார்த்தல் வேண்டும். குடிகளின் ராஜ பக்தி, வினைப் பயன், அரசியாரின் வீராவேசம் ஆகிய விஷயங்களைக் குறித்து இப்பொழுது பேசுவது நம்முடைய பலமின்மை யைத் தெரிவிக்கும். செய்கையில் நமது வல்லமையைக் காண் பித்தலன்றோ சிறப்பு ?" என்றான்.

சபையோரனைவரும் அவன் கூறியவற்றை ஏற்பவர் போலக் கரகோஷம் செய்தனர்.

துர்க்காவதி :—சபையோர்காள், சந்தல குலத்திற் பிறந்து, போர்க்களத்தில் வெற்றியையன்றி வேறொன்றை யும் அறியாத தளபதி மன்னருக்கு வாழ்க்கைப்பட்டு, வீர நாராயணனைப் புதல்வனாகப் பயந்துள்ள நாம் எமதுயிருள்ள மட்டும் இந்நாட்டைப் பிறரிடம் சிக்கவிடோம். எம்மைப் பெண்ணென எள்ளி, கூர் மண்டலத்தைக் கைப்பற்ற விரும் பும் அக்பர் எம்மால் அவமானப்படுவது திண்ணம். நாம் சிக்கனமாகச் சேமித்து வைத்துள்ள திரவியத்தையும், பட்ச முடன் பரிபாலித்து வரும் யானைகளையும் கவர்ந்துகொள் ளும் கருத்துடன் நம்மீது குற்றமொன்றும் இல்லாமல் இருக் கையிலேயே இந்நாட்டின்மேற் படையெடுத்து வரும்

பாதுஷா தன் கருத்து நிறைவேறப் பெறுமல் போர்க்களத திற் புறங்காட்டியோடாவிடில் அரசி எனக் கூறத் தகுதி உடையோம் அல்லோம் ; எவ்விதமாயினும், இந்நாட்டைக் காப்பாற்றுவோம் ; இன்றேல், போர்க்களத்தில் இறந்து படுவோம். எம் குடிகள் எம்முடன் ஒத்துழைக்கும் வரையில் யாம் பிறருக்கு அஞ்ச வேண்டுவதில்லையே !

அரசியின் வீர மொழிகளைக் கேட்ட மந்திரி பிரதானி கள், " துர்க்காவதி அம்மையாருக்கு வெற்றியுண்டாகுக ! துர்க்காவதி அம்மையாருக்கு ஜயமுண்டாகுக ! ! " என் றுரைத்துக் கர கோஷம் செய்தார்கள்.

சோதிடர் :—உண்மையே வெற்றி !

ஆதூர் :—அதற்கென்ன தடை ?

முதற் பிரபு :—பொறுமை மிக்க நமது இராணியாரைப் போருக்கிழுக்கும் பாதுஷா நீதி கொன்றவன் ஆவன்.

இரண்டாம் பிரபு :—நிரபராதியரான நமது அரசி யாரோடு அமராடத் துணிந்தவன் கெட்டழிவது உண்மை.

ஆதூர் :—கடவுள் நமக்கு வெற்றியளிப்பாராக !

சோதிடர்:—நல்லவர்களுக்கு நல்ல பலன் கிடைக்கும்.

துர்க்காவதி :—சபையோர்காள், நீங்கள் கூறி வந்த வார்த்தைகள் எமது மனக்கவலையை மாற்றின. அக்பருக்கு நாமாக எந்த வழியிலும் தீமை செய்யவில்லை ; நாடு பிடிக் கும் ஆசையால் அவரை அநியாயமாக எதிர்க்கமுற்படவில்லை. அவருடைய வீரர் அமர்க்கு உடைந்து ஓடினலொழிய எமக்கு மனவமைதி உண்டாகாது. நம்முடைய வல்ல மையை அவர் இன்னும் அறிந்துகொள்ளவில்லை ; அது வரையில் அவர் நம்மை எதிர்க்கத் துணிந்து நிற்பார். சூடுண்ட பூனை அடுப்பங்கரை ஏறுமா ? அதைப்போல, நாம் ஒரு முறை அவரைப் போரில் தோல்வியுறச்செய்தால் அவர் நம் விஷயத்தில் எக்காலத்தும் நுழையவே மாட்டார். கொட்

டிஞலன்றே தேள்? நாம் நமது நாட்டுக்குரிய கடமையைச் செய்து முடிக்க வேண்டும். பிறகு ஈசன் செயல்; பார்ப் போம். நாளையிலிருந்து சலிப்படையாமல் போர் முயற்சி யில் ஒவ்வொருவரும் ஈடுபட்டுழைக்க வேண்டும்.

ஆதூர் :—நாம் எடுத்துக்கொண்ட காரியம் பயன் பெறக் கடவுள் அருள் புரிவாராக!

சோதிடர் :—அப்படியே.

சபை கலைந்தது. அவரவர் தத்தம் இல்லம் ஏகினர். துர்க்காவதி உயிருடன் இருக்கும் வரையில் தங்களுக்கு ஆபத்து நேராதென்று குடிகள் உறுதியாய் நம்பினுர்கள். ஆனுல், சோதிடர் மனக் கலக்கம் அடைந்தார்; ஏனெனில், வீர நாராயணன் சாதகம் கணித்தவருள் அவரும் ஒருவர். அவன் சாதகப்படி கூர் மண்டலத்துக்குப் பல இடையூறுகள் நேரும் என்று அவர் அறிந்திருந்தார். அதை அவர் எவரி டமும் வெளியிடவேயில்லை.

# 12. பாதுஷாவின் படை எழுச்சி ; வீரத்தாயின் வெற்றி முழக்கு

மூன்று மாதங்கள் சென்றன. கூர்மண்டலத்தில் துர்க்காவதியின் கட்டளைப்படி அந்நாட்டுப் பாதுகாப்புக்குரிய முயற்சிகள் நடந்தேறின. கோட்டைகள் யாவும் பழுது பார்க்கப் பெற்றன. அந்நாட்டு இளங்காளையர் பலர் வீர நாராயணன் தலைமையின்கீழ்ப் போர்ப்பயிற்சி அடைந்தனர். சேனைகள் பண்ணுறுத்தப் பெற்று, அமர் புரியத் தயாராயின. சேனா வீரருக்கு வேண்டிய உணவுப்பொருள்கள் கோட்டைகளுக்குள்ளே குவிந்து கிடந்தன. அரசியும் குதிரை யானையேற்றங்களிலும், வில் வாள் வித்தைகளிலும் பழகி வந்தாள்.

இச்செய்தி ஆஸப்கான் காதுக்கு எட்டியது. அவன் உடனே பாதுஷாவை அணுகி, "மன்னர் மன்னரே, நாம் காலந் தாழ்க்காமல் கூர் மண்டலத்தின்மீது படையெடுத்துச் செல்ல வேண்டும். துர்க்காவதி நம்மை எதிர்க்க ஆயத்தமாக இருப்பதைக் கேள்வியுற்றேன்," என்றான்.

அக்பர் :—நாமும் கூர் மண்டலத்தின்மேல் படை எடுத்துச் செல்லத் தகுந்த நிலைமையில் இருக்கிறோம்.

ஆஸப்கான் :—அரசரே, நல்லது.

அக்பர் :—சரி ; நாளைத் தினமே நீர் நமது சேனையுடன் கூர் மண்டலத்தை நோக்கிப் புறப்படலாம்.

ஆஸப்கான் :—உத்தரவுப்படியே.

உடனே ஆஸப்கான் அவ்விடத்தினின்றும் அகன்றான்.

கி. பி. 1564-ம் ஆண்டு ஆகஸ்டு மாத முடிவில் ஆஸப்கான், ஆயிரம் குதிரைப்படை வீரரும், பன்னிரண்டா

யிரம் காலாட்படை வீரரும் அடங்கிய பெரும்படையுடன் குதிரையிவர்ந்த வண்ணம் கூர் மண்டலத்திலுள்ள சிங்கள கிரியை நோக்கிப்புறப்பட்டான். அவனோடு ஒருசிறுபீரங்கிப் படையும் சென்றது. அவன் மாணிக்க புரத்தை விட்டுப் புறப்படுகையில், "நான் கூர் மண்டலத்தை வசப்படுத்தாமல் இந்நகரத்துக்குத் திரும்பேன்; பாதுஷாவின் முகத்திலும் விழியேன். நான் துர்க்காவதியிடம் தோற்றோடின், உயிர் இருந்தும் இல்லாதவனே ஆவேன்," என்று சபதம் செய்து கொண்டான்.

பேராசையே உருக்கொண்டு வந்ததையொத்தவனும், களங்கமற்ற பாதுஷாவின் மனத்தை மாற்றியவனுமாகிய ஆஸப்கான் சிங்களகிரிமேற் படையெடுத்து வருவதையும், அவன் செய்துகொண்ட சபதத்தையும் ஒற்றர் மூலம் தெரிந்துகொண்ட துர்க்காவதி, அச்செய்தியைத் தன் தண்டத் தலைவனுக்கு அறிவித்தாள். அவன் அச்செய்தியைக் கேள்வியுற்ற அளவில் எண்ணாயிரம் காலாட்படை வீரரை யும், ஆயிரத்தைந்நூறு யானைப்படை வீரரையும், நூற்றுக் கணக்கான குதிரைப்படை வீரரையும் கூட்டி வந்து, அரசி யின் முன் நிறுத்தினான்.

அப்படைத் தொகுதியைக் கண்ட துர்க்காவதி, மகிழ்ச்சி கொண்டாள்; ஆயினும், துன்பம் ஒரு புறம் அவளை வருத்தியது. "அந்தோ! அக்பரின் பேராசையினாலன்றோ இன்னும் சிறிது நேரத்தில் போர் தொடங்க நேர்ந்திருக்கி றது! நமக்கும் பாதுஷாவுக்கும் உள்ள பகைமையால் குற்ற மற்ற பல்லாயிரக்கணக்கான இரு திறப்படைகளும் அழியப் போகின்றன! பாதுஷா இரக்கம் சிறிதும் இல்லாதவர் என்று நான் நினைக்க வேண்டியிருக்கிறது, அவர் நெஞ்சில் ஈரமிருப் பின் இவ்விதம் செய்யத் துணியார். அவர் மதியிழந்து தமக் குக் கெடுதியைத் தேடிக்கொள்ளுகிறார். நான் பெண்ணென்

றும், என்னை எளிதிற் போரில் தொலைத்து எனது நாட்டைக் கவர்ந்துகொண்டு தம் கீர்த்தியை உலகமெங்கும் நிலை நிறுத்தலாம் என்றும் கருதியே இச்செயலில் அவர் முற்பட்டிருக்கிறார். அவர் வீரராயின், என்னோடு நேரில் வந்து போரிட்டு, வெற்றி தோல்விகளுள் ஒன்றைப் பெறுவது நலம். அங்ஙனம் செய்யாத அவர் வீரரெனத் தகாதவர்," என்று தனக்குள் தானே கூறிக்கொண்டாள். அவள் கண்களினின்றும் நீர் வழிந்தோடியது.

ஆலப்கான் படையெடுத்து வருகிறான் என்றுணர்ந்த வீர நாராயணன் காலந்தாழ்க்காமல் தான் பழக்கி வைத்திருந்த நூற்றுக் கணக்கான இளங்காளையரைத்—தேசபக்தியிலும் ராஜ விசுவாசத்திலும் இணையற்று விளங்கிய வாலிபரைத்—தன்னுடன் அழைத்துக்கொண்டு சிங்களகிரியை அடைந்தான். அந்நாட்டிலுள்ளோர் 'ஈசன் திருவுளம் எதுவோ!' என்று கவலை அடைந்தனர். அவர்களுள் முதியவரும், பெண்டிரும், பிணியாளரும், குழந்தைகளும் நகரில் வசிப்பதைத் தவிர்த்து, பகைவர் நுழைய இயலாத சிற்றூர்களுக்குத் தத்தம் சொத்துக்களுடன் சென்றனர்.

அந்நாடெங்கும் அமளியாய் இருந்தது. போர் வீரர் செல்லாவிடம் அந்நாடெங்கும் இல்லை. இதுகாறும் வேட்டையாடுவதற்கன்றி வேறு காரியத்துக்கு மதன் மஹாலை விடுத்து வெளியில் வாராத அரசி துர்க்காவதி, அரச இன்பத்தை அறவே ஒழித்து, ஆங்காங்கிருந்த கோட்டைகளையும் அவற்றைக் காத்து நின்ற வீரரையும் உற்சாகப்படுத்தி வந்தாள்; படை வீரருக்கு வேண்டிய உணவுப் பொருள்களைக் கோட்டைகளின் உட்புறத்தில் சேமித்து வைப்பாளாயினள். தண்டத் தலைவன் அவளைத் தனியேவிட்டுப் பிரியமனமின்றி அவள் அருகில் நின்ற வண்

ணமே அவள் இட்ட வேலைகளைச் சரிவர நிறைவேற்றி வந்தான்.

ஆஸப்கான், சிங்களகிரிக் கோட்டையை நெருங்கினான். கடலனைய மொகல் சேனையைக் கண்ணுற்ற இராணி, தன் தளகர்த்தனை நோக்கி, "ஐய, மொகலாயப்படை வீரர், நமது கோட்டையை முற்றுகையிடா வண்ணம் தடுத்துத் துரத்திவிட வேண்டும். இக்கோட்டையை வளைத்துக்கொண்டால், நாம் கோட்டையுளிருந்த வண்ணம் அவர்களைத் தாக்கித் துரத்துவது எளிதில் இயலுமோ! பாதுஷாவுக்கு அஞ்சி இந்து மன்னர் எவரும் நமக்குத் துணையாக இச்சந்தர்ப்பத்தில் உதவார்; ரஜ புத்திரரை அச்சமும் பொறாமையும் பிடித்து ஆட்டுவது நமக்குத் தெரியாததன்று; நமது முயற்சியால் நம்மைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும்; ஆதலால், முகம்மதியப்படை இக்கோட்டைக்கருகில் வருவதற்கு முன்னரே நாம் முன்னேக்கிச் சென்று முதுகு காட்டியோடச் செய்யவேண்டும்," என்றாள்.

தளகர்த்தன் :—அம்மையீர், தாங்கள் கூறுவது நல்ல யோசனையாகும். உத்தரவுப்படியே செய்கிறேன்.

துர்க்காவதி யானையின்மீது இவர்ந்தாள்; வில்லும் அம்பும் கையிலேந்தி அம்பறாத் தூணியைத் தன் முதுகில் தாங்கினாள். சிங்களகிரிக் கோட்டையினுள்ளும் புறமும் நின்ற படைவீரர், தம் அரசி யுத்தத்திற்குப் புறப்படுவதைக் கண்டு, ஆயுதங்கள் தாங்கி அவளைத் தொடர்ந்தனர். யானைப் படை வீரரும் குதிரைப் படை வீரரும் அவளைச் சூழ்ந்து சென்றனர். தண்டத் தலைவன் அவளுயிருக்கு இடையூறு நேரா வண்ணம் தக்கபடி காவற் செய்திருந்தான். அவளுடைய வலப்பக்கத்தில் வீர நாராயணன் தான் பழக்கிய இளங்காளையரை நடத்திச் சென்றான்.

சிங்களகிரிக் கோட்டைக்குச் சிறிது தூரத்தில் இந்து முகம்மதிய சேனைகள் ஒன்றையொன்று எதிர்த்துப் பொருதன. ஆஸப்கானைக் கண்டதும் துர்க்காவதிக்குக் கோபம் பொங்கி எழுந்தது. "இப்பாவியன்றோ பாதுஷாவின் மனத்தை மாற்றி இப்போரைச் செய்யத் தூண்டியவன்! அமைதியான என் வாழ்க்கையைக் குலைத்தவன்! என்னருமைப் புதல்வனுக்குரிய அரசுரிமையை நியாயமின்றிக் கவர எண்ணங் கொண்டவன்! இத்தீயோனை அமரிற் கொன்றால் அக்பரும் கூர் மண்டலத்தைக் கைப்பற்றும் எண்ணத்தை விட்டுவிடுவார்," என்று அவள் தனக்குள் தானே சொல்லிக் கொண்டாள்.

கூர் மண்டலப் பாதுகாப்பை நோக்கமாகக் கொண்ட துர்க்காவதி, வீராவேசங் கொண்டாள். இறந்துபட்ட தளபதியின் கீர்த்தி குன்றின்மேலிட்டவிளக்கெனத் தன்னால் விளங்க வேண்டும் என்னும் எண்ணம் அவள் உள்ளத்தைக் கவர்ந்தது. அவள் தன் சேனையை மூன்று பிரிவாக அணிவகுத்து ஒருபகுதியைத் தான் நடத்தினாள்; மற்றொன்றைத் தன் தளகர்த்தனும் மூன்றாம் பகுதியை வீர நாராயணனும் நடத்துமாறு பணித்து மொகலாயப் படை வீரரைத் தாக்கச் செய்தாள்.

ஆஸப்கானைத் தனக்கு இலக்காக (Mark) வைத்துக் கொண்டு சமயம் நேர்ந்தபோதெல்லாம் அவன்மீது அவள் அம்பெய்து வந்தாள். ஆனால், ஆஸப்கான் துர்க்காவதியின் மனக் கருத்தை அறிந்து அவள் கண்ணிற் படாமல் எச்சரிக்கையுடன் தன் சேனையை ஊக்கிக் கொண்டிருந்தான்.

ஆஸப்கான் சிங்களகிரிக் கோட்டையை முற்றுகையிட வல்லமை அற்றவனாய் மனம் புழுங்கினான். கூர் மண்டல சேனா வீரரின் உள்ளம், ராஜ பக்தி தேசாபிமானம் முதலிய

வற்றால் உரம் பெற்றிருப்பதை உணர உணர அவனுக்குத் தளர்ச்சி உண்டாயிற்று.

"தூர்க்காவதியின் மன உறுதியையும் அவள்மீது கூர் மண்டல நாட்டாருக்குள்ள அன்பின் பெருக்கையும் கூர்ந்து கவனியாமல் அவசரப்பட்டு இக்காரியத்தில் தலையிட்டுக் கொண்டேனே! அக்பர் என்னை எப்படி நினைப்பார்? ஆஹா! பெண்களுக்கு இத்துணைத் தைரியம் இருப்பதை நான் இது வரையில் எங்கும் கண்டதேயில்லை! தன்னுயிரின்மீதும் இச்சை வையாமல், போர் முனையில் நின்ற வண்ணம் என்னைத் தாக்குகின்ற இவளுடைய வீரத்தை என்னென்றுரைப்பது! ஆயினும், நான் இவளை எவ்விதத்தாலாவது தோல்வியுறச் செய்யவேண்டும். இவள் போர்முனையில் நின்று யுத்தம் புரிவது எனக்கு நன்மையே. மேலும், இவள் தன் புதல்வன் வீர நாராயணனைத் தன்னுயிரினும் மேலாகக்கருதியவளென்று கேள்வியுற்றிருக்கின்றேன்; ஆதலால், நான் என் சேனை வீரரிற் சிலரைக் கொண்டு அவ்வரசிளங்குமரனைப் புண்படுத்துகிறேன். அவ்விதம் செய்யின் இவள் கன்றிழந்த பசுவைப்போல யாதுஞ் செய்யத் தோன்றாமல் மனம் நொந்து வருந்துவாள். சமயம் பார்த்து நான் இவளை எதிர்க்க வேண்டும். அப்போதுதான் என் எண்ணம் பயன் பெறும்; தந்திரத்தினாலாகிலும் இவளை வென்றாலொழிய, நான் இடம் விட்டுப் பெயரேன்; திரும்பிப் போய்ப் பாதுஷாவைக் கண்டு பேச மனந் துணியேன். இவள் தோல்வி அடையாவிடில் என்னுயிரை இவ்விடத்திலேயே முடித்துக் கொள்ளுவேன். ஆண்டவன் எண்ணம் எவ்வாறிருக்கிறதோ; பார்ப்போம்!" என்று ஆஸப்கான் தன்னுள் பேசி உறுதி கொண்டான்.

அவன் தன் சேனைவீரருட்சிறந்தவர் சிலரை அழைத்து, "வீரர்காள், தூர்க்காவதிக்கு வலப்புறத்திற் குதிரை இவர்ந்த

வண்ணம் நமக்கு விரோதமாக இளங்காளையர் பலரை நடத்தி வரும் அரசிளங்குமரனைப் புண்படுத்திவிடுங்கள் ; அவனைக் கொல்ல வேண்டா. தன் அரும்புதல்வன் போரிற் புண்பட்டான் என்று கேள்வியுற்றால் துர்க்காவதி அவனைப் பார்க்க அமர்க்களத்தை விட்டு விலகுவாள் ; அவனைக் கொன்றாலோ, அவள் மிக்க வீராவேசத்துடன் இறுதிவரையில் நம்முடன் போராடத் துணிவு கொள்வாள். அதனால் நமக்குத் தீமையே விளைந்தாலும் விளையும்,'' என்று கட்டளையிட்டு, துர்க்காவதியை எதிர்க்க முன்னேக்கிச் சென்றான்.

ஏறக்குறைய இரண்டு மணி நேரம் இருதிறத்தவரும் சலிப்பின்றிச் சமர் புரிந்தனர். மொகல் சேனை வீரர் சிங்களகிரிக் கோட்டையை அடைய முயன்றனர். இந்துப்படை வீரர் அவர்கள் அவ்வாறு செய்ய முடியா வண்ணம் தடுத்து நின்றனர். இப்போராட்டத்தில் இந்து, மொகலாய வீரர் பலர் இறந்து பட்டனர். செங்குருதி வெள்ளம்போலப் பாய்ந்தோடியது.

அச்சமயம், துர்க்காவதி யானைமீதிவர்ந்த வண்ணம் போர் முனையினின்று தன்படை வீரரை உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தாள்.

"வீரர்காள், பிறப்பவர் யாவரும் இறப்பவரே. பிறந்து இறப்பதற்கு முன் ஒவ்வொருவரும் இவ்வுலகில் நிகழ்த்தும் நற்செயல்களும் தீச்செயல்களும் அவரவர் பின்னர் அடையும் நன்மை தீமைகளுக்கு வித்தாகும். புறங்காட்டாது எதிரியை எதிர்த்துத் தாக்கித் தம் தேசத்திற்காக உயிரை விடத் துணியும் வீரனே, இவ்வுலகில் அழியாப் புகழை நிலைநிறுத்தி வீர சுவர்க்கம் அடையத் தக்கவன். அப்படிப் பட்டவன் புகழையே எக்காலத்தும் எல்லாரும் புகழ்ந்து பேசுவர் ; ஆதலால், நீவிர் எல்லீரும் நம்முடன் சேர்ந்து ஆஸப்கானையும் அவன் சேனையையும் அடியோடே முறி

யடித்தாற் பிற இந்து மன்னர் நம்மைப் போற்றிப் புகழ்வர். நமது நாடு மேன்மை அடையும். பாதுஷா நாணமடைந்து நம் நாட்டு விவகாரங்களில் எக்காலமும் புகவே மாட்டார். இன்றைத்தினம் நாம் மொகலாயர் செருக்கை அடக்கி வெற்றி பெற வேண்டும்; இன்றேல், இவ்விடத்திலேயே நமது உயிரை விட்டு விடவேண்டும். நீங்கள் இன்று தோற் றோடினால், நாளை உங்கள் மனைவியர் முகத்திற் சிறிதும் வெட்கமின்றி எவ்வாறு விழிப்பீர்கள்? இவ்வுடல் சின்னாளில் அழியும். கீர்த்தியோ, எந்நாளும் நிலைபெற்றுலவும். உங்கள் விருப்பம் யாது? மொகலாயப் படை வீரருக்குத் தோல்வி உற்று நமது சுவாதீனத்தை இழந்து அல்லற்பட்டுத் தாழ வோ, வெற்றியுடன் உயர்நிலை பெற்றுச் சிறப்போடு வாழவோ விரும்புகிறீர்கள்? நீங்கள் அல்லலுற்று அழிய விரும்பின், வீராவேசத்துடன் போர் புரிவதைத் தவிர்த்து முதுகுகாட்டி இப்போதே ஓடுங்கள்; உயர்நிலையடைய விரும்பின் பகைப் படையைத் தைரியத்துடன் தாக்குங்கள்," என்று அவர்களு டைய ஆண்மையாகிய சுடரைத் தூண்டிப் போர்க்களமுழு தும் வீர மகள் உலாவுவது போலச் சுற்றினாள்.

வீரர்களுட் பெரும்பாலோர், "வெற்றி நமதாகுக! நாங்கள் அனைவரும் எங்கள் நாட்டிற்காகவும் அரசிக்காகவும் பொருது மாளத் துணிவு கொண்டுள்ளோம். வெற்றி நம தாகுக!" என்று தம் வாளேந்திய கைகளை உயர்த்திப் பிடித் துக் கூவினர்.

பட்டத்து யானைப் பிடரியில் உள்ள அம்பாரியில் இருந்த வண்ணம் கண் அனற்பொறி கால, நுதல் வெயர்க்க வீராவேசங்கொண்டு கம்பீரத்துடன் பகைப்படைமீது அம்பு களை மாரிபோலச் சொரிந்த இராணியின் வலக் கண்ணில் எதிரிவிடுத்த அம்பொன்று தைத்து ஊடுருவாமல் நின்றது. அதனால் நேர்ந்த நோயைத் தணிக்கவும் முயலாமல் அவ்

வீரத்தாய், தைத்து நின்ற அம்பை இழுக்க அதன் நுனி ஒடிந்து அவள் கண்ணிலேயே தங்கிவிட்டது. துர்க்காவதி அதனால் உண்டாகிய நோவைப் பொருட்படுத்தாமல் தன் உள்ளத்தில் வீரம் மீக்கொள முன்னிலும் வேகமாக அம்பு களை வில்லிற்றொடுத்துப் பகைவர்மீது எய்தாள். மொகல் காலாட்படை வீரரிற் பலர் புண்பட்டு வீழ்ந்தனர். மாற்ற லர் சேனை ஊற்றம் அழிந்தது.

அக்காட்சியைக் கண்ணுற்ற ஆஸப்கானுக்குக் கோபம் பொங்கியது. "பெண்ணொருத்தி நம்மை இவ்வாறு எதிர்த்து நிற்க விடலாகாது. அவ்விதம் விட்டால், பிறர் நம்மை ஏள னம் செய்ய இடமுண்டாகும்," என்று நினைத்து, தன்னண் டையில் நின்ற படை வீரனிடம் வாங்கிய வில்லில் அம்பை அமைத்து, வீர மங்கையாகிய துர்க்காவதியின்மீது எய் தான். அவன் பலங்கொண்டு எய்த கூரிய வாளி அவ்வீர மாதின் நெஞ்சில் தைத்தது; அவள் அதையும் அக்கணமே பிடுங்கி எறிந்தாள்.

அப்போது அருகில் நின்ற தளகர்த்தன் அரசியை நோக்கி, "அன்னையீர், நீவிர் இனி இங்கிருக்கலாகாது. இருந்தால் உமது உயிருக்கே ஆபத்து நேரும்," என்றான்.

**துர்க்காவதி** :—எத்தனை வீரர் என் கண்முன் இறந்து படுகின்றனர்! அவர்கள் உயிரைக்காட்டிலும் என்னுயிர் சிறந்ததோ!

**தளகர்த்தன்** :—உமது உயிர் சிறந்ததே; ஏனெனில், நீவிர் இல்லாவிடில் இப்படை வீரர் அனைவரும் சிறப் படையார்.

**துர்க்காவதி** :—நான் இறந்தால் வீர நாராயணன் இருக் கிறான்; நீர் இருக்கிறீர். ஆதலால், எனக்கு எத்துணை ஆபத்து நேரினும், இவ்விடம் விட்டகலேன்.

துர்க்காவதி தளகர்த்தனுடன் இவ்வாறு உரையாடிக் கொண்டிருக்கையில், சிறிது தூரத்தில், "அரச குமாரர் புண்பட்டுக் குதிரையினின்றும் கீழே வீழ்ந்தார்," என்னும் கூக்குரல் தோன்றியது. துர்க்காவதி அத்திசையை நோக்கினுள். இந்து சேனு வீரர் சிலர், புண்பட்டுக் கீழே வீழ்ந்த வீர நாராயணனைத் தூக்கிப் போவதைக் கண்டாள். அவள் வயிறு பகீரென்றெரிந்தது. அவளுக்கு ஒன்றும் செய்யத் தோன்றவில்லை.

"காதலர் இறந்தும் நான் உயிருடன் இருப்பது அவனுக்காக அன்ருே? நான் இப்போது போர் புரிவது எதற்கு? அவனுடைய உரிமையை நிலை நிறுத்துவதற்கே. ஆதலால் நான் இன்னே அவன் உடல் நிலைமையைக் கண்டறிய வேண்டும்," என்று கூறிய வண்ணம், மன வருத்தத்துடன், பலவாறு புலம்பித் தீயால் வெதும்புகின்ற வெண்ணெய்போல உருகி, துர்க்காவதி தன் புதல்வனிடம் ஓடினுள். அவளைச் சூழ்ந்து நின்ற வீரரும் போராடுவதைத் தவிர்த்து அவளோடு சென்றனர்.

அரசி அவ்விதம் செய்ததால் நேர்ந்த தீமையை என்னென்றுரைப்பது! மொகல் சேனு வீரர், அவள் போரில் தோற்றுத் தன் வீரரோடு முதுகு காட்டி ஓடுவதாகக் கருதி, அவளையும் அவளைச் சேர்ந்த வீரரையும் துரத்தலாயினர். அதனுல் பெருங்குழப்பம் தோன்றியது. குதிரைகளும் யானைகளும் வெருண்டோடின. இந்து சேனு வீரர் திகிலடைந்து நிலை கலங்கி ஓடலாயினர்.

துக்கத்தில் ஆழ்ந்திருந்த துர்க்காவதி, அவ்வமளியைப் பொருட் படுத்தாமல், வீர நாராயணனைக் காணும் அவா, உந்த யானையைத் துரிதமாக நடத்திச் சென்ருள்.

அவள் வீர நாராயணனைப் பார்க்கக் கொடுத்து வைக்க இல்லை; ஏனெனில், ஆஸப்கான் கட்டளைப்படி மொகல்

சேனை வீரர் அவளைச் சிறைப்படுத்த நெருங்கி வந்துவிட்டனர். தண்டத் தலைவன் அந்நிலையை அவளுக்குத் தெரிவித்தான்.

ஆபத்தான அந்த வேளையில், துர்க்காவதி வீர நாராயணனிடம் போவதை விட்டு, மண்டல நகரை நோக்கிச் சென்றாள். மொகல் வீரர் அவளைத் துரத்திக் கொண்டே சென்றனர்.

சிறிது நேரத்திற்குள் துர்க்காவதி மண்டல நகரை அடைந்தாள். அவளும் அவள் சேனை வீரரும் திரும்பித் தம்மைத் துரத்திக்கொண்டு வந்த மொகலாயரை மறுபடியும் எதிர்த்து நின்றனர். இரு திறத்தாருள் பலர் மாண்டனர். ஆஸப்கான் எதிர்பார்த்தபடி வெற்றி எளிதிற் கிடைப்பதாயில்லை; அதனால், அவனுக்கு முன்னிலும் அதிக கோபம் மூண்டது. அவன் பீரங்கிப் படையை உபயோகித்தான். அப்போர்க்களம் முழுவதும் புகை சூழ்ந்தது. துர்க்காவதியின் போர்வீரர் பலர் அக்குண்டுகளால் மாண்டனர். எஞ்சி நின்றவர் மனத்தளர்வடையாமல் எதிரிகளை எதிர்த்தனர்.

கூர் மண்டலவரசி போர் முனையை விட்டு நீங்கவே இல்லை. அவளுடைய மெல்லிய உடல் முழுவதும் புண்கள் நிறைந்திருந்தன. அப்புண்களினின்றும் உதிரம் பெருகிக் கொண்டிருந்தது. இந்து வீரர் பலர் அவளை நோக்கி, "தாயாரே, நீங்கள் இவ்விடத்தை விட்டுச் சிறிது விலகிக் கொள்ளுங்கள். உங்களுக்காக நாங்கள் போர் புரிந்து எதிரிகளைத் துரத்திவிடுகிறோம்," என்றனர்.

துர்க்காவதி:—அன்பர்காள், அது முறையன்று; நான் உங்களை விட்டு ஒரு கணமும் பிரியேன். பிரியவும் எனக்கு மனம் வரவில்லை.

இந்து வீரர் ஒன்றும் பேசவில்லை. துர்க்காவதி ஏறி இருந்த யானைப் பாகன், தண்டத் தலைவனுடைய தூண்டு தலின்மேல் அவளைப் பார்த்து, " தாயாரே, எதிரியின் பீரங் கிப் படையால் போர்க்களம் முழுவதும் அல்லோல கல்லோல மாய் இருக்கிறது. ஆதலால், நாம் சிறிது நேரம் எதிரி களுக்கு அஞ்சி ஓடுவதாகப் போக்குக் காட்டி இளைப்பாறி அவர்களை மறுபடியும் வீராவேசத்துடன் தாக்கலாம். நமக் குப் பின் புறத்திலுள்ள இவ்வாற்றைக் கடந்து மறு கரை அடைந்து அமராடினால் ஆஸப்கானும் அவன் சேனைவீரரும் பீரங்கிப் படையை உபயோகிக்க இயலாமல் விழிப்பார்கள். நாம் தடையின்றி அவர்களை வெல்லுவோம். பீரங்கிகள் ஆற்றைக் கடந்து வாரா," என்று பணிவுடன் கூறினான்.

தண்டத் தலைவன்:—அம்மையீர், இது சிறந்த யோசனை என்றே நினைக்கிறேன்.

துர்க்காவதி:—இஃது உண்மையே; ஆயினும், நான் இவ்விடத்தில் நின்ற வண்ணமே எதிரிகளைத் தாக்கி வெற்றி அடைவேன்; அல்லது இறந்துபடுவேன். முதுகிட்டோடி னால், பல தீமைகள் நேரக் கூடும்.

இவ்விதம் பேசிக்கொண்டிருக்கையில், வெடி குண்டு கள் பல பறந்து வந்தன. இந்து வீரர் பலர் மாண்டொழிந்த னர். மொகல் வீரர் நெருங்கி வந்தனர். அத்தருணம் துர்க் காவதியின் பின் புறத்திலிருந்த ஆற்றில் வெள்ளம் ஓடிற்று; அதைக் கடந்து செல்வது எளிதாயில்லை.

இந்து வீரருட் பலர் இறந்துபட்டதால் எதிர்த்து வரும் மொகல் வீரரைத் தடுக்க முடியாமல் துர்க்காவதி விழிக்க லானாள்; சிறிது நேரத்திற்குள் அவர்கள் அரசியையும் அவளைச் சார்ந்தோரையும் சூழ்ந்துகொள்வார்கள் என்னும் படி இருந்தது; மொகலாயர் வசம் சிக்கினால் தனக்கு மான பங்கம் நேரும் என்று உணர்ந்த துர்க்காவதி, தன் மனத்துள்

கடவுளைத் துதித்தாள்; தன்னைச் சூழ்ந்து இருந்த நாடு நகரங்களையும் மாடமாளிகைகளையும் கூர்ந்து கவனித்தாள்; தன் கண்ணெதிரில் வீரர் பலர் கொலையுண்டிறப்பதையும் குற்றுயிராய்க் கிடப்பதையும் கண்டு துக்கித்தாள். "அந்தோ! நான் என்னருமைப் புதல்வனைக் காண்பதற்கில்லையே! அவன் புண்பட்டு எவ்வாறு வருந்துகின்றானோ! இந்த ஆரவாரத்தில் அவனைக் கவனிப்பவர் எவரும் இலரே! ஈசா! இதுவும் உன் திருவருட் செயலோ! கூர்மண்டலமே! நான் உன்னை என் உயிரினும் மேலாகக் கருதி, சுவாதீனத்தைப் பாதுகாக்கும் வல்லமையற்றவளாய்விட்டேனே! நீ மொகலாயர் வசம் சிக்கினால், அவர்கள் உன்னை எப்பாடு படுத்துவார்களோ! வீர நாராயணன் கதி என்னவது! அவன் தன் உரிமையை இழந்து எவர் துணையுமின்றி ஏங்கித் தவிப்பனே! ஆ! என்னே என் நிலைமை! என்னே என் வாழ்க்கை!! எந்தையாரின் சாபமே என்னை இந்நிலைமைக்குக் கொண்டு வந்திருக்கலாமென நினைக்கிறேன். அவர் எண்ணத்துக்கு மாறாக நான் தளபதியை மணந்தேன். அதனால், நான் என் கணவருடன் நெடுநாள் வாழக் கொடுத்து வைக்க இல்லை. என் மகனும் ஆகூழற்றவனாயிருக்கிறான். கூர் மண்டலமும் சிறப்பிழந்து மொகலாயர் ஆளுகைக்குட்படப் போகிறது. இம்மையில் நான் துய்த்த போகமொன்றுமில்லை. மறுமையிலாகிலும் என்னருங்காதலர் தளபதிஸாவை அடைந்து இன்புற்றிருக்கக் கடவுள் அருள் புரிவாராக! ஆ! மொகலாயப் படை வீரர் கூற்றுவன் ஏவலரைப் போல என்னையும் என்னைச் சேர்ந்தவரையும் சூழ்ந்துகொண்டனரே! இனி அவர்கள் தப்பிப்போக விடார்கள்; சந்தல குலத்துதித்து, வீரராகிய தளபதிஸாவுக்கு வாழ்க்கைப் பட்ட நான் இங்ஙனம் துன்புற்று விழிப்பேனோ!" என்று தனக்குள் தானே பேசிய துர்க்காவதி உடைவாளை எடுத்

துச் சரேலென்று மார்பிற் குத்திக்கொண்டாள். அதன் வழியே உதிரம் பீறிட்டு, அவளுடைய ஆடைகளை நனைத்து, அவள் ஏறியிருந்த யானையின் முதுகில் வழிந்தோடியது.

அவள் தற்கொலை புரிந்துகொண்டதை அறிந்த யானைப் பாகன் அவளைக் கீழே விழாதபடி தாங்கிக் கொண்டான். அவ்வீரராணி அண்ணாந்து ஆகாயத்தைப் பார்த்தவண்ணம், "நான் தளபதியை மணம் புரியும் நாள் இதுவேயாகும். இந்நாளைப் போன்ற நற்றினம் வேறொன்றில்லை. நான் தேச நன்மைக்காக என்னைப் பலி கொடுத்து என் கடமையைச் செய்து முடித்தேன். என் நாட்டு மக்கள் என்னைப் பின்பற்றி நடப்பார்களாக. அதோ!—அதோ!—என் காதலர்—என்னை—என்னை அழைக்கிறார். நாதரே! என்னருமைக் காதலரே!—இதோ-இதோ-வந்து-விட்டேன்-இனிமேல்-நான் உம்மைப்-பிரியேன். வீர—வீர—நாராயணா—என் செல்வக் குழந்தாய்—நீ—நீ—நெடுங்காலம்—வாழ்.........." என்று கூறி முடிப்பதற்குள் அவள் உயிர் உடலினின்றும் பிரிந்தது.

கூர் மண்டலத்தின் தண்டத்தலைவன் அக்காட்சியைக் கண்ணுற்று மனம் கலங்கி, "வீரத் தாயாரே! உமக்கும் இக் கதி வாய்க்க வேண்டுமா! உயிரினும் மானமே சிறந்ததென் னும் கொள்கையை நிலை நிறுத்திய உம்மை இந்நாட்டார்பின் பற்றுவாராக. அப்பொழுது நாடும் சிறப்படையும். ஆ! உம்மைப்போன்ற அரசியர் இவ்வுலகில் எவர் உளர்? உம்மை இழந்த இக்கூர்மண்டலம் மொகலாயர் வசம் சிக்கிப் பெரி தும் வருந்தும். உமது மரணம், மொகலாயருடைய நற் காலத்தின் அறிகுறியாகும். உம்மைப்போல வீராவேசத் துடன் மொகலாயரை எதிர்த்துத் தாக்கக் கூடியவர் எவரும் இலரே!—இனி நான் கால தாமதம் செய்யாமல், எவரும் அறியாதபடி இத்தீர ராணியின் உடலைக் காக்கவேண்டும். எக்காரணம்பற்றியும் இராணியின் உடலை மொகலாயர் தீண்டு

தல் கூடாது. இவள் இறந்த செய்தி பகைவர் காதில் விழ ஒட்டாமல் தடுத்தல் என் கடமையாகும்," என்று நினைத்து யானைப்பாகன் உதவிகொண்டு இராணியின் உடலை அப்புறப் படுத்தினான்.

ஆஸப்கான் துர்க்காவதி தற்கொலை புரிந்துகொண்ட செய்தியை எப்படியோ அறிந்து அவளுடலைத் தான் கைப் பற்ற முயன்றான். அதற்குள் இராணியின் உடல் சாம்பலா யிற்று.

## 13. கூர் மண்டலக் கொள்ளை

துர்க்காவதி இறந்துபட்ட செய்தி போர்க்களம் முழுவதும் பரவியது. இறந்தவர் போக நின்ற கூர் மண்டலப் போர் வீரர், ஒன்றுஞ் செய்யத் தோன்றுமல் புறங் காட்டி ஓடினர். ஆஸப்கானும் அவனைச் சேர்ந்த வீரரும் அத்தருணத்தை நெகிழ விடாமல், முதுகு காட்டி ஓடிய இந்து வீரரைத் துரத்திச் சென்றனர். அன்றைத் தினம் இந்து வீரருள் மிகச் சிலரே உயிர் தப்பினர்.

ஆஸப்கான் வெற்றியடைந்தான். அவன் எண்ணம் ஈடேறியது. அதன் பிறகு அவன், ஜபல்பூருக்கு (Jubbalpur) மேற்கில் எழுபது கல் தூரத்தில் உள்ளதும் கூர்மண்டலத்தைச் சேர்ந்ததுமான சௌரகிரிக் கோட்டையை (Chowragarh Fort) நோக்கிச் சென்றான்; ஏனெனில், வீரநாராயணனும் அவனைச் சேர்ந்தவரும் அக்கோட்டையுள் இருப்பதாகவும், துர்க்காவதி சேமித்து வைத்த பொருளெல்லாம் அங்குப் புதையுண்டு கிடப்பதாகவும் அவன் கேள்வியுற்றிருந்தான்.

அவன் இரண்டு மூன்று நாட்களுக்குள் சௌரகிரிக் கோட்டையை அடைந்து அதை முற்றுகையிட்டான். உடல் முழுவதும் புண்பட்டு, படுக்கையினின்றும் எழுந்திருக்க இயலா நிலையிலிருந்த வீர நாராயணன் தப்பியோட வகை இன்றி மிதியுண்டு இறந்தான். அக்கோட்டை வெகு விரைவில் மொகல் பிரதிநிதியின் வசமாகும் என்றுணர்ந்த ராஜ புத்திர மாதர் தீ வளர்த்து அதில் குதித்தனர். ஆஸப்கான் கோட்டையுள் நுழைந்தபோது தீயிற் குளித்து உயிர் துறக்கத் தயாராக இருந்த இரு மாதரைச் சிறைப்படுத்தினன். அவ்விருவருள் ஒருத்தி துர்க்காவதியின் தங்கையென்றும், மற்றொருத்தி வீர நாராயணனுக்கு மனைவியாதற்குரிய ஓர்

அரசிளங்குமரியென்றும் கூர் மண்டலச் சரித்திரவாசிரியர் கூறுகின்றனர்.

மொகலாய வீரர் ஆஸப்கான் கட்டளையின்மேல் அக் கோட்டையைக் கொள்ளையிட்டனர்; தம்மைத் தடுக்க வந்த இந்துக்களை இரக்கமின்றி வெட்டி வீழ்த்தினர். துர்க்காவதி சேகரித்து வைத்தவையும் கில்ஜி (Khilji) வமிசத்தைச் சேர்ந்த அல்லாவுத்தீன் என்னும் முகம்மதிய மன்னன் காலத்துப் பொன் நாணயங்கள் அடங்கியவையுமான நூறு பெரிய ஜாடிகள் ஆஸப்கானிடம் சிக்கின. அவன் அவற்றைத் தனக்குச் சொந்தமாக்கிக்கொண்டான் என்பர்; ஆனால், அங்கிருந்த ஆயிரம் யானைகளை அவன் பாதுஷாவிடம் அனுப்பிவிட்டான்.

நீர் நில வளங்களும் இயற்கை அரண்களும் இனிய காட்சிகளும் பொருந்தி விளங்கிய கூர்மண்டலம் கணவனையிழந்த கற்புடைப் பெண்போலப் பொலிவிழந்து தோன்றியது. பேராசை மிகுந்த ஆஸப்கான் அந்நாட்டைத் தன் அடிப்படுத்திச் சுயேச்சையாக அரசாளக் கருதினான்; அக்கருத்தை நிறைவேற்றிக்கொள்வதற்கான முயற்சி செய்யலானான். அக்காலத்தில் அக்பரை ஒழிந்தோரெவராயினும் டில்லியில் அரசாட்சி செய்துகொண்டிருப்பின், அவன் அந்த நாட்டை மாளவம் (Malwa), கூர்ஜ்ஜரம் (Guzaret), தக்காணம் (Deccan) முதலிய நாடுகளைப்போல ஒரு முகம்மதியத்தனி நாடாக்கி அங்கு யாதோர் அச்சமுமில்லாமல் அரசியல் நடத்தி வந்திருப்பான். ராஜ்ய நிர்வாகத்திலும், போர் வன்மையிலும், செல்வப் பெருக்கிலும் இணையற்று விளங்கிய அக்பர் பாதுஷாவுக்கு மாறானசெயல்களைச் செய்து ஒருவன் தப்ப முடியுமோ?

ஆஸப்கானது பேராவலை ஒருவாறு உணர்ந்துகொண்ட பாதுஷா, டில்லிக்கு வந்து தம்மைக் காண வேண்டுமென்று

அவனுக்குக் கட்டளையிட்டார். அவன் அவர் கட்டளைக்குப் பணிந்து நடவாமல் தன் விருப்பப்படி நடக்கலாயினன்; அக்பரை எதிர்த்துப் போராற்றவும் துணிவு கொண்டான்.

அக்பருக்கும் ஆஸப்கானுக்கும் போர் நிகழ்ந்தது. இறுதியில் ஆஸப்கான் தன் குற்றத்தை உணர்ந்து எல்லா வழிகளிலும் தன்னினும் பன்மடங்கு சிறந்து நின்ற பாதுஷாவை அணுகி, "மன்னர் மன்னரே, தங்களுடைய ஆற்றலை அறியாது அடிமை தங்களுக்கு மாறாய் நடந்தேன். நான் செய்தது தவறென்று இப்போது உணர்ந்து தங்களைத் தஞ்சமடைந்தேன். என்னை மன்னித்துக் காக்க வேண்டும்," என்று கூறிப் பணிந்து பெரிதும் மன்றாடினான்.

பெருந்தகையாளராகிய அக்பர் அவனை முழு மனத்துடன் மன்னித்து முன்போல மாணிக்கபுரத்துக்குத் தலைவனாக்கினார்; அதனால், ஆஸப்கான் கூர் மண்டலத்தை அக்பரிடம் ஒப்பித்துவிட்டு மாணிக்க புரம் அடைந்தான்.

சின்னாட்களுக்குப் பிறகு கூர் மண்டலத்தார் ஒன்று கூடிச் சூரமன் பாஜ்பாய் (Chooramun Bajpae) என்பவரைத் தூதுவராக நியமித்து, அந்நாட்டின் உரிமையை இறந்துபட்ட இராணி துர்க்காவதியின் மைத்துனனும் தளபதி ஸாவின் தம்பியுமான சந்திரஸாவுக்குக் கொடுக்க வேண்டி அக்பரிடம் அனுப்பினார்கள்.

சூரமன் பாஜ்பாய் மிக்க திறமையுள்ளவர்; சொல்வன்மையிற்சிறந்தவர். அவர் தூதராகச் சென்ற சமயம் கூர் மண்டலத்தாருக்கு மாறாக ஆலோசனை கூறுவதில் ஒப்புயர் வற்று விளங்கிய ஆஸப்கான், அக்பருடைய அவநம்பிக்கைக் குரியவனாயினன்; ஆதலால், கூர் மண்டலத்தாரின் விருப்பத்தை அத்தூதுவர் மூலம் அறிந்த பாதுஷா, தாமே தனிமையில் ஆலோசித்துத் தம்மால் துர்க்காவதிக்கு நேர்ந்த அகால மரணத்தை நினைந்து மனமிளகிக் கூர் மண்டலத்தார்

வேண்டுகோளுக்கு இசைந்தார். அவர் தம்மை நாடி வந்த சூரமன் பாஜ்பாயை நோக்கி, "ஐய, சந்திரஸா கூர் மண்டலத்தை அரசாட்சி செய்வதில் நமக்கு யாதொரு தடையும் இல்லை. ஆனால், அவர் இப்போது நமது ராஜ்ய எல்லைக்குச் சமீபத்திலுள்ள பத்து ஜில்லாக்களைக் கொடுத்து விடுவதுமன்றி, ஆண்டுதோறும் கப்பங் கட்டிக்கொண்டு வரவும் சம்மதிக்க வேண்டும். சந்திரஸா இந்நிபந்தனைகளுக்கு உட்படுகிறவரையில் அவர் அந்நாட்டின் உரிமையை அடைவதற்குத் தடை இது," என்று கூறி, அத்தூதுவருக்கு விடையளித்தார்.

சந்திரஸா, பாதுஷா விரும்பியபடி அவர்பால் கூர்மண்டலத்தைச் சேர்ந்த பத்து ஜில்லாக்களை ஒப்பித்துவிட்டான்; ஆண்டுக்கொரு முறை அவருக்குக் கப்பங் கட்டி வரவும் சம்மதித்தான்.

சந்திரஸா, கூர் மண்டல அரசன் ஆயினன். அவன் அக்கணமே துர்க்காவதியின் ஞாபகார்த்தமாக அவள் உயிர் நீத்த இடத்தில் நடுகல் ஒன்று நாட்டி அவளைப் பெரிதும் கௌரவித்தான்.

அவன் நாட்டிய நடுகல் இரு குன்றுகளுக்கு இடையில் ஜபல்பூருக்குப் பன்னிரண்டு கல் தூரத்தில் தனியே இருப்பதை நாம் இன்றைக்கும் காணலாம். அவ்வழியே செல்லும் கூர் மண்டலத்தார் அந்நடுகல்லைச் சுற்றி வந்து அதன் மீது, வெண்ணிறமலர்மாலையைச் சூட்டி வீழ்ந்து வணங்குவர்.

நடுநிசியில் எங்கும் ஓசை அடங்கியிருக்கும் சமயத்தில் துர்க்காவதி இறந்துபட்ட இடத்தில் பேரிகை முழக்கமும் வீரத் தொனியும் அவ்விராணி தூண்டுதலின்மேல் உண்டாவதாகவும் கேட்பதாகவும் கூர் மண்டலத்தார் இன்றும் நம்புகின்றனர்.

## 14. துர்க்காவதிக்கும், ஸெனோபியாவுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள்

கிறிஸ்தவப்தம் மூன்ரும் நூற்ருண்டின் பிற்பகுதியில், மத்திய தரைக் கடலுக்குக் (Mediterranean Sea) கிழக்கில் உள்ள ஸிரியா (Syria) தேசத்தில் ஸெனோபியா (Zenobia) என்னும் பெயருள்ள இராணி அரசு நடத்தி வந்தாள். அக்காலத்தில் அவள் மிக்க புகழுடன் விளங்கினாள். அவளுடைய வாழ்க்கைச் சரித்திரமும் துர்க்காவதியின் வாழ்க்கைச் சரித்திரமும் பலவற்றில் ஒத்திருக்கின்றன; அவற்றை இங்கு எடுத்துக் கூறுவதனால் இதைப் படிக்கும் மாணவரும் மாணவியரும் பெரும்பயன் அடைவர். கீழ் நாட்டு மாதர், மேனாட்டு மகளிரைக்காட்டிலும் எத்திறத்திலும் ஈட்டிணையும் தாழ்ந்தவரல்லரென்னும் உண்மையை உணர்ந்து தேச பக்தியில் இணையற்று விளங்குவர்; அவர்கள் அறிவும் விசாலமடையும்.

துர்க்காவதியும் ஸெனோபியாவும் கொழுநன்வழி நின்றவர்; நற்குலத்தில் தோன்றியவர். அவ்விருவருக்கும் வாய்த்த கணவர் அவர்களுடைய முன்னேற்றத்தில் கண்ணேட்டம் வைத்து அவர்களை மிக்க பிரியமுடன் நடத்தி வந்தனர். துர்க்காவதியின் புருஷனுகிய தளபதிஸா (Dalpat Sah) அஞ்சா நெஞ்சம் படைத்தவன்; ஆண்மை மிகுந்தவன்; போரிற் புறங்காட்டியோடி அறியாத பெருந்திறல் உடையவன். அவனைப் போலவே, ஸெனோபியாவை மனைவியாக வரித்த உதனேதஸஸ் (Odenathus) பகைவர் அஞ்சியோடத் தக்க வீரன்; பகைவரை எதிர்த்துத் தாக்கித் தகர்ப்பவன்; வென்றி மறஞ் சிறந்தவன். இவ்விரு மன்னரும் தத்தம் மனைவியருக்கு முன்னரே இறந்துபட்டனர்.

தளபதிஸா நோய்வாய்ப்பட்டு அகால மரணமடைந்தான். உதனெதஸ், பகைவன் ஒருவனுற் கொலையுண்டிறந்தான்.

இரண்டு அரசியரும் கல்வி கேள்விகளில் நிகரற்று விளங்கினர்; வில் வாள் வித்தைகளிலும், குதிரையேற்றத்திலும் சிறந்தவர்; ஒழிந்த வேளைகளில் வேட்டையாடுவதிலும் சமயம் வாய்த்த போது போர் புரிவதிலும் அவர்கள் காலங்கழிப்பார்கள்.

உடலமைப்பிலும் முக வனப்பிலும் அவ்விருவரும் ஒப்புயர்வற்று விளங்கினர். அவர்கள் குடிகளைத் தங்கள் குழந்தைகளைப்போலப் பாதுகாத்து வந்தார்கள். அவர்கள் ஆளுகைக்குட்பட்டிருந்த குடிகள் அனைவரும் அவர்களை நேசித்து வந்தார்கள்; அவர்களிடம் விசுவாசத்துடன் நடந்து வந்தார்கள்; தத்தம் அரசியரோடு இராச்சிய நிர்வாக விஷயங்களில் ஒத்துழைத்தும் வந்தார்கள்.

இருவரும் இளம்பருவத்திலேயே கைம்பெண்டிராயினர். துர்க்காவதிக்கு, வீர நாராயணன் என்னும் புதல்வன் ஒருவன் இருந்தான். ஸெனேபியாவுக்கோ மூன்று குமாரர் இருந்தனர். அவ்வரசியார் இருவரும் தத்தம் புதல்வருக்கு, கிடைத்த ஒழிவு நேரங்களிற் கல்வி போதித்ததுமன்றிப் போர்ப் பயிற்சியும் செய்வித்தனர்.

துர்க்காவதி கூர்மண்டலத்தில் செங்கோல் செலுத்தி வந்த காலத்தில் வட இந்தியாவில் ஏகாதிபத்தியம் பெற்று விளங்கியவர் அக்பர் பாதுஷா என்னும் முகலாயர். அவர் துர்க்காவதியைச் சுயேச்சையாய் அரசாள ஒட்டாமல் கூர்மண்டலத்தைத் தமக்குக் கீழ்ப்படியச் செய்தமை அறியாததன்று. அதைப்போலவே, ஸிரியா தேசத்தை ஸெனேபியா அரசாண்டு வருகையில் அந்நாட்டுக்கு அருகில் உள்ள இத்தாலி (Italy) நாட்டிலும் அதைச் சூழ்ந்த பிற நாடுகளிலும் ஏகாதிபத்தியம் அடைந்து விளங்கியவன் அரிலியன்

(Aurelian) என்னும் உரோமாபுரி வேந்தன். அவனும் ஸெனோபியாவை யுத்தத்தில் தோல்வியுறச் செய்து அவள் நாடுகளைத் தன் கைவசப்படுத்திக்கொள்ள அவாக் கொண்டிருந்தான்.

துர்க்காவதி அக்பருக்கும், ஸெனோபியா அரிலியனுக்கும் அடங்கி நடக்க விரும்பிலர். அவர்கள் தங்களால் முடிந்தவரையில் தங்கள் சுவாதீனத்தைக் காத்துக்கொள்ளத் தாங்களே தலைமை வகித்து, படைவீரரின் உதவியைக் கொண்டு வீராவேசத்துடன் அக்பரையும் அரிலியனையும் எதிர்த்துத் தாக்கினார்கள்.

துர்க்காவதியின் படை வீரரும் மொகலாய வீரரும் சிங்களகிரிக்கோட்டைக்கருகிலும் (Singalgarh Fort) மண்டல நகரத்திலும் (Mandel) ஒருவரையொருவர் எதிர்த்துப் பொருதனர். ஸெனோபியாவின் நால்வகைப் படையும், எமிஸா (Emesa), ஆண்டியாக் (Antioch) என்னும் நகரங்களுக்குச் சமீபத்தில் அரிலியன் அனுப்பிய சேனைகளை மிக்க ஆவேசத்துடன் எதிர்த்தன. எதிர்த்தும் என்? கால வசத்தால் துர்க்காவதியும் ஸெனோபியாவும் போர்க்களங்களில் தோல்வியடைந்தனர்.

அக்பர்பாதுஷாவுக்காகத் துர்க்காவதியை எதிர்த்துப் போர் புரிந்தவன் ஆஸப்கான் என்னும் வீரன். போர் நிகழ்ந்த சமயத்தில் அக்பர் தமது தலை நகராகிய டில்லியை விட்டு வெளி வரவில்லை. போர் நடந்த வழியையும் அவர் அறிந்திலர். ஆனால், அரிலியன் தானே சேனையை நடத்திச் சென்று ஸெனோபியாவுக்கு மாறாய் அமராடினன். இறுதியில், புரோபஸ் (Probus) என்னும் தளகர்த்தன் அவனுக்கு உதவி புரிந்தனன். அச்சமயங்களில், துர்க்காவதி கூர்மண்டலத்திலும், ஸெனோபியா ஸிரியாவிலும் போர் முனையில் நின்று தத்தம் உயிர் மீதும் இச்சை வையாது

முறையே ஆஸப்கானேயும், அரிலியனேயும் அவனது சேனுதி பதியையும் வீரத்துடன் தாக்கி நின்றனர்.

ஸெனேபியாவின் அருகில் இருந்து நிழல்போல உதவி புரிந்த தளகர்த்தன் ஸோப்தாஸ் (Sobdas) என்பவன். தூர்க்காவதியைத் தன் உயிரினும் மேலாகக் கருதி அவளே விட்டுப் பிரியாமல் அவள் அருகில் நின்று காத்தவன் தளகர்த்தன். அவள் இறந்துபட்ட பிறகும் அவளுடைய உடலே எதிலர் கைப்பற்று வண்ணம் தடுத்து விநயத்துடன் காத்தவனும் அவனே. அவன் பெயர் இன்னதென இதுகாறும் புலப்படவில்லை. அரசியரிருவரும் ராஜாங்க உத்தியோகஸ்தரைத் தேர்ந்தெடுப்பதிலும் அவர்களைத் தம்முடன் ஒத்துழைக்கச் செய்வதிலும் நிகரற்று விளங்கினர்.

தூர்க்காவதியும் ஸெனேபியாவும் பெண்டிராயினும் வல்லமையும், புத்தி சாதுரியமும், தேச பக்தியும் ஒருங்கே அமைந்து விளங்கினர். சம காலத்தரசர் பலரும் அஞ்சி நடுங்கினர். பாதுஷா தூர்க்காவதியுடன் போராடத் துணிவு கொள்ளவில்லை; ஆஸப்கான் அவருக்கு ஆசையூட்டி, தூர்க்காவதியை எளிதில் தோற்கடிக்கலாம் என்று கூறி, அவர் மனத்தை மாற்றினுன்; ஆயினும், அவளுடன் போர் நிகழ்த்துங் காலத்தில் அவளே வெல்லுவது எளிதன்றென்பதை அவன் நன்கு உணர்ந்தான். வீர நாராயணன் போர்க்களத்தில் புண்படாவிடில்—ஆற்றில் வெள்ளம் ஓடியிராவிடில்—மொகலாய தளகர்த்தன் திறமை வெட்ட வெளிச்சமாயிருக்கும்; அக்பர் வருந்தியிருப்பர். ஸெனேபியாவின் மனத்திண்மையையும் வீரத்தையும் குறித்து அவளுடன் போராடிய அரிலியன் தன் நண்பனுக்கு அனுப்பிய நிருபமொன்றிற் பின்வருமாறு வரைந்திருக்கின்றனன் :—

“ பெண்பாலாகிய ஸெனேபியாவின் மீது போர் தொடுத்து நிற்கும் என்னே உரோமாபுரி மக்கள் சுத்த வீரன்

அல்லன் என்று பழித்தும் பேசுகின்றார்கள். அவர்கள் அம் மாதரசியின் குணச் சிறப்பையும் போர் வன்மையையும் அறிந்திருப்பின் அவ்வாறு பேச முற்படார்கள்; அவள் என்னை எதிர்த்துத் தாக்கச் செய்துள்ள முறைகள் எடுத்துரைக்க இயலாதவை; அவள் தொகுத்துள்ள அம்பு, வில், வாள், கவசங்கள் முதலியவை எண்ணிலடங்கா. எதிரிகளைக் கோட்டையுள் புகா வண்ணம் தடுப்பதற்குரிய நெருப்புமிழ் யந்திரங்களும், பல்வேறு பொறிகளும் கோட்டை மதிற் சுவரின்மேல் வைக்கப்பெற்றுள்ளன. அவளுடைய கோட்டைகளைச் சுற்றியுள்ள அகழிகளில் முதலைகள் நிறைந்திருக்கின்றன. அவ்வகழிகளில் தவறி விழுவோர் உயிர் பிழைப்பது இயலாத காரியமாகும். இத்தகைய ஜாக்கிரதையுடன் இருக்கும் அவ்வரசியைப் போரில் வெல்லுவது எளிதென்று கூறலாகுமோ! சுத்த வீரர் எனப் பெயர் படைத்தவரன்றோ அவளுடன் போரிட வேண்டும்? நான் இதுவரையிற் பல நாடுகளைக் கைப்பற்றி உரோம ராஜ்யத்துடன் சேர்த்திருக்கிறேன்; அப்பொழுதெல்லாம் எதற்கும் அஞ்சியதில்லை; ஆயினும், என்னவோ நானறியாமலே என் மனத்தில் அச்சம் குடி புகுந்துவிட்டது. என்னைத் திகிலடையச் செய்யும் அவள் எளியவள் அல்லள். இதுகாறும் எனக்கு வெற்றியே அளித்து வந்த ஆண்டவர் இச்சமயத்திலும் என்னைக் கை நெகிழவிடார் என்று நம்பியிருக்கிறேன். அவனன்றியோர் அணுவும் அசையாதன்றோ!"

அரிலியன் எழுதியபடி ஸெனோபியா அச்சுறுவிப்பவள் என்பதில் தடையே இல்லை. அவளும் துர்க்காவதியைப் போல மிக்க தைரியமாகப் போராடினாள்; ஆயினும், இறுதியில் தோல்வி அடைந்தாள். அவள் தோல்விக்குக் காரணம், அரிலியனுடைய படை வன்மையும், தளரா ஊக்கமும், சிரியாவைத் தன்னடிப்படுத்த வேண்டும் என்னும்

உறுதியுமேயாகும். அவள் தன் தேசத்தைக் காப்பதற்காகப் பெரிதும் முயன்ருள். அதற்கு அவள் கொண்ட முயற்சியும் பொருட் செலவும் இத்துணையென்று வரையறுத்தற்கியலா. அவளுக்கு உதவி புரிவதாக வாக்களித்த பாரஸிய மன்னன் (Persian King) ஸாப்பர் (Sapor) என்பவன் அச்சமயம் இறந்துவிட்டான். பாரஸீக நாட்டிற் கலகம் குடிகொண்டது. ஸெனேபியாவுக்குத் துணை வலி கிடைப்பது அரிதாயிற்று. அரிலியன் ஆணைப்படி அவனுடைய தளகர்த்தன் புரோபஸ் (Probus) எகிப்து (Egypt) நாட்டை வசப்படுத்திக்கொண்டு ஸிரியாவை நோக்கி வந்தான். அவன் வருவதை அறிந்து ஸெனேபியா அச்சங்கொண்டு ஒன்றும் செய்யத் தோன்ருமல் தன்னுயிரின் மீதிருந்த ஆசையால் புறங்காட்டி ஓடலானுள்.

மண்டல நகரத்துக்கு அருகில் நேர்ந்த போரில் தோல்வியுற்ற துர்க்காவதி முகலாயரிடம் சிக்கி மானமிழந்து வாழ்வதினும் உயிரிழப்பது சிறந்ததெனக் கருதி, தான் இருந்த இடத்தை விட்டுப் பெயராமல் தன்னிடமிருந்த உடைவாளாற் கொலை புரிந்துகொண்டாள்; ஆனுல், ஸெனேபியா மானத்தைக்காட்டிலும் உயிரே சிறந்ததென்னும் கொள்கையுடையவள். ஆகையால், அவள் உயிர் தப்பிப்பிழைக்க ஓடினுள். அரிலியனுடைய குதிரைப் படைவீரர் அவளை விடாமல் துரத்திக்கொண்டுபோய் யூபிரடிஸ் (Euphrates) ஆற்றுக்கருகிற் சிறை செய்தனர். அவள் பகைவர் தன்னைப் பற்றிக்கொள்வதற்கு முன் தன் உயிரை மாய்த்துக்கொள்ள மனந் துணியவில்லை.

ஸெனேபியா, தன் நாட்டையும் தலைமையையும் இழந்து அரிலியன் கட்டளைப்படி உரோமாபுரியில் வசித்துவந்தாள். அவளுடைய மூன்று குமாரரும் அவளை விட்டுப் பிரியவில்லை. துர்க்காவதி, கூர் மண்டலத்தை இழந்தாள்; ஆனுல், சுதந்

தரத்தையும் மானத்தையும் இழக்கவில்லை. ஆஸப்கானிடம் சிக்காமல் மானமே எல்லாவற்றினும் சிறந்ததெனக் கருதி, அவள் போர்க்களத்திலேயே தற்கொலை செய்துகொண்டாள். போரும் முடிந்தது. அவள் உடல் வெந்து சாம்பலாயிற்று.

ஸெஞேபியாவுக்கு மூன்று புதல்வர் இருந்தனர். துர்க்காவதிக்கோ, ஒரே புத்திரன் இருந்தான். அவனும் போர்க்களத்திற் புண்பட்டு மிதியுண்டு உயிர் துறந்தான்.

## 15. துர்க்காவதியின் வழியினர்

உலக முடிவு வரையில் அழியாப் பெரும்புகழ் படைத்த உத்தமியாகிய துர்க்காவதி, வீரத் திருவின் நடன சாலையாகிய போர்க்களத்தில் மண்ணுலகை நீத்து விண்ணுலகடைந்த பின்னர், சந்திரஸா கூர் மண்டல அரசுரிமையைப் பெற்று, சிறிது காலம் அந்நாட்டையாண்டு வந்தானென்று முன்னமே கூறியிருக்கிறோம்.

அவன் இறந்த பிறகு, மாதுக்கூர் ஸா (Madhukur Sah) என்னும் அவனுடைய இளைய புதல்வன், தன் அண்ணனைக் கொன்று பட்டத்துக்கு வந்தான். ஆனால், அவன் அப்பதவியை நெடுநாள் பெற்று வாழவில்லை. அவன் செய்த கொலைக் குற்றத்திற்காகக் கடவுள் அவனுக்குத் தகுந்த தண்டனை விதித்தார். அவன் கை தேர்ந்த வைத்தியராலும் குணப்படுத்த இயலாத நோயால் துன்புற்று நடக்கவும் வல்லமையற்று, கிடந்த இடத்திலேயே கிடந்த வண்ணம் பெரிதும் வருந்தினான். "அந்தோ! நான் இவ்விதம் வருந்துவதினும் உயிர் துறப்பது சாலவும் நன்று," என்று அவன் அடிக்கடி கூறுவது வழக்கம்.

கொலைப்பாவம் கொடிதன்றோ! அதைச் செய்வோர் தம் சொல் வன்மையாலும், செல்வாக்காலும், பதவியாலும், அரச தண்டத்துக்குத் தப்பினும் தப்புவர்; கடவுள் தண்டனைக்குத் தப்பவே முடியாது. அவர்கள் கொடிய நோய்களினால் வருந்தி இறப்பார்கள்.

இவ்வாறு பல வியாதிகளால் வருந்தி உழன்ற மாதுக்கூர் ஸா ஸம்ஸ்தான சோதிடரை வருவித்து, "நோய் நீங்குவது எப்படி?" என்று வினவினன்.

சோதிடர், "அரசரேறே, கொலைப் பாவத்தால் வந்த நோய் நீங்குவதரிது : கடவுள் வழிபாட்டால் ஒருவேளை நீங்கினும் நீங்கும்" என்றனர்.

அவன் கடவுள் வழிபாடியற்ற ஒப்பவில்லை. அவனுக்கு வந்த நோயும் நீங்கவில்லை. நாளடைவில் பைத்தியம் பிடித்து அலைந்து திரிந்துகொண்டிருந்தான். ஒருநாள் இரவு எவரும் அறியா வண்ணம், மண்டல நகரத்துக்குப் பன்னிரண்டு கல்தூரத்தில் இருந்த உலர்ந்த மரப் பொந்தொன்றில் அவன் நுழைந்து வெளியில் வரக்கூடாமையால் இறந்து போனன் என்பர்.

அச்சமயம், அவன் புதல்வன் பிரேம நாராயணன், ராஜாங்க விஷயமாக அக்பர் பாதுஷாவைப் பார்க்க டில்லி போயிருந்தான். அவன் தன் தந்தை இறந்த செய்தியைக் கேட்டு அங்குத் தங்காமல் மண்டல நகரத்துக்குத் திரும்பினன். திரும்புகையில் தன் புத்திரன் ருதுஸா என்பவனை டில்லியில் நிறுத்தி, "நீ எனக்குப் பதிலாக இங்கிருந்து பாதுஷாவைக் கண்டு வருவாயாக," என்று கூறிப்போனன்.

பிரேம நாராயணன் கூர் மண்டலத்துரிமையைப் பெற வருகிற வழியில் அவன் குடும்ப விரோதியான ஜீஜார் ஸிங்கு என்னும் தீயோன் மறைந்து நின்று அவனைக் குத்திக்கொன்றான். தன் தந்தையை ஜீஜார் ஸிங்கு கொலை செய்துவிட்டதை அறிந்த ருதுஸா, தன் காரியத்தைச் சரிவர டில்லியில் முடித்துக்கொண்டு கூர்மண்டலத்திற்கு வந்து பழி வாங்க முயன்றான். அவன் கையிற் போதுமான பொருள் இல்லை. இன்னது செய்வதென்று அவனுக்குத் தெரியவில்லை. அவன் இங்கும் அங்கும் போவதும் வருவதுமாய் இருந்தான். சௌரகிரி நகரில் ஒரு நாள் அவன் முதிர்ந்த பருவமுள்ள தன் செவிலித் தாயைக் கண்டு, அவளுக்குத் தன் நிலையைத் தெரிவித்தான்.

அவள் அவன் கூறியவற்றைக் கேட்டு மனம் வருந்தி, "ருதுஸா, நீ ஒன்றுக்கும் அஞ்சாதே; உன் தந்தையார் உன்னை அழைத்துக்கொண்டு டில்லிக்குப் போகுமுன் தமது அரண்மனையில் ஓரிடத்தில் பொன் நாணயங்களை ஐம்பது ஜாடிகளில் நிரப்பிப் புதைத்து வைத்திருந்தார். அவ்விடத்தை நான் உனக்குக் காண்பிக்கிறேன்; வா," என்று கூறி, அவனை அழைத்துக்கொண்டு போய், அந்த இடத்தைக் காண்பித்தாள்.

அவன் அவற்றைத் தன் வசப்படுத்திக்கொண்டு, கூர் மண்டலப் பிரபுக்களையும் போப்பால் (Bhopal) நாட்டு முகம்மதியரையும் உதவி செய்ய வேண்டுமென்று வேண்டினான். அவர்கள் அவனிடம் அன்பு கொண்டு அவன் விருப்பத்துக்கு இசைந்தார்கள்.

ருதுஸா, அவர்கள் உதவியால் ஜீஜார் ஸிங்கையும் அவனைச் சேர்ந்த வீரரையும் எதிர்த்துத் தாக்கினான். தன் தந்தையை மறைந்து நின்று கொன்ற அத்தீயோனை நேரிற் கண்டு, "கீழ் மகனே, நீ கொடியோன்; எந்தையை மறைவிடத்திலிருந்து குத்திக்கொன்ற நீ ஓர் ஆண்மகன் அல்லை; உன்னைப் போன்றவர் உலகில் வாழ்தல் நியாய விரோதமாகும். ஆதலால், இன்றைத் தினம் பொழுது சாய்வதற்குள் நான் உன்னை என் வாளுக்கு இரையாக்க உறுதிகொண்டு இருக்கிறேன்," என்றான்.

அச்சமயம், ஜீஜார்ஸிங்கு, ருதுஸா மீது பொருக்கெனப் பாய்ந்து அவனை உறுதியாய்ப் பற்றிக்கொண்டு அவன் தலையை வெட்ட முயன்றான்; ருதுஸா பலத்திற் சிறந்தவன்; மற்போரில் தேர்ச்சியுள்ளவன். அவன் தன்னைப் பிடித்த ஜீஜார்ஸிங்கைக் கீழே வீழ்த்திக் கொன்று பழி வாங்கிவிட்டு மனம் மகிழ்ந்தான்.

ஜீஜர் ஸிங்கு இறந்த பிறகு ருதுஸாவிற்கு பகைவர் எவரும் இலர். அவன் கூர் மண்டலத்தை ஐம்பது வருஷ காலம் அமைதியுடன் ஆண்டு வந்தான்; அந்நாட்டிற் பல சீர்திருத்தங்கள் செய்தான். தன்னுட்டுச் செல்வ விருத்திக்கு விவசாயமும் வியாபாரமும் இன்றியமையாதவை என்றுணர்ந்து, அவன் அவ்விரு துறைகளிலும் ஈடுபட்டு உழைத்து வந்தான். பயிர்த்தொழிலிற் கைதேர்ந்த லோதிஸ் (Lodhis), குருமாஸ் (Kurmas) என்னும் சாதியாரை வருவித்து ருது நகர் என்று தன் பெயரால் வழங்கி வரும் தாலூகாவில் இருந்த கரம்புகளை உழுவித்து நெல் முதலிய தானியங்கள் விளையக்கூடிய நன்செய்களாக்கினுன்; வியாபாரத்துக்குரிய வசதிகள் ஏற்படுத்தினுன்.

இப்போது ஜபல்பூருக்கு அருகில் கண்கவரும் வனப்பு வாய்ந்ததும் குளிர்ந்த நிழல் தருவதுமான மாந்தோப்பு அவன் காலத்தில் உண்டாக்கப்பட்டதே. அவன் அங்கு இலட்சம் மாஞ்செடிகள் நட்டுப் பல கூலியாட்களைக் கொண்டு நீர் பாய்ச்சி வந்தானென்பர்.

ருதுஸாவும் துர்க்காவதியைப்போல் கூர்மண்டலமெங்கும் நீர்நிலைகளைப் பெருக்கினுன். அவற்றுள் கங்கா சாகரம் (Ganga Sagar) என்பது சிறந்ததாகும்.

ராஜ்ய பாரத்தைத் தாங்கியவுடன் ருதுஸா, துர்க்காவதியின் அரசியல் முறைகளைப் பின்பற்றி நடந்தான். குடிகள் தன்மீது குறை கூறு வண்ணம் பல விதங்களிலும் அவர்களுக்கு நன்மையைச் செய்து வந்தான். அக்காலத்தில் கூர் மண்டலம் நல்ல நிலையிலிருந்தது.

மொகல் சக்கரவர்த்திகளின் துன்பம் பொறுக்க மாட்டாமல் அவன் தன் தலை நகரை இராம நகருக்கு மாற்றிக் கொண்டான். அவ்வழகிய நகர், நருமதையாற்றுக்குத் தெற்கில் மண்டல நகருக்குப் பத்துமைல் தூரத்தில், இயற்கை

யரண் பொருந்தியிருந்தது. அந்நகரில் நருமதையாற்றங் கரையில் அவன் தான் தங்கியிருப்பதற்காக ஒரு பெரிய அரண்மனையைக் கட்டுவித்தான்; அம்மாளிகைச் சுவரில் கூர் மண்டல அரச வமிசாவளி செதுக்கப்பெற்றிருப்பதை இன்றைக்கும் காணலாம்.

ருதுலா, நீதி முறை தவறாமல் நெடுங்காலம் கூர் மண்டலத்தில் செங்கோல் செலுத்தி வந்து இறந்து போயினன். அவனுக்குப் பிறகு, சத்தர் ஸா (Chatter Sah), ஹரிசிங்கு (Hari Singh) என்னும் அவன் குமாரரிருவரும் அரசுரிமைக்காகத் தம்முட் போராடினர். இறுதியில், சத்தர் ஸா சிங்காதனம் ஏறினன். அவன் இரண்டொரு வருஷம் அரசியல் நடத்திக் கால கதியால் இறந்தான்.

அவனுக்கு ஒரு குமாரன் உண்டு; அவன் பெயர் கேஸரி ஸா (Kesari Sah) அவனே தன் தந்தைக்குப் பிறகு ராஜ்யத்தைப் பெறுதற்கு உரியவன்; ஆனால், ஹரி ஸிங்கு பண்டல் கண்டு நாட்டாருதவியால் கேஸரியைக் கொலை செய்து பட்டத்துக்கு வர முயன்றான்.

ராஜ்ய உரிமை பெறும் பொருட்டுத் தன் சகோதரன் புதல்வனைக் கொலை செய்த கன்மனத்தோனாகிய ஹரிஸிங்கின்மீது கூர் மண்டலத்தார் வெறுப்புற்றனர்; அவர்கள் காலந் தாழ்க்காமல் கேஸரியின் புதல்வனை நரிந்து ஸா (Narindhu Sah) என்பவனை இராம நகரத்துக்கு அழைத்துப்போய் அரியாசனத்தில் அமர்த்தினர். நரிந்து ஸா இளைஞனைதனால் அவர்கள் அவனுக்காக ஒரு பெருஞ்சேனை திரட்டி, ஹரி ஸிங்கின் மீது போர் தொடுத்தனர். அவன் அந்தப்போரில் தோல்வியடைந்து வெட்டுண்டு இறந்தான்.

சில வருஷங்கள் சென்றன. நரிந்து ஸா தக்க வயதடைந்து ராஜ்ய பாரமேற்றான். அவன் இராம நகரை விடுத்து, மண்டல நகரை முன்போலத் தன் ராஜதானி

ஆக்கிக்கொண்டான் ; அங்குச் சில காலம் செங்கோல் செலுத்தி வந்தான்.

ஹரிஸிங்கின் இனத்தவருட் சிலர் அவன்மீது அழுக்காறுற்று அவனுக்கு மாருக மராட்டிரர் உதவியை நாடினர். அதையறிந்த நரிந்து ஸா, மராட்டிரர் குணச் சிறப்புக்களை நன்கு உணர்ந்தவனுனதனால், அவருள் முக்கியமானவர்களை வருவித்து, அவர்களுக்குப் பெரும்பொருள் கொடுத்து அனுப்பினன் ; அதனால், அவர்கள் அவனுடைய பகைவரோடு சேரவில்லை.

அவன் கி. பி. 1731-ஆம் ஆண்டு இறந்து போனன். அவனுடைய குமாரன் மகாராஜ ஸா பட்டத்துக்கு வந்தான். கூர் மண்டல நாடு தாழ் நிலை அடைந்தது. நாட்டிற் பஞ்சம் உண்டாயிற்று. அந்நாட்டுக் குடிகள் துன்பத்துள் அழுந்தினர்கள். ராஜ்ய நிர்வகத்தில் கேஸரி ஸா, நரிந்து ஸா முதலியோர் வாங்கியிருந்த கடன் நாளுக்கு நாள் வளர்ந்து வந்தது. அதைப் போக்க வேண்டி மகாராஜ ஸா புதிய வரிகள் விதித்தான். அவ்வரிகளைக் கொடுக்க இயலாமல் பலர் அந்நாட்டை விட்டு ஓடினர்.

இவ்வாறு கூர் மண்டலம் முழுவதும் கலகலத்துப் போயிருக்கையில், மராட்டிரர் சுவை கண்ட பூனை உரியைத் தாவுவதே போல 1742-ஆம் வருஷம் அந்நாட்டின்மேல் படையெடுத்து வந்தனர். அவர்களைத் தலைமை வகித்து நடத்தி வந்த பீஷ்வா, மகாராஜ ஸாவினை வெட்டி வீழ்த்தினன் ; " அவனுடைய புதல்வன் பட்டத்துக்கு வருவதற்கு முன் எனக்கு நான்கு இலட்ச ரூபாய் எண்ணிவிட வேண்டும்," என்று பீஷ்வா கட்டளையிட்டான். அதன்படியே, ராஜ்ய உரிமையை இழக்கத் துணியாமல் மகாராஜ ஸாவின் குமாரன் அத்தொகையை அவனுக்குக் கொடுத்துவிட்டு

அரசியல் நடத்தத் தொடங்கினுன். மராட்டிரரை எதிர்த்துப் போராட அவனுல் முடியவில்லை.

ஆண்டுதோறும் ராஜ்ய வருவாய் குறைந்துகொண்டே வந்தது. அவன் அடிக்கடி மராட்டிரருக்குப் பரிதானம் கொடுத்து வந்தால், வருவாய் குறையாமற் போகுமோ? குறைந்த வருமானத்தைக் கொண்டு தேசப் பாதுகாப்புக் குரியவற்றைச் செய்வது முடியாத காரியமன்ருே? மேற் கூறியபடி பலர் நாட்டினின்றும் ஓடிவிட்டதனுல் கழனிகள் கரம்பாயின.

மராட்டிரருடைய துன்பம் பெருகியது. ரகோஜீ பான்ஸலே என்னும் மராட்டிர வீரன், கூர் மண்டலத்தைச் சேர்ந்த ஏழு பெரிய ஜில்லாக்களைத் தன் வசப்படுத்திக் கொண்டான். அவன் அடிக்கடி அந்நாட்டு விவகாரங்களில் தலையிட்டு வந்தான். அந்நாட்டின் தலை நகராகிய மண்டல நகரம் பொய், களவு, சூது, கொலை முதலிய தீச்செயலுக்கு இருப்பிடமாய் விளங்கியது.

கூர் மண்டலத்தையாண்ட கோண்டு (Gond) வமிசக் கடைசி மன்னவன் நரஹரி ஸா. அவன் அந்நாட்டில் அரசாட்சி செய்து வருகையில் மோராஜீ என்னும் மராட்டிர தளகர்த்தன் பணவேட்கையால் அந்நாட்டின்மேல் படை எடுத்து வந்தான். செல்வமும் சேனு பலமும் இல்லாதிருந்தும் நரஹரி ஸா அத்தண்டத் தலைவனை எதிர்த்துப் போராடினுன். இறுதியில் மோராஜீ வெற்றி பெற்ருன். அவன் தன் கையிற் சிக்கிய நரஹரியை இரக்கம் சிறிதுமின்றி வெட்டி வீழ்த்தினுன்.

கூர்மண்டலம் மகாராட்டிரத்தோடு சேர்ந்துவிட்டது. கோண்டு சாதியாரின் சுவாதீனத்துக்கு நிலைக்களனெனப் புகழ் பெற்று விளங்கிய இராணி துர்க்காவதியின் ஆட்சியின் கீழ் உயர் நிலையடைந்து, குறுநில மன்னர் பலருக்குப் புகலி

டமாயிருந்த கூர் மண்டலம் சுவாதீனம் இழந்து மராட்டிர ருக்கு அடங்கி ஒடுங்கிற்று.

கிறிஸ்தவாப்தம் 1818-ஆம் ஆண்டு மராட்டிர யுத்தம் முடிவெய்தியபோது, ஆங்கில தளகர்த்தர் மார்ஷல் (General Marshal) என்பவரை மராட்டிரர் சரணா கதியடைந்தனர். அப்போது மராட்டிரருக்கும் ஆங்கிலேயருக்கும் நடந்த உடன்படிக்கையின்படி மராட்டிரருடைய ஆளுகையில் இருந்துவந்த கூர்மண்டலம் ஆங்கிலேயர் வசம் ஒப்பிக்கப் பெற்றது.

தமிழ்த் தெய்வந் துணை.